# காவேரி


| தாரண<br>மலர் 3 | "சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்<br>செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | சித்திரை<br>இதழ் 9 |
|---|---|---|


# வருஷப் பிறப்பு

இன்று தாரண வருஷப் பிறப்பு. தமிழர் இல்லங்களிலெல்லாம் குதூகலம் நிறைந்திருக்கும். வருஷம் பூராவும் சுபிக்ஷமும் சுகமும் நிலவவேண்டுமென இறைவனை வேண்டுவார்கள்.

இவ்வருஷம் இத்தகைய பிரார்த்தனை இன்றியமையாதது. நம் நாட்டிற்குப் பெருத்த அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அஸ்ஸாம் எல்லைப் புறத்திற்குள் ஜப்பானியப் படைகள் புகுந்து அட்டகாசம் செய்து வருகின்றன. நேசதேசப் படைகள் அவர்கள் தாக்குதலைச் சமாளிப்பதாக அறிக்கைகள் வெளிவருகின்றன. ஆனால் ஜப்பானியப் படைகள் முன்னேறிக்கொண்டுதான் வருகின்றன.

இதன் விளைவாக அனேக கிராமங்கள் பாழடைந்து மக்கள் மடியவும், மற்றுமுள்ள வாஸிகள் தங்கள் நிலபுலன்களை விட்டுவிட்டு ஓடவும் நேரிட்டுவிட்டது. எதிரிப்படைகள் முன்னேற முன்னேற இக்கதை அதிகரித்துக் கொண்டே போகும்; மக்களின் அவதியும் அதிகரிக்கும்.

இப்படி வெளியே வரும் ஏழை மக்களைப் போஷித்து சம்ரக்ஷிக்கப் போதிய ஏற்பாடுகள் இந்தியா கவர்மெண்டார் செய்திருப்பதாகத் தெரியவில்லை. நாட்டில் இவ்விஷயங்கள் மிக்க கலக்கத்தை உண்டுபண்ணி வருகின்றன. இத்தருணத்தில் நமது தலைவர்கள் பதவியிலிருந்தால், எவ்வளவு நலமாயிருக்கும்! மக்களுக்கு எத்தகைய சகாயம் செய்வார்கள்!

ஜப்பானியர்கள் நோக்கம் தான் என்ன? இந்தியாவை ஆக்கிரமிக்க எண்ணியுள்ளார்களா? சைனாவுக்கு அஸ்ஸாம் மார்க்கமாகத் தளவாடங்கள் ஏற்றிச்செல்லும் மணிபூர் ரஸ்தாவை ஆக்கிரமித்து, நேசதேசப்படைகள் தங்களைத் துன்புறுத்தாதிருப்பதற்காகவே இத்தாக்குதல் எனச் சிலர் கருதுகின்றனர். இதோடு நிற்பார்கள் அந்தக் குள்ள அரக்கர்கள் என்று எண்ண இடமில்லை. இந்தியாவிலுள்ள மற்றப் பாகங்கள் மீதும் அவர்கள் ஆசை கொண்டால் கவலைக்கிடமான நிலைமை ஏற்படுவது திண்ணம்.

நமது நேச தேசப் படைகள் இத்தாக்குதலைக் காலக்கிரமத்தில் சமாளிப்பார்கள் என்று நமது தளகர்த்தர் ஸர் ஆகின்லெக் சமாதானம் கூறுகிறார். இதன் அர்த்தம் யுத்தம் இந்தியாவிலே இன்னும் வியாபிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது என்பது. ஜப்பானியர்களை இறுதியில் முறியடிப்பது திண்ணமானாலும் யுத்தம் இந்தியாவின் மற்றப் பாகங்களிலும் புகுமானால் எத்தகைய இன்னல்கள் மக்களுக்கு ஏற்படும் என்பதை ஊகித்தால் மனம் கலங்குகிறது.

யுத்தம் என்றால் இவை எல்லாம் சகஜம் தான். நிர்வாகத்திலிருக்கும் அரசாங்கம் இதையெல்லாம் எதிர்பார்த்து மக்களுக்கு வேண்டிய வசதி செய்துகொடுக்கவேண்டியதே. ஆனால் அன்னிய பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நம் கஷ்டங்களையெல்லாம் சரிவர உணர்ந்து தீர்த்துவைப்பார்கள் என்று எண்ணுவது அறியாமையாம். அவர்களால் முடியவும் முடியாது. நமது தலைவர்கள் பதவியிலிருந்தாலொழிய இந்நிலையைச் சமாளிக்க இயலாது.

இதை நன்குணர்ந்துதான் லக்னௌவில் கூடிய மஹாநாடு கூட்டுக் கட்சி மந்திரி சபைகளை அமைக்க வேண்டுமென்று வற்புறுத்திற்று.

யுத்தம் இந்தியாவிற்குள் வரவர இந்திய மக்களின் பரிபூரண ஒத்துழைப்புப் பிரிட்டிஷாருக்கு அத்யாவசியம். இன்று மக்களுக்குப் பிரிட்டிஷாரிடம் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கை தொலையவேண்டும். அதற்குப் பதிலாக அவர்கள்பால் ஓர் உத்ஸாகம் எழவேண்டும். வெற்றிக்கு இவை அத்தியாவசியம். இவற்றைப் பெற ஒரே வழிதான். தலைவர்களை விடுவித்துச் சட்ட சபைகளைக்கூட்டி மாகாண ஆட்சியைப் பொதுஜனப் பிரதிநிதிகளின் கையில் ஒப்படைக்க வேண்டும். இப்படிச் செய்வது வெற்றிக்கு அடிகோலியதாகும்.

புது வருஷத்திலாவது பிரிட்டிஷ் கவர்மெண்டார் இந்நிலைமையை உணர்ந்து சரிவர நடந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

# மறைந்த மஹான்

தமிழ் நாட்டிலுள்ள சைவ மடாலயங்கள் பண்டைக் காலத்தில் மதபரிபாலனம் செய்வதுடன் தமிழ்த் தொண்டாற்றுவதில் முன்னணியில் நின்று உதவிவந்தன. முக்கியமாகச்சென்ற நூற்றாண்டில் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய இவ்வாதீனங்கள் இத்துறையில் ஈடுபட்டுத் தமிழ்க் கலைக்கு பெருந் தூண்போல் உதவின. ஆனால் காலக்கிரமத்தில் பிறநாட்டு நாகரிகத்தின் தாக்குதலால் தமிழுக்கு ஆதரவு குறையவே இம்மடாலயங்களிலும் ஊக்கக் குறைவு காணப்பட்டது.

இந்நூற்றாண்டில் தமிழும் தமிழ்க்கலையும் புத்துயிர்பெற்று விளங்க ஆரம்பித்திருக்கின்றன. இதற்கு அடிகோலியாய் நின்று உதவியது திருப்பனந்தாளிலுள்ள ஸ்ரீ காசிமடம். அதன்நிர்வாகஸ்தர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசிஸ்வாமிநாத தம்பிரான் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முயற்சியும் அதன் நிமித்தம் அவர் அளித்த ஏராளமான நன்கொடைகளும் தமிழ்க் கலையின் புதுமலர்ச்சிக்கு முக்கியகாரணம் என்றால் அது மிகையாகாது. இதனோடு நில்லாது மடாலயங்கள் தங்கள் ஏராளமான பொருளை இவ்வகையில் செலவிடவேண்டும் என்பதையும் செய்கையில் எடுத்துக் காட்டினவர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தம்பிரான் அவர்கள்.

இத்தகைய மஹான் இன்று மறைந்துவிட்டார். ஆனால் அவரது புகழ் தமிழ்நாட்டில் என்றும் ஓங்கி நிற்கும். தம் கொடையினால் தமக்கு மேலுலகிலும் ஓர் ஸ்தானம் பெற்றுவிட்டார்.

அதுமட்டுமா? தமக்குப்பிறகு தாம் செய்த அரிய தொண்டினைத் தொடர்ச்சியாகவும் இன்னும் சிறப்பாகவும் செய்ய ஆற்றல் படைத்தவரும் ஒழுக்கமும் சீலமும் நிறைந்தவருமான ஓர் அறிவாளியைத்தேடிப் பிடித்துத் தம்ஸ்தானத்தில்அமர்த்திவிட்டார். இன்று இவர்தாம் காசி மடாதிபதியாக விளங்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் ஸ்வாமிகள்.

ஸ்ரீஸ்வாமிநாத தம்பிரானுக்குத் தாம் எவ்வகையிலும் சளைத்தவரல்லர்என்பதைச் செய்கையில் நிரூபித்துக் காட்டி வருவார் இவர் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

---

குறிப்பு :—சில அசந்தர்ப்பங்களினால் தொடர்ச்சியாக வெளிவரும் ஸ்ரீ டாக்டர் ராஜன் அவர்களின் "**மந்திரிசபை நினைவுகள்**" என்ற கட்டுரையை இவ்விதழில் பிரசுரிக்கமுடியவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.


**கூந்தல் வளர்ப்பு அதன் பாதுகாப்பு**

இவை இரண்டும் நமக்குப் புதிய கலையல்ல
இவை நமது புராதனக் கலைகளே




**ஜப்கோ ஹேர் குரோயர்**

புராதனக் கலையின் ஆராய்ச்சியும்
- நவீன ரசாயனமும் சேர்ந்தது -

மங்கையர் மகிழ்ந்து விரும்புவது
கூந்தலை அபரிமிதமாக வளர்ப்பது

# வாழ்த்து

நமது நண்பர்கள், வாசகர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் புது வருஷ வாழ்த்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

**காவேரி** தங்களுக்கு என்றும் இன்பமூட்டி உதவிவருமாறு இறைவன் அருள்புரிவாராக.

இங்ஙனம்,

**காவேரி நிர்வாகிகள்**

---


# இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. | 25,00,000 |
| வெளியிடப்பட்ட மூலதனம் | ரூ. | 21,25,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. | 18,75,000 |
| காப்பு (ரிசர்வ்) திரவியம் | ரூ. | 2,50000 |
| மொத்த வரவு சிலவுகள் | ரூ. | 2,25,00,000மேல் |

பிராஞ்சுகள்:

| | | | |
|---|---|---|---|
| அமதலவால்ஸா | கும்பகோணம் | மாயவரம் | திருநெல்வேலி |
| அனகாபள்ளி | மதருஸ் | பாலக்காடு | திருச்சிறுப்பள்ளி |
| சிதம்பரம் | மாம்பலம் | புதுக்கோட்டை | வேலூர் |
| காஞ்சீவரம் | மைலாப்பூர் | சீயாழி | விஜயபுரம் (திருவாரூர்) |
| ஈரோடு | திருவல்லிக்கேணி | தாட்பள்ளிக்கூடம் | விருதுநகர் |
| காரைக்குடி | மதுரை | தஞ்சாவூர் | விஜயநகரம் |
| | சாலூர் | பார்வதிபுரம் | |

நிர்வாக போர்டார்:

ஸ்ரீ டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, C. I. E. (சேர்மென்)
,, வி. வெங்கட்ராம அய்யர், M.A.,B.L.,
,, ஆர். எஸ். எ. சங்கர அய்யர்

ஸ்ரீ ஆர். விஸ்வநாத அய்யர், B.A.,B.L.,
,, கே. சிவஸ்வாமி அய்யர்
,, எஸ். என். என். சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.

# கதம்பம்

## கள்ளனும் குள்ளனும்—(நாடகம்)

### காட்சி 1

(போர்க்களம். ஸ்டாலின் கூடாரத்தில் சாய்வு நாற்காலியிலமர்ந்து புகைவிட்டுக் கொண்டிருக்கிறார். பிரிட்டிஷ், அமெரிக்கப் பத்திரிகை நிருபர்கள் பேட்டிகாணுகின்றார்கள்)

பிரிட்டிஷ் ப. நி.-(அசட்டுச் சிரிப்புடன்) தங்களுடைய வீர, தீர, சூர, பராக்கிரமத்தைப் பற்றியே எங்கள் சர்ச்சிலும், ரூஸ்வெல்டும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் இரண்டாவது போர்முனை ஏற்படுத்துவதைப் பற்றியும் பேசப்போகிறார்கள்.

ஸ்டா.-(மௌனம்)

அமெரிக்க ப. நி.-நம்முடைய மற்ற எதிரியாகிய குள்ளன் விஷயத்தில் தாங்கள் அசட்டை காட்டாமலிருந்தால் உலகில் பிரிட்டனும் அமெரிக்காவும் உங்கள் ஒத்துழைப்பின்பேரில் எதைத்தான் சாதிக்க முடியாது? உங்கள் புகழும் ஓங்கும்.

ஸ்டா.-(மௌனம்)

பி. ப. நி.-உண்மையில் இத்தாலிய போர்முனை உங்களுக்கு உதவி செய்யும் நிமித்தமே ஆரம்பிக்கப்பட்டது. அதனால் ஜர்மனியின் முழு ராக்ஷஸ பலமும் உங்கள் மேல் தாக்காமல் உதவியது என்பதை மறுக்கமாட்டீர்களென்று நம்புகிறோம்.

ஸ்டா.-(மௌனம்)

அ. ப. நி.-இதுவரை நாங்கள் செலவழித்துள்ள டாலர்கள், ஒன்றுடன் எவ்வளவு 'ஸைபர்கள்'சேர்ந்துள்ளதென்பதைத் தாங்கள் அறிவீர்களென்று நம்புகிறோம்.

ஸ்டா.-(ஸ்டாலினின் சுருட்டிலிருந்து பெரிய புகை கிளம்பி மறைகிறது.)

பி. ப. நி.-சமீபத்தில் ஜப்பான் இந்தியாவிலும் வாலையாட்ட ஆரம்பித்திருப்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஜர்மனியின் கூட்டாளிகளும் நம்முடைய பொது எதிரிகளென்பதைத் தாங்கள் உணர்வீர்களென்று நம்புகிறோம். உலகில் சமாதானம், சமத்துவம், சுதந்திரம் எல்லாம் ஓங்க ஜர்மனி, ஜப்பான் போன்ற தேசங்களின் அட்டகாசங்கள் அகலவேண்டும்,



ஸ்டா.-தாங்கள் சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லை எனக்கு? அதிருக்கட்டும், இந்திய சுதந்திரக் கிளர்ச்சி ஒடுங்கிவிட்டதா? ஒன்றும் தொல்லை கிடையாதே அங்கு? சைனாவுக்குக்கூட உதவியளிக்கத் தீர்மானித்துள்ளீர்கள் என்பதைக் கேட்டு அளவில்லா ஆனந்தம் கொண்டோம். கொஞ்சம் சூடான பானம் வரவழைக்கிறேன். ரொம்ப சிரமம்.

பி. அ. நி.-வேண்டாம், நாங்கள் சற்று வெளியில்போய் உலாவினால் சரியாய்ப் போய் விடும். மறுபடி எப்பொழுது திருவுள்ளமோ அப்பொழுது வருகிறோம்.

ஸ்டா.-தங்களிஷ்டம். (போகிறார்கள்.)


# GRIPE-VIT-D



REGD.

## கிரைப் - விட் - டி

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலி, மாந்தம், வயிற்றில் புளிப்பு, உப்பிசம், வாந்தி, வயிற்றுப்போக்கு, விக்கல் முதலிய கோளாறுகளை உடனே நிவர்த்தியாக்கும்.

*Apply to:-*
Proprietors, **S. R. Remedies,**
**Trichinopoly.**

காட்சி 2

(ஹோட்டல். பிருட்டிஷ் அமெரிக்க பத்திரிகைக்காரர்களின் வம்பளப்பு.)

அ. ப. நி.-இந்த ஸ்டாலின் பலே கள்ளன். கபடனோ என்றுகூட நினைக்கிறேன். உனக்கு என்ன பட்டது?

பி. ப. நி.-ஆசாமி அழுத்தமென்று தோன்றியது. எதற்கும் பிடிகொடாமல் மௌனம் சாதிக்கிறான். பிரிட்டிஷ் ராஜதந்திர முறைகள் ஒன்றும் அவனிடம் பலிக்கவில்லையே?

அ. ப. நி.-உங்கள் ராஜதந்திர முறைகள் பத்தாம் பசலியைச் சேர்ந்தவை. இந்தியர்கள் கூட ஏமாறவில்லையே?

பி. ப. ந.-சரி, சரி. நாம் வீணாகச் சம்பந்தமில்லாத விஷயத்தைப்பற்றிப் பேசுகிறோம். மேல் நாம் செய்யவேண்டியதென்ன?

அ. ப. நி.-ஜப்பான் விஷயத்தில் அவன் கொண்டுள்ள மனப்பான்மையை வெட்டொன்று துண்டிரண்டெனத் தெரிந்து கொண்டுவிடவேண்டும்.

பி. ப. நி.-பார்ப்போம். ஆமாம் நீங்கள் குத்தகை இரவல் மசோதபடி கொடுத்ததற்கெல்லாம் வட்டிக் கணக்கு போட்டுவருகிறீர்களாமே?

அ. ப. நி.-பின், தான தருமமென்று நினைத்துக்கொண்டீர்களோ. ஏமாந்தவன் யாரென்று வேறு இடத்தில் தேடுங்கள்.

பி. ப. நி.-அடாடா, வீணாக நாம் ஏன் சச்சரவு செய்துகொள்ளவேண்டும்? நாளை நடப்பதை யாரறிவார். பிரிட்டனும்! அமெரிக்காவுமே உலகில்புகழுடன்விளங்கப்போகின்றன.

அ. ப. நி.-தடையென்ன? (போகிறார்கள்.)

காட்சி 3

(ஸ்டாலின், மாலடோவ்.)

ஸ்டா.-மாலடோவ்! இந்தப் பிரிட்டிஷ், அமெரிக்க ஆசாமிகள் யார் வந்தாலும் சற்று உஷாராயிரு. வாயைக் கிண்டுவார்கள். மாயாவிகள்.

மால.-சொல்ல வேண்டுமா?

ஸ்டா.-ராஜதந்திரத்தில் பிரிட்டன் பழைய பெருச்சாளி. பாரேன். அதனால் ஒரு சாம்ராஜ்யத்தையே ஸ்தாபித்துவிட்டார்கள்.

மால.-இத்தாலியில் இறங்கியதை இரண்டாம் போர்முனையென ஜாலவித்தை காட்டினதை நினைத்தால் எனக்கு இன்னும் சிரிப்பு வருகிறது.

ஸ்டா.-அதனால்தான் தன்னைத்தானே ஏமாற்றிக்கொண்டார்கள். ஆழம் தெரியாமல் இறங்கினால் என்ன ஆகும்? தன்வினை தன்னைச் சுடுமென்பது பொய்யாகுமா? இப்பொழுது இரண்டாவது போர்முனை தேவையுள்ளவர்கள் நாமல்ல.

மால.-நம்மை எப்படியாவது ஜப்பானுடன் சண்டையில் மாட்டச் சதிசெய்யப்படுகிறது.

ஸ்டா.-நாம் என்ன முட்டாளா? சூழ்ச்சி நம்மிடமா பலிக்கும்?

மால.-ஜப்பானிய தூதர் இன்று காலை வந்தார். என்ன விஷயமென்றேன். ஏதோ கலியாண விஷயம், காதல் விஷயமென்று பூடகமாகப் பேசினார். ஒருவாறு புரிந்து கொண்டேன். அழைத்துவரச் சொல்லட்டுமா?

ஸ்டா.-ஆகட்டும், நான் எல்லாவற்றையும் தீர்மானித்துவிட்டேன்.

(ஜப்பானிய தூதர் வருகை)

மால.-வரவேண்டும்.

ஜ. தூ.—இவ்வுலகில் நம் இருவரையும் வெல்ல யாரால் முடியும்? மனமொத்த தம்பதிகளைப் பிரிக்க முயல்வது மதியீனம்!

ஸ்டா.—அது என்னய்யா தம்பதிகள்?

ஜ. தூ.—ஆசியாவில் நாங்களும், ஐரோப்பாவில் தாங்களும் புகழுடன் விளங்குகின்றோம். நம்முள் வேற்றுமைகள் உண்டாக்க நமது எதிரிகள் செய்ததெல்லாம் விழலுக்கிறைத்த நீர் போலாயிற்று! அக்னியிலிட்ட ஆகுதி போலாயிற்று! சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தது!

ஸ்டா.—என்ன கவிதா ரஸம் பலமாயிருக்கின்றதே! (சிரிப்பு)

ஜ. தூ.—காதல் மேலிட்டால் கவிதைகள் தாமே கிளம்புவது இயற்கைதானே! நமது நட்பு நீடித்திருக்கவேண்டும்,

ஸ்டா.—அதற்கு?

ஜ. தூ.—சம்பந்தம் செய்துகொண்டுவிடுவோம்.

ஸ்டா.—விவாகத்தைவிட ஸம்பந்தமே மேல், இஷ்டமில்லாவிட்டால் சுலபமாக ஸம்பந்தத்தை அறுத்து விடலாம். விவாகத்தில் சங்கடங்கள் பல உள.

ஜ. தூ.—எப்படியிருந்தாலென்ன. நமக்குள் ஒற்றுமை வேண்டும்.

ஸ்டா.-சரி, மாப்பிள்ளையாக எனக்குச் சம்மதம்—பெண்வீட்டாராகிய நீங்கள் என்ன வரதக்ஷிணை கொடுப்பீர்கள்?

ஜ. தூ.—வரதக்ஷணை யில்லாமலா கலியாணம்? உண்டு. காதலன் காதலி மனமொத்து வாழப் பெண்வீட்டார் தியாகம் செய்யத் துணிவதில் தவறென்ன?

ஸ்டா.—காதலாவது கத்திரிக்கையாவது? காலத்துக்கேற்ற மணம் தான் இது. இந்த மாப்பிள்ளை கிடைத்தால் கசக்குமோ? சரி. நாங்களும் தகுந்தபடி பதில் மரியாதை செய்வோம்.

ஜ. தூ.—விஷயத்தை ரகசியமாக முடிக்க வேண்டும். தங்கள் நேச தேசத்தவர்களைத் தாங்கள் கலக்கமாட்டீர்களென்பது திண்ணம்.

ஸ்டா.—எங்களுக்கு உலகத்தில் நண்பர்களே கிடையாது. விரோதிகள் அனந்தம். நாங்கள் யாருடைய தயவையும் நாடவில்லை. யாரையும் நம்புவதில்லை.

ஜ. தூ.—பெண் வீட்டாராகிய எங்களைக் கூடவா?

ஸ்டா.—நயவஞ்சக வார்த்தைகள் பேசமாட்டேன்! இந்தக் காலக்தில் தாலி கட்டிய பெண்டாட்டியையும் நம்புவதற்கில்லை!

ஜ. தூ.—எல்லாம் அவரவர்கள் நடந்துகொள்வதைப் பொறுத்துள்ளது.

ஸ்டா.—உண்மை. முற்றிலும் உண்மை, அதிருக்கட்டும், மாப்பிள்ளைக்குத் தாங்கள் கொடுக்கும் சீர் வகைகள் என்ன?

ஜ. தூ.—எங்கள் தீவுகளுக்குப் பக்கத்திலுள்ள ஸாகாலின் தீவு, அதிலுள்ள எண்ணெய்க் கிணறுகள். நிலக்கரிச் சுரங்கங்கள் முதலியன. தாங்கள் செய்யும் பதில் சீர்?

ஸ்டா.—பேஷ்! என் காதலிக்கு ருஷ்யக் கடல் பிரதேசங்களில் மீன் பிடிக்கும் உரிமையை அளித்துள்ளேன்.

ஜ. தூ.—ரொம்ப சரி. மாலை மாற்றிக்கொள்வோம்! (மாலை ஒன்றை ஸ்டாலின் கழுத்தில் ஜப்பானிய தூதர் போடுகிறார்).

ஸ்டா.—அடாடா. ஓய் நீர் பெண்ணல்லவே!

ஜ. தூ.—(சிரித்துக்கொண்டு) நூதன கலியாணமல்லவா! எல்லாம் நூதனமாயிருக்கட்டும். சீர்திருத்த மணவகையில் இது ஒன்று. அந்த மாலையை என் கழுத்தில் போடுங்கள்!

(ஸ்டாலின் மாலையை ஜப்பானிய தூதர் கழுத்தில் மாட்டுகிறார்)

ஸ்டா.—பிரியே! நமது காதல் நீடித்திருக்க வேண்டும். என் மனம் நோக நடக்கமாட்டாயே?


Use Always **JUPITER** FACE POWDER

TOILET & MEDICINAL

**Highly Perfumed :: Fragrant & Refreshing**

Our Special Qualities are

*Weisse Rose*

*&*

*Jupiter Special*

எல்லா இடங்களுக்கும்
ஏஜண்டுகள்
தேவை?




Regd. Label

ஜுபிடர் பேஸ்பவுடரை உபயோகியுங்கள்

(விஞ்ஞான முறையில் தயார் செய்யப்பட்டுள்ளது)

THE JUPITER TRADING CO.

20, Kutchukatti Street :: KUMBAKONAM, S. I.

ஜ. தூ.—மாட்டேன், மாட்டேன், மாட்டேன்! தாங்களும் என் மனம் நோக நடக்க மாட்டீர்களே?

ஸ்டா.—காதலிக்குக் காதலன் துரோகம் செய்யத் துணிவானா?

(இருவரும் கைகோத்து ஆடிப் பாடுகிறார்கள்)

பாட்டு

புஷ்பராகம்] [பேதாளம்

**ஜ. தூ.**-அநுமைக் காதலா அணைந்திட வாராய்

**ஸ்டா.**-தள்ளக்கிளியே யுனை உள்ளம் கொண்டேனே

**ஜ. தூ.**-பூமியில் மிக்க புகழுபெற்றோம் நாமே

**ஸ்டா.**-ஜகமெலாம் போற்றும் ஜகன்மோகினியே.

**இருவரும்**

பாரினில் நல்லஜோடி பிரியோமிநவருநம்கூடி

மங்களம்

## படியளக்கும் பெரியசாமி!

கடவுள் அவனவனுக்குத் தகுந்தபடி படியளக்கிறார் என்று பாமர மக்கள் கூறுவார்கள். அந்தக் கடவுளை யாரும் கண்டதில்லை. கோயில்களில் குடிகொண்டு வாழும் கடவுள் மக்கள் படியளப்பதை நம்பியே உயிர்வாழ்கின்றார் என்பதுமட்டும் மறுக்கமுடியாத உண்மை! மக்களுக்கும், அந்தக் கடவுளுக்கும் படியளக்க பெரியசாமி ஒன்று இந்த யுத்த காலத்தில் தோன்றியுள்ளது. அதுதான் நமது பொறுப்பற்ற சர்க்கார்! கடவுள், மனிதன் என்ற வேற்றுமையின்றி, தகுந்தபடி படியளக்கும் பெரியசாமிக்கு மூளையில்லாக் குறையைத் தவிரப் பாக்கி யாதொரு குறைகளுமில்லை.

'உணவுப் பங்கீடு திட்டம்' (Rationing) இந்த யுத்தகாலத்தில் சிற்சில இடங்களில், உணவுப் பொருள்கள் குறைவாக உள்ள இடங்களில், பஞ்சம் தாண்டவமாடுமிடங்களில்வேண்டியது அவசியம்தான். தஞ்சை ஜில்லாபோன்ற உணவுப்பொருள்கள் மிகுதியாக உள்ள இடங்களில் அத்தகைய திட்டம் வேண்டியதில்லை. வேண்டாத இடங்களில் திட்டத்தைப் புகுத்தி, வேண்டிய இடங்களில் திட்டத்தைப் புகுத்தாமலிருப்பது சர்க்காரின் பொறுப்பற்ற தன்மைக்குச் சிறந்த சான்றாகும். திட்டம் புகுத்தப்பட்டுள்ள இடங்களை மாகாணவாரியாகக் கொடுத்துள்ளதைக் கவனியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பம்பாய் மாகாணம் | | ... 6 | இடங்கள் |
| சென்னை | ,, | ...38 | ,, |
| வங்காளம் | ,, | ... 8 | ,, |
| மத்திய மாகாணம் | | ... 2 | ,, |
| சிந்து | ,, | ... 3 | ,, |
| ஒரிஸா | ,, | ... 7 | ,, |
| பீஹார் | ,, | ... 4 | ,, |

பஞ்சத்தால் மக்கள் மடியும் வங்காளத்தில் 8 இடங்களில்மட்டும் ரேஷன் திட்டம், சென்னை மாகாணத்தில் 38 இடங்களில்! சென்னை மாகாண வாசிகளையும் பட்டினி போட்டு வதைக்கவா இந்தத் திட்டம் என்று பாமர மக்கள் கேட்டால் நம்மால் திருப்திகரமான பதில் சொல்லமுடியாது. பல யுத்த ரகசியங்களில் அதுவும் ஒன்றாக இருக்கலாமென்றே கூறலாம்.

சென்னை மாகாண ரேஷன் திட்டவிஷயமாய்ப் பெரியசாமியாகிய சர்க்காருக்குப்பொதுவாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம்.

சமீப இடங்களில் கிடைக்கும் அரிசியைத் தூர இடங்களுக்கு அனுப்பியும், தூர இடங்களில் கிடைக்கும் அரிசியைச் சமீப இடங்களுக்கு வரவழைத்தும் உள்ளதாகச் சொல்லும் ஏற்பாட்டை மறத்தல் நலம்.

இந்தமாதிரி திட்டங்கள் நாட்டிற்கும் மக்களுக்கும் புதியவையாகையாலும், பழக்கமில்லாததாலும் திட்டத்தின் விதிகளைக் கடுமையாகவும், கண்டிப்பாகவும் உபயோகிக்காமல் சற்று தாராள நோக்கத்துடன் உபயோகிக்கச் செய்தல்வேண்டும்.

'ரேஷன்' என்றவுடன் திருட்டுத்தன அதிக விலை விற்பனை (Black market) நிகழ்வது சகஜம். அது விஷயத்தில் பெரியசாமி கவனம் செலுத்தவேண்டும்.

மக்களின் மனுக்கள் சர்க்கார் ஆபீசுகளில் வழக்கமாயுள்ள தாமதத்திற்குட்படாமல்




டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின்

டானிக்

எளிய முறையிலும், பரந்த நோக்கத்துடன் உடனுக்குடனும் பைசல் செய்யப்படவேண்டும். சில்லரை அதிகாரிகளின் சேஷ்டைகளும், பெரிய அதிகாரிகளின் அலக்ஷிய புத்தியும் இல்லாமலிருக்கவேண்டும்.

இப்படிப்பட்ட நெருக்கடியான சமயத்தில் மக்களின் தலைவர்கள் பதவியிலில்லையேயென மக்கள் நினைக்கிறார்கள். என்ன செய்வது? மற்ற விஷயங்களில் பொறுப்பற்று நடக்கும் பெரியசாமி மக்களின் உணவு விஷயத்திலாவது கண்திறந்து நடக்க அவனை வேண்டுவோம். பெரியசாமிக்கு ஜே!

## லக்னௌ மஹாநாடு

மாகாணங்களில் சட்ட சபைகளை உயிர்ப்பித்துக் கூட்டு மந்திரி சபைகள் ஸ்தாபிக்க வேண்டுமெனவும் தற்போதுள்ள கவர்னர்—அட்வைசர் மாகாண ஆட்சி உடனே தொலைய வேண்டுமெனவும் லக்னௌவில் ஸர். டேஜ் பகதூர் சாப்ரூவின் தலைமையில் கூடிய மஹாநாடு ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதை நாம் முழுமனதுடன் ஆமோதிக்கிறோம்.

கோடிக் கணக்கான மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிமுதல்செய்து சட்டசபைகள் நாலரை வருடங்களாக மூடப்பட்டுக்கிடக்கின்றன. இன்று கக்ஷி இல்லாத் தலைவர்கள் மஹாநாட்டில் கூடிய அனைவரும் ஏகோபித்து, இந்த அட்வைசர் ஆட்சி ஒழியவேண்டும் என்று தீர்மானித்திருப்பது பிரிட்டிஷாரிடம் கொஞ்சநஞ்சமிருந்த பற்றுதலும் அறவே அற்றுவிட்டது என்பதைத் தெளிவுற எடுத்துக் காட்டுகிறது.

மக்களின் வயிற்றெரிச்சலை அவ்வளவு கொட்டிக்கொண்டுவிட்டார்கள். சாதாரண உரிமைகள்கூட இப்பொழுது நமக்கில்லை. எப்பொழுது பார்த்தாலும் பணப் பித்துப் பிடித்து அலைகிறது அரசாங்கம். யுத்தம் என்று சொல்லிக்கொண்டு அதிக வரி, யுத்த சகாயத்திற்காக எப்பொழுது பார்த்தாலும் வசூல், எத்துறையிலும் கட்டுப்பாடு. ஆனால் மக்களின் நன்மதிப்பைப் பெறுதற்கான முயற்சியோ, அவர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திப்பதோ கிடையாது. "கொக்குக்கு ஒரே மதி" என்பதுபோல 'பணம்; பணம்' என்று அலைகிறார்கள் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர். போதாக்குறைக்கு பங்கிடு வேறு. வேறு என்ன வினை வேண்டும் மக்களின் அவதிக்கு!

இந்த நெருக்கடியான காலத்தில் எல்லாக் கட்சிகளும் ஒன்றுகூடி மாகாண ஆட்சியைக் கைப்பற்றவேண்டுமென்று வற்புறுத்துகிறது லக்னௌவில் கூடிய மஹாநாடு.

ஜப்பானிய அரக்கன் வேறு கரடிவிட்டு ஓட்டுகிறான். அஸ்ஸாமிற்குள் புகுந்துவிட்டான். இதுகாறும் ஓயாமல் தன் வீரியத்தைப் பற்றிக் கர்ஜித்துக்கொண்டிருந்த பிரிட்டிஷ் சிங்கம் இன்று கொஞ்சம் விழிக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். இனி மக்களின் உரிமைகள் எல்லாம் துவஸம்தான். யுத்தத்தின் பெயரால் எதுவும் கவனிக்கப்படாது. இத்தருணத்தில் நம் தலைவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு மாகாணங்களின் ஆட்சிபுரிந்தால்தான் இந்தியர்களுக்கு விமோசனம் ஏற்படும்; பிரிட்டிஷாரும் எதிரிகளின் தாக்குதலைச் சமாளிக்கமுடியும். அப்படிச் செய்யவிடாது தாங்களே ஆட்சிபுரிய ஆசைப்பட்டால், எல்லாம் நெருக்கடியான நிலையிற் சிக்கி அல்லற்படவேண்டியதே.






பிரிட்டிஷ் பொதுஜன அபிப்பிராயம் வரவர இந்தியர்கள்பால் இணங்கி வருகிறது என்று நாம் பத்திரிகைகளில் காண்கிறோம். அப்படியானால் முதலில் இந்தக் கவர்னர் அட்வைசர் ஆட்சி முறையை ரத்து செய்யப் பிரிட்டிஷ் கவர்மெண்டார் முற்படுவார்களா? தலைவர்களையும் விடுவிப்பார்களா? இவற்றைத்தான் லக்னௌ மஹாநாடு கேட்டிருக்கிறது நாமும் உடனே இவற்றைச் செய்யும்படி வற்புறுத்தவேண்டும்.

# Times have changed !



## TIME-KEEPERS

*in Shakespeare's Day*



**காலம் மாறிவிட்டது !**

ஷேக்ஸ்பியர் காலத்து
கடியாரங்களும் தற்காலத்து
கடியாரங்களும்

*& present day*



எக்ஸ்ட்ரா "F"

18 காரட் முழு தங்கம், கனமான கேஸ் ரூ. 280
ரெகுலர் அராபிக் அல்லது நியூ ஸ்டைல் டயல்
மேற்படி விலை.



எக்ஸ்ட்ரா "H"

18 காரட் முழு தங்கம், கனமான கேஸ் ரூ. 345

வெஸ்ட் எண்ட் வாட்சு கோ.

பம்பாய் — கல்கத்தா.

ஷேக்ஸ்பியர் காலத்தில் ஸ்குரு கிடையாது. கடிகாரத்தின் ஓட்டம், ஊசிகள் மற்றும் ஆணிகளுடன் பிணைக்கப்பட்டிருந்தது. கியர் கட்டிங்கு விகாரமாய் கையினால் செய்யப் பட்டிருந்தது. பாலன்ஸ் ஸ்பிரிங்கிற்குப் பதிலாக தடித்த ரோமம் உபயோகிக்கப் பெற்றது. இன்று கடியாரங்கள், ஆராய்ச்சியாளர்களின் 400 வருஷத்திய விவேகம், அனுபவம் மற்றும் திறமையை உட்கொண்டிருக்கிறது. வெஸ்ட் எண்ட் கடியாரங்கள் சென்ற காலத்திலும், நிகழ் காலத்திலுமுள்ள எல்லா, நல்ல அம்சங்களையும் ஒருங்கே பெற்றிருக்கின்றன. கேட்பவர்களுக்கு கேட்லாக் இனாம்.

காலதாமதமாக வருவதால் விளம்பரப் படுத்தப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்வது சாத்தியமல்ல. ஆயினும் ஸ்டாக்கிற்கு ஏற்றவாறு ஆர்டர்கள் பூர்த்தி செய்யப்படும்

# West End Watch Co.

**Bombay** — **Calcutta**

# அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

*"ராமய்யா"*

-:o:-

நேயர்கள் இந்த மலரைக் கையில் ஏந்தும் போது தாரண வருஷம் உதித்திருக்கும். புதிய வருஷத்தில் நமக்கெல்லோருக்கும் பூரணமான சந்துஷ்டி ஏற்படவேண்டும் என்று அம்மாஞ்சியும் நானும் பிரார்த்திக்கிறோம். யுத்தம் சமாப்தியாகவேண்டும்; பஞ்சம் தொலையவேண்டும்; பணப்பெருக்குக் குறையவேண்டும்; கல்வியும் கலையும் பெருக வேண்டும் எனவே நாங்கள் கோருகின்றோம். இனி ஈசன் அருள் எப்படியோ? வருஷப் பிறப்புக் கொண்டாட்டத்துக்காக ரேடியோ அதிகாரிகள் முப்பது நிமிஷங்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். இதைப்பற்றிச் சொல்லிப் பயனில்லை. செவிடன் காதில் சங்கு ஊதினால் பயனுண்டா? சென்ற வருஷம் இதைக் குறித்தே எழுதினேன்-இப்பொழுதும் எழுத வேண்டிவருகிறது. இந்தியன் லிஸனர் என்கிற பத்திரிகையை யெடுத்துப்பாருங்கள். ஏப்ரல் 13ஆம் தேதி மதராஸ் ரேடியோ நிலையத்தில் இரவு எட்டேகால் மணிக்குக் குறிப்பிட்ட நிகழ்ச்சி யென்ன? "த்ராண வெரைடி ப்ரோக்ராம்" என்று பதிந்திருக்கிறது. "த்ராண" என்றால் என்ன என்று அம்மாஞ்சியைக் கேட்டேன். அதற்கு அவன் சொன்னான் "திருநெல்வேலி யென்பதை டின்னவல்லியாக்கி, திருச்சிராப்பள்ளியை ட்ரிச்சினாப்பள்ளியாக்கி, தரங்கம்பாடியை ட்ராங்குபார் ஆக்கின வெள்ளைக்காரன் தாரண என்கிற வருஷத்தின் பெயரை "ட்ராண" என்று ஆக்கிவிட்டான்போலிருக்கிறது. வானொலி பத்திரிகையில் "தாரண— கதம்ப நிகழ்ச்சி" என்று மொழி பெயர்த்துக் குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே அதுதான் வருஷப்பிறப்புக் கொண்டாட்டம் போலிருக்கிறது. வருஷப் பிறப்புக் கொண்டாட்டத்தை ஒரு கதம்ப நிகழ்ச்சியாக்கி ஒலிபரப்பிடும் ஆஸ்திக ஒழுக்


## லக்ஷ்மி இன்ஷூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

[ஹெட் ஆபீஸ்: லாகூர்]

**நம்பிக்கையூட்டும் புள்ளி விவரங்கள்**

எங்கள் வியாபாரத்தை விரிவுபடுத்தும் திட்டசம்பந்தமான விசாரணைகள் வரவேற்கப்படும்.

**1943-ஆம் புதிய பாலிஸிகள் 2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்**

**முன் வருஷத்தைவிட கிட்டதட்ட (1 கோடி ரூபாய் அதிகம்)**

★

| | | |
|---|---|---|
| அமுலிலுள்ள பாலிஸிகள் | $10\frac{1}{4}$ | கோடிக்குமேல் |
| மொத்த ஆஸ்தி | $2\frac{1}{2}$ | " |
| ஆயுள் நிதி | $2\frac{1}{3}$ | " |

விவரங்களுக்கு எழுதவும்:-

பிராஞ்ச் மானேஜர்

**4/105, அரமனைக்காரத்தெரு,**

**ஜி. டி., மதராஸ்.**

இந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்

சென்னைக் கிளை ஆபீஸின் விலாஸ மாற்றத்தைக் கவனியுங்கள்

*C. R. சேஷன், M. A.,*

பிராஞ்ச் மானேஜர், மதராஸ்.

கத்தைத் தமிழரே கொண்டாடுவார்கள்! தலை கீழாக நடந்திடும் தமிழர்களுக்கு இதுவும் ஒரு கோலம்தான்.

ஆனால் காலத்துக்குத் தகுந்த கோலம் இப்படித்தானிருக்கும். ஆஸ்திகத் தன்மையில் முக்கியமான ஒழுக்கம் என்னவென்றால் சுபமான சம்பவங்களை ஹாஸ்யமாகக் கையாடக் கூடாது என்பதும் தெய்வீக விதிகளைப் பரிகசிக்கக்கூடாது என்பதும் அவதார புருஷர்களின் சரித்திரங்களைப் படிக்கும்போது, பிரசுரிக்கும்போது, கேட்கும்போது வினயத்துடனும் ஊக்கத்துடனும் இருக்கவேண்டும் என்பதுமே! ஆனால் இந்த ஒழுக்கம் அனுஷ்டானத்தில் இருக்கிறதா? அவதார புருஷராகிய நந்தனாரின் சரித்திரத்தை நாடகத்திலும் காலக்ஷேபத்திலும் பார்த்துக் கேட்டு ஆநந்தித்தனர் நம் பெரியோர்; இனி நமது குழந்தைகள் "கிந்தனார் சரித்திரம்" என்ற காலக்ஷேபத்தை ஒரு ரூபாய்க்குப் பத்து ரூபாயாகப் பணம் கொடுத்துக் கேட்கப்போகிறார்கள். நந்தனார் சரித்திரத்தைக் கேட்பவர் அரிது; கிந்தனார் சரித்திரத்தைக் கேட்டு ஆனந்திப்பவர் பல்லாயிரம்பேர். இவ்விதமான ஹாஸ்யத்துக்குப் பெரிய கௌரவம் ஏற்பட்டு விடவே வருஷப்பிறப்புத் தினத்தில் திருச்சி ரேடியோ நிலயத்தில் "கிலகண்டர்" என்ற ஒரு ஹாஸ்ய நாடகம், ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் டீ. ஏ. மதுரம் கோஷ்டியாரால் நடைபெறும் என்று அறிகிறோம். நந்தனாருக்குப் போட்டி கிந்தனார், நீலகண்டருக்குப் போட்டி கிலகண்டர்! ஆஹா! தமிழருடைய ஹாஸ்ய சக்திக்கு இன்னும் அத்தாக்ஷி வேண்டுமா!

வெள்ளைக்காரருக்கும் நமக்கும் ஒரு பெரிய வித்தியாசம் இருந்தது. நாம் குழந்தைகளுக்கு நாமகரணம் செய்வதில் புத்திசாலித்தனமாகத் தெய்வீகப் பெயர்களாக இட்டுவந்தோம். ராமன், சீதை, லக்ஷ்மணன், நாராயணன், கோவிந்தன், மாதவன் கிருஷ்ணன், ருக்மணி, லக்ஷ்மி, சரஸ்வதி இம்மாதிரி பெயர்களை வழங்குகிறோம். வெள்ளையர்கள், கல் (ஸ்டோன்), முள் (தார்ன்) கந்தல் துணி (ராக்) துடப்பம் (ப்ரூம்) குஷ்டரோகி (லெப்பர்) என்றெல்லாம் நாமகரணம் செய்வார்கள். ஏன் அப்படிச் செய்கிறீர்கள் என்றால் "பெயரில் என்ன இருக்கிறது" என்பார்கள்! நாமோ அத்தகைய சிறிய விஷயங்களிலும் நாகரிகம் பாராட்டி ஒழுக்கத்தை வழுவாது நடந்துவந்தோம். இனி நந்தனார் கிந்தனார் ஆவார்; நீலகண்டர் கிலகண்டர் ஆவார். அப்புறம் ராமாயணம் "காமாயணம்" ஆகும், மகாத்மா காந்தி மகாத்மா பூந்தி ஆவார், நமது ஹாஸ்ய சக்தி விசுவரூபம் எடுத்துவிடும், பிறகு நாமெல்லோரும் பலி


பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :— 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :— 15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு

சக்ரவர்த்தியாகிவிடுவோம். மஹாவிஷ்ணு 'ஹாஸ்யம்' என்ற அவதாரமெடுத்து நம்முடைய தலைகள்மேல் கால்களைவைத்து ஒரே அழுத்தாக அழுத்திப் பாதாள உலகத்துக்கு அனுப்பிவிடுவார். அம்மாஞ்சி சொல்கிறான் "ஹாஸ்யம் என்பது வண்டைத்தனமான வழியை அனுசரித்தால் நமதுகலா அபிவிருத்திக்கு க்ஷீணம் ஏற்படுவதல்லாது நமது நாகரிகத்துக்கும் ஹானி உண்டாகும்"—தமிழ் நாட்டின் கௌரவத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அனைவரும் இந்த விஷயத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

ஃ ஃ ஃ

ஏப்ரல் மாதம் 9ம் தேதி "ஹிந்து" பத்திரிகையில் ஆறுவது பக்கத்தில் ஸங்கீத உஸ்தாத் டைகர் பியாஸ்கான் என்பவருடைய அபிப்பிராயங்களைக் குறித்து எழுதியிருப்பதை நேயர்கள் அனைவரும் படிக்கவேண்டும். அவைகளில் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் எட்டு.

(1) சுத்த ஸங்கீதம் இப்பொழுது க்ஷீண தசையிலிருக்கிறது. முன் காலத்திலிருந்த ஸங்கீதவித்வான்களைப்போல் தற்காலத்தில் ஒருவருமில்லை. அவர்கள் பகவானுடைய அனுக்கிரகத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள். இனி தெய்விக ஸ்ருஷ்டியாலல்லாது வேறுவிதமாக வித்வான்கள் உதிக்கமாட்டார்கள். (2) குருசிஷ்ய பரம்பரையிலுள்ள வித்வான்களே சுத்த ஸங்கீதத்தை அனுஷ்டிப்பார்கள். மற்றவர்களுக்கு அந்த அனுக்கிரகம் கிடைக்காது. (3) புத்தகத்திலிருந்து பயிலும் ஸங்கீதம் துப்பற்றது. (4) இப்பொழுது உள்ள புதிய இயக்கங்களால் ஸங்கீத அபிமானிகள் அதிகமாகப் பெருகலாமே ஒழிய நிஜஸங்கீதம் பெருகாது. (5) ஆத்மார்த்தமாக ஸங்கீதத்தில் ஈடுபட்ட சிஷ்யனுக்குத் தகுந்த குரு கிடைப்பது அரிது அன்று. சிஷ்யன் பூரணமான ஊக்கத்துடன் இருந்தால் குரு அவனுக்கு ஸங்கீதத்தை ஊட்டித்தான் தீருவான். (6) ரேடியோ ஸங்கீதம் பெருகிக்கொண்டு தானிருக்கிறது. ஆனால் அது ஜீவனற்றது. (7)ஸங்கீதத்தை நவீன வழக்கங்களில் மாற்ற முடியாது நவீனம் என்பது தலை கீழாகவும் கால் மேலாகவும் இருந்தால் அத்தகைய நவீனம் ஸங்கீதத்துக்கு சத்துரு. சூரியன் மேற்குத் திசையில் உதிக்கமாட்டான்; அது போலவே பூபாள ராகம் சாயந்திரத்தில் ரக்தி காட்டாது. (8) ஸங்கீதத்துக்கு எல்லை கிடையாது. மனோதர்ம ஸங்கீதத்துக்குக் கால அளவுகூடாது.

இந்தமாதிரி ஆணி அடித்தாற்போல் பேசும் வித்வான்களுக்கு "டைகர்" என்று பெயர் வைத்தது மிகவும் பொருத்தம்தான். புலிக்குள்ள தைரியமும் வீரமும் இவருடைய அபிப்பிராயங்களில் பரிபூரணமாக இருப்பதாக நன்கறிகிறோம். இந்தமாதிரி வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசவும் சமர்த்தரான பியாஸ்கான் போன்ற வித்வான்கள் நம் தமிழ் நாட்டில் இரண்டொருவர்கள் இருந்தால் நமக்கு எவ்வளவு பெருமையாயிருக்கும்! நடுக்கச்சேரியில் சீட்டு எழுதியனுப்பி, பாபா பாட்டு, குயில்பாட்டு, எப்போ வருவாரோ பாட்டு,எங்கே போய்விட்டாரோ பாட்டு எல்லாம்கூட பாடுவதற்குத் தயாராயிருக்கும் வித்வான்களும் முதல் பாட்டே மங்களம்பாடிவிட்டு,பிறகுகீர்த்தனைகள் பாடுவதற்குத் தயாராயிருக்கும் வித்வான்களும் கர்னாடக ஸங்கீதத்துக்குத் தொண்டு செய்வதாகநாம் கருதுகிறோமே! தேசிய ஸங்கீதத்துக்குப் புலிகளும் சிங்கங்களும் ஏராளமாய் இருக்க நமக்குள்ள துரதிருஷ்டம் சுண்டெலிகளைவைத்துக்கொண்டு நாம் பாடுபடவேண்டியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் பட்டங்கள், மாலைகள், தோத்திரப் பாடல்கள், புகைப்படங்கள் எல்லாம் உண்டு. ஒன்றுக்காவது ஐந்து ரூபாய்க்கு குறைந்து டிக்கட் இல்லை. குரு யார்? அநாமதேயம்! எவ்வளவு பாடம்? சுமார் இருநூறு உருப்படி—தீக்ஷிதர் கிருதி எத்தனை? ஒன்றே அரைக்கால்! தியாகய்யர் கிருதி எத்தனை? இரண்டேகால்! சாமா சாஸ்திரியாருடையதோ? காலேயரைக்கால்! பாக்கி யெல்லாம்? யாராரோ பெரியவாளுடையது! இதோ சொல்கிறேனே. அநாமதேயம் வாளுடைய உருப்படி சுமார் நாற்பது, அஸந்தர்ப்பம்வாளுடைய உருப்படி சுமார் முப்பது, அனர்த்தம்வாளுடைய பாடல்கள் பத்து, இன்னும் சில்லரை எத்தனையோ! இவைகளை யெல்லாம் வைத்துக்கொண்டு கச்சேரி, கான்ஸர்ட் என்றெல்லாம் பாடுபடுத்துகின்றார்கள் — ஸங்கீதத்துக்கு இப்பொழுது அபிமானம், ஜாஸ்தி, திசையோ சனிதிசை — மூன்றாவது சனிதிசையோ என்னமோ என்கிறான் அம்மாஞ்சி!

தேசிய "டைகர்" பியாஸ்கான் பேசின பேச்சு அப்படியிருக்க, கர்னாடக "டைகர்" ஸ்ரீமான் வாதாசாரியார் 1941-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் சிதம்பரத்தில் பேசின பேச்சுக்களை இப்பொழுதும் ஞாபகம்செய்துகொண்டால் வயிற்றில் மிகவும் சங்கடம் உண்டாகிறது. அவர் என்ன சொன்னார் ஞாபகமிருக்கிறதா? "ஸ்ரீ தியாகய்யர், தீக்ஷிதர், சாமா சாஸ்திரியார் இவர்களும், இவர்களுக்குப் பிற்காலத்தில் உதித்த ஸாஹித்ய கர்த்தாக்களும் தெலுங்கு முதலிய பாஷையில் கீர்த்தனைகள் இயற்றியதற்குக் காரணம்

என்ன? அவர்களை ஆதரித்த பிரபுக்கள் அவர்களுக்குச்செய்த உபகாரத்துக்குச் சாந்தியாகவே!"—அதாவது ஸ்ரீ ராமன், பங்காரு காமாக்ஷி அம்பாள், சுப்ரமண்ய ஸ்வாமி, மூவரும் மாதம்தோறும் ரிஸர்வ்பாங்கி செக்குகளாகவே தியாகய்யர், சாமா சாஸ்திரியார், தீக்ஷதர் இவர்களுக்கு அனுப்பிக்கொடுத்துக் கீர்த்தனைகளைச் செய்யச் சொன்னார்களாம்! ஏனென்றால் ஸ்ரீ ராமரும், பங்காரு காமாக்ஷியம்பாளும் தெலுங்கு தேசத்தினர்; சுப்பிரமணிய ஸ்வாமி ஸம்ஸ்கிருதத்திலே மாத்திரம் ஈடுபட்டவர்!

நம்முடைய "டைகர்" வரதாசாரியாருடைய வசனங்களை அம்மாஞ்சி எப்பொழுதும் மறக்கமாட்டான். ஏனென்றால் அவருடைய ஸங்கீதம் எவ்வளவு ஸந்தர்ப்பப் பொருத்தமாகவும் குணதோஷமில்லாமலும் இருக்கிறதோ அவ்வளவுக்கும் விரோதமாயிருந்தன அவருடைய பிரஸங்கங்கள். ஆதலால்தான் அம்மாஞ்சி எப்பொழுதும் சொல்லுவான், சங்கீதத்தில் ஈடுபட்டவர்கள் பேச்சைக் குறைத்துக்கொள்ளவேண்டும்—பேச்சு அதிகரித்தால் பேத்தல் ஜாஸ்தியாய்விடும்—பாடுபவர்கள் ஆத்மார்த்தமாகப் பாடிவிட்டு ஸ்வானுபவத்தில் ஆநந்திக்கவேண்டும். கேட்பவர்கள் கேட்டுக்களித்த ஆநந்தத்தில் பேசாமலும் பேத்தாமலும் இருப்பதுதான் முறை—நிஜமான சந்தோஷத்தை முகக்குறியால் காட்டத் தெரியாதவனன்றோ வளவளவென்று பேசுவான்!

சமீபமாக ஒரு ஸங்கீதக் கச்சேரிக்கு நானும் அம்மாஞ்சியும் சென்றோம்—கச்சேரி ஒருவாறுமுடிந்தது. இரண்டொரு துக்கடாக்களுக்குப் பத்து நிமிஷம் அவகாசமிருந்தது. அப்பொழுது சபைக்குப் பிரமுகர் ஒருவர் எழுந்து பேச ஆரம்பித்தார்—என்ன சொன்னார் என்று கேட்பீரோ? என்ன சொல்லுவார்? "ஆஹா, நம் பாடகர் எவ்வளவு அழகாகப் பாடினார்! என்ன சாரீரம்! என்ன கமக சுத்தம்! என்ன அழுத்தம்! என்ன மனோதர்மம்! என்ன ஸ்வரக்கோவைகள்! என்ன பாவம்! அவர் பெயருக்குப் பொருத்தமாக எவ்வளவு அழகாகப் பாடினார்! பக்கவாத்தியம் வாசித்த பிடில் வித்வானைப்பற்றியோ நான் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை! உங்களுக்கே தெரிந்த விஷயம்தான் (வாஸ்தவமாக ஒருவரைப்பற்றியும் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. எல்லாம் பிரமுகரைவிட பாக்கியெல்லாருக்கும் அதிகமாகத் தெரிந்த விஷயம்தான்) அவருடைய பிடில் வாத்தியத்தில் ஒரு அலாதியான நாதம், அழுத்தம்! என்ன சாதகம்! மிருதங்கம் வாசித்தாரே, அவர் கேவலம் நந்திகேச்வரர் அவதாரம் தான்—அவருடைய விரல்களிலுள்ள விறுவிறுப்பு என்னவென்று சொல்வது. நாமெல்லோரும் இந்த நாலுமணி நேரம் வாயில் ஈ பூர்ந்தது தெரியாமல் கேட்டுக்கொண்டிருந்தோம்—நாம் இவர்களுக்கு நிரம்பவும் கடமைப்பட்டிருக்கிறோம். இவர்கள் இன்னும் வெகு காலம் ஆயுசுடன் இருக்கவேண்டும்".

அம்மாஞ்சி கேட்கிறான், இந்தப் பேச்சு எதற்காக? இந்தப் பிரஸங்கத்தில் சொன்ன வார்த்தைகளைச் சிறிதாவது மாற்றியிருக்க முடியுமா? வித்வான் சாரீரம் நன்றாயில்லை, அல்லது ஸ்ருதியுடன் சேரவில்லை, அல்லது ஸ்வரங்கள் ஒரே உளறலாயிருந்தன என்று சொல்லமுடியுமா? பிடில்காரன் ரம்பப் பொடியாக அறுத்துத் தள்ளிவிட்டான், எதிர்வில் போட்டுக்கொண்டு ஹிம்சை செய்தான் என்று சொல்லமுடியுமா? அல்லது மிருதங்கக்காரன் காலத்தை ஒரேயடியாக இழுத்துவிட்டான் கடங்காரன் என்று சொல்லமுடியுமா? இதெல்லாம் ஆகாத காரியம்—எல்லாம் பேஷாயிருந்தனவென்றுதான் சொல்லக்கூடும். ஆனால் அந்த வித்வான் புத்திசாலியாயிருந்தால் எந்த இடத்தில் ஜனங்கள் ரசித்தனர், மற்றெந்த இடத்தில் முகத்தைச் சுளுக்கிக்கொண்டனர் என்று தெரிந்துகொண்டிருப்பான். அதற்குப்பின் எவ்வளவு பிரமுகர்கள் பேசினாலும் பேத்தினாலும் அவனுக்கு உற்சாகம் கொடுக்குமா? இந்தச் சம்பவம் வீண் விஷமம்தானே?

ஆனால் ஒன்று செய்யலாம்—சூட்டுடன் சூடாக, தம்புரா போட்டவர் எவ்வளவு அழகாக மீட்டினார், சோடா உடைத்துக்கொடுத்த சிஷ்யப்பயல் எவ்வளவு அழகாகவும், சாமர்த்தியமாகவும் புட்டியைத்திறந்து கோலிகுண்டு சப்தப்படாமல் சோடாவிட்டுக்கொடுத்தான் என்றும் சொல்லியிருக்கலாம்—இதையும் சொல்லியிருந்தால் என். என். கிருஷ்ணனுடைய மாமூல் ஹாஸ்யப் பேச்சுப்போல் இருந்திருக்கும் என்கிறான் அம்மாஞ்சி.

இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்—தாருண வருஷத்தில் நீங்கள் எல்லாரும் அஷ்ட ஐச்வரியத்துடனும் திடசரீரத்துடனும் இருந்துவருவீர்களாக என்று அம்மாஞ்சி பகவானை நினைத்துக்கொண்டு ஆசீர்வதிக்கிறான்.

# உவகைச் சுவை

வே. நாராயணன்

-:o:-

சிருங்கார ரஸத்தைத் தொல்காப்பியம் உவகை என்று கூறுகின்றது. இந்த ரஸம் இருவகைப்படுவது ஸம்போகம், விப்ரலம்பம் என்று. ஸம்போக சிருங்காரத்தை நாகரிகமாகக் கையாள்வது கடினம்: ஒரு சில கவிகளே இதிலே வெற்றிபெற்றுள்ளார்கள். அவர்களுள் மிகச் சிறந்து விளங்குகின்றார் வால்மீகி என்னும் ஆதிகவி. பிரிந்தபோது காதலர்களின் துயரம் நிறைந்த பேச்சுக்களிலும் பிரிவாற்றாமை கூறுமிடத்திலும் ஸம்போக சிருங்காரத்தைக் கையாள்வதுதான் இவர் காட்டிய சிறந்த முறையாகும்.

"ஸம்சிலேஷ ஸமயத்திலே பூ இடைப்படினும் ஆற்றமாட்டாதவள், என்னைப் பிரிந்து இடையிலே மலையும் ஆறும் கடலும் கிடக்க எவ்வாறு ஆற்றியிருப்பாள்" என்று ஸ்ரீ ராமர் பிராட்டியை நினைத்துப் புலம்புவதாக ஒரு சுலோகம் காணப்படுகின்றது. தலைவனுக்கும் தலைவிக்கும் ஸம்சிலேஷத்தால் உண்டாகும் ஆனந்தம் ஒருபுறமிருக்க, அதினும் அவர்களுக்கு மிக்க ஆனந்தத்தைத் தருவது, பரஸ்பரம் ஆனந்தத்தைத் தருகிறோம் என்ற எண்ணமே. இதுபற்றியே சமுத்திர தீரத்திலே ஸ்ரீ ராமர், "எப்பொழுது, ஸீதையைக் காணப் போகிறேனோ? எப்பொழுதுதான் அவளுடைய முகத் தாமரையை நிமிர்த்தி, நோயாளி மருந்துண்ணுவதுபோல, அமிருத பானத்தைச் செய்யப்போகிறேனோ?" என்று ஸம்சிலேஷத்தால் தமக்கு நேரும் இன்பத்தைக் கூறியபின், "எப்பொழுதுதான் அவளுடையகொங்கைகள் என்னைத் தழுவி மெய்விதிர்ப்புறுவனவோ?" என்றும், "எப்பொழுதுதான் தெய்வப்பெண் போன்ற அந்நல்லாள் அவாவற என் கழுத்தைத் தழுவி ஆனந்தக் கண்ணீர் வடிக்கப் பெறுவாளோ?" என்றும் ஏங்குகிறார்.

இதுபோலவே பிராட்டியையும், ஸம்சிலேஷ தசையிலே பெற்ற ஆனந்தமும் மீண்டும் அவ்வானந்தத்தைப் பெறவேண்டும் என்ற ஆவலுமே சிறையிருந்தபோதும் அவளை மாயவொட்டாது காக்கின்றன. இதனாலேதான் ஹனுமான் "ஸ்ரீ ராமரிடம் என்ன செய்தி சொல்லியனுப்புகிறீர்கள்" என்றதும் காகாஸுர விருத்தாந்தத்தைக் கூறுமுகத்தால் சித்திரகூடத்திலே அனுபவித்த ஸம்சிலேஷ ஸுகத்தைத் தான் நினைத்தும் தலைவனுக்கு நினைப்பூட்டியும் மெய்மறந்துவிடுகிறாள்.

ஸம்சிலேஷ தசையை அப்படியே வருணிப்பது கம்பர்போன்ற பெருங் கவிகளிடத்திலே காணப்படினும், அது அவ்வளவு சிலாக்கியமானது அன்று; இதுபற்றியே, திருவள்ளுவர், ஸம்சிலேஷத்திற்கு முன்னும் பின்னும், தலைவன் தலைவியின் தோற்றத்தைக் கண்டு இன்புறுவதாகவும், தோழனிடம் வருணிப்பதாகவும் பாடுகின்றார்.

தலைவியின் பாதங்களை வருடிய தலைவன் அவற்றின் மேன்மையை உணர்ந்து,

"நன்னீரை வாழி அனிச்சமே! நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்"

என்றும்,

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்"

என்றும் பாராட்டுகிறான். ஸம்போக காலத்திலே அவளுடைய கண்களிலே காணப்பெற்ற அதிசயமான மலர்ச்சியை நினைந்து, சந்திரனைப் பார்த்து,

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி"

என்கிறான்.

இவற்றினும் சிறந்ததும் அரியதுமானதோர் முறையைக் கையாள்கிறார் வால்மீகி முனிவர். ஸ்ரீ ராமனுடன் காட்டிற்குப் புறப்படும்போது பிராட்டி, தனக்கு அந்த உடன்செலவால் ஏற்படக்கூடிய ஆனந்தத்தை வருணிக்கிறாள். ஸம்சிலேஷ தசையிலே நெருஞ்சிமுள்ளும் அனிச்சத்தையும் அன்னத்தின் தூவியையும் ஒத்தமென்மையுடையதாகிவிடும்; பிராட்டியின் பாதங்கள் அவற்றினும் கடினமுடையவையாகி அவற்றை மென்மைப்படுத்தும் ஆகையால், "புல்லையும் முள்ளையும் மிதித்து நீ வழி நடப்பதற்கு மென்மையாக்கிக்கொண்டு நான் உன் முன் செல்வேன்" என்கிறாள் பிராட்டி. எத்தகைய பாதங்களால் தேவி என்ன ஸாஹஸகார்யஞ் செய்ய முற்படுகிறாள் என்று தலைவனுக்கும் கவிகேட்பவர்க்கும் வியப்புத் தோன்றுமாறு அமைந்துள்ளது இப்பேச்சு. "தருப்பையும் ஊகுமுள்ளும் முட்செடிகளும் உன்னோடு செல்லும்போது பஞ்சுபோன்ற மென்மையுடையவையாகிவிடும். பெருங்காற்று புழுதியை வாரி என்மீது அடித்தால், அது எனக்குச் சந்தனப்பூச்சைப்போல் இனியதாகும். உன்னருகே வெறும் புற்றரையிலே கிடந்தாலும், அதினும் இனிதாமோ மெத்தென்ற பஞ்சு சயனத்தின் மீது பள்ளிகொள்

ளுதல்? நீ கொணர்ந்து தருகின்ற காயும் கிழங்கும் இலையும் நீரும் அமுதமேயாகுமன்றோ?" என்று தலைவியைக்கொண்டே தலைவனிடம் நேரிலே ஸம்ச்லேஷ ஸுகத்தைக் கூறுமாறு ஸந்தர்ப்பத்தை அமைத்துக் கொண்ட பரமகவியின் திறமை நன்றாக உணர்ந்து இன்புறத் தக்கது.

ஆதி கவியின் ஸம்போக வருணனைக்கும் ஏனையோரின் வருணனைக்கும் முக்கியமானதொரு வித்தியாசம் உண்டு. ஸம்ச்லேஷ காலத்திலேயும், தலைவன் தலைவியின் இன்பத்தைக் கண்டு இன்புறுகிறான் என்றும் தலைவியும் தலைவனின் இன்பத்தைக்கண்டு இன்புறுகிறாள் என்றும் நாகரிகமாக விளக்குவதே இந்த வித்தியாசத்தின் பயன். ஸ்ரீராமன் பிராட்டியின் மடியிலே சயனித்ததால் பிராட்டி இன்புற்றாள் என்றும் அதுபோலவே பிராட்டியின் சயனத்தால் ஸ்ரீ ராமர் இன்புற்றார் என்றும் காகாசுர விருத்தாந்தத்தில் வருணிக்கப்பட்டுள்ளது. இக் கருத்தழகை அமைத்தே திருக்குறளாசிரியரும்

*"தாம்வீழ்வார் மென்றோள்துயிலி னினிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு"*

என்றனர். 'தாம் காதலிப்பவர் தம்முடைய மெல்லியதாக்கப்பெற்ற தோளிலே துயிலும் போது தாம்பெறும் இன்பத்திலும் இனியதோ வைகுண்டத்திலே பெறக்கூடிய பேரின்பம்' என்பது இக் குறளின் பொருள்.

பிராட்டியிடம், ஹனுமான் தன்னை இராம தூதன் என்று தெரிவித்துக்கொண்டதுமே, பிராட்டிக்கு இராமபிரானோடு ஸம்ச்லேஷித்த சுகங்களின் நினைவு வந்து விடுகிறது. உடனே அவருடைய ரூபத்தை ஹனுமான் வர்ணிக்கக்கேட்டு இன்புறவேண்டுமென்ற ஆசை எழுகின்றது; தன்னைக் கட்டியணைத்த தோள்களும் தழுவிய தொடைகளும் அவள் கண்முன் தோன்றுகின்றன. "ஹனுமானே, இராமருடைய தோள்களையும் தொடைகளையும் எப்படிக்கு அறிதி" என்றுகாதல்மீதூரக் கேட்டுவிடுகிறாள். உடனே "யார்முன் எதைச் சொல்லிவிட்டோம்" என்ற வெட்கம் மேலிடுகின்றது; பதற்றத்தாலும் தான் ஏதோ அசட்டுத்தனமாகக் கேட்டதாகக் கொள்ளட்டும் என்ற எண்ணத்தாலும் "லக்ஷமணனுடையவற்றையும் எனக்குக் கூறுவாய்" என்கிறாள். எவ்வளவு அழகாக உவகைச் சுவையை விளக்கி அமைத்துள்ளார் ஒரு பாதி சுலோகத்திற்குள்ளே!


# எமது புது வருட சங்கல்பம்

★ நிகழ்ந்த ஆண்டில் சங்கீத ரசிகர்களின் அன்பும் ஆதரவும் "நேஷனல் ரேடியோ" வின் ஊழியத்தைச் சிறப்பித்தன.

ஆகவே, இப்புது ஆண்டில் மேலும் திருப்திகரமாகவும், அன்பர்களின் பூர்ண ஆதரவிற்கு உகந்தவண்ணமும் சேவைசெய்ய "நேஷனல் ரேடியோ" சங்கல்பம் செய்து கொள்ளுகிறது. ★

ஒலிபெருக்கி சேவைக்கு தனிச்சிறந்த ஸ்தாபனம்

# நேஷனல் ரேடியோஸ்

பிரம்மன் கோவில் தெரு, கும்பகோணம்.

# பாசம்

சீதாபாய்

-:o:-

24 APR 1944
MADRAS

பழனி: பாப்பா, இன்னிக்காச்சும் ஒரு கடுதாசி எளுதிக்கொடு பாப்பா. என்னை இந்தக் கெள வயசில் விட்டுவிட்டுப் போக அந்தப் பிள்ளைக்கு மனதுதான் வந்திச்சே! ஆனா பெத்த மனசு கேக்கலே. அவனை நினைச்சுக்குட்டா சோறும் வேண்டிருக்கல்லே. நித்திரையும் வரெல்லே. மனசுபண்ணி இன்னிக்காச்சும் ஒரு வரி எளுதிக்கொடு, புண்ணியம் உண்டு.

பாப்பா: என்ன பழனி, நான் ஏதோ எழுதுவதற்குச் சோம்பல் படுவதுபோல் தினம் ஐந்தாறு தடவை சொல்லிக்கொண்டிருக்கிறாயே! உன் மகன் விலாசம் தெரியாமல் எப்படிக் கடிதம் எழுதுவது? பக்கிரி பட்டாளத்தில் சேர்ந்தவன் என்று விலாசம் எழுதச் சொல்லுகிறாய். அப்படி எழுதினால்மட்டும் போதுமா? ஊராவது போட்டால் ஒருவேளை போய்ச் சேரும் என்று நினைக்கலாம். எப்படிக் கடிதம் எழுதுவது?

பழனி: நம்மூரு போஷ்டு மாஷ்டர்தானே பாப்பா. அவுங்கட்டே கடுதாசியைக் கொடுத்து, நம்ம பக்கிரிக்கு எளுதியிருக்கு, பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேத்துடுங்க எண்டால் சேத்துடமாட்டாரா? நீ ஒரு கடுதாசி எளுதிப்போட்டு அவனிடமிருந்து பதில்வந்தால்தான் என் மனசு கேக்கும். இன்னிக்கும் எளுதாமல் இருந்துடாதே பாப்பா.

மேற்கண்டவிதமான பேச்சு ஒரு நாளைக்குக் குறைந்தது ஐந்தாறு தடவைகள் நடக்கும். பழனி என்பவள் எங்கள் வீட்டில் சுமார் முப்பது வருஷங்களாக வேலைசெய்பவள். எண்பத்தைந்து வயதாகியும் பாவம்! அவள் கையால் உழைத்துச் சாப்பிடுகிறாள். அவளுக்கு ஒரு மகன், ஏன், ஒரே மகன். தன் வயிற்றையும் கஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் முப்பது வயது வரையில் சோம்பேறியாய்த் திரிந்த தன் மகனை வளர்த்துவந்தாள். ஒரு நாள் காலையில் "சின்னப்பசங்ககூட அஞ்சாறு ரூபாய் சம்பாதிச்சிட்டு வரானுவ. நீ சோம்பேரியாய்த் திரியரே" என்று அவள் சொல்லி முடிப்பதற்குள் அவனுக்குப் பொறுக்கவில்லை, இவ்வார்த்தைகள். ஊரில் அநேகர் இன்னம் கேவலமாய் அவன் எதிரிலேயே வைவதுண்டு. அது அவனுக்குச் சகஜமாய் இருந்தது. ஆனால் அவன் தன் தாயாரின் வாயால் இவ்வார்த்தைகளைக் கேட்டுவிடுவதா? எழுந்தது அவன் ஆத்திர உணர்ச்சி. "நான் சண்டையில் சேர்ந்து விடுகிறேன். உன் மூஞ்சியை இனிப் பார்க்கப்போவதில்லை" என்று கிளம்பிப்போனவன் தான்.

கபடமற்ற பழனிக்குத் தன் வார்த்தைகளின் விளைவு தன் வாழ்க்கையின் துயரம் என்று புலப்படவில்லை. ஒரு மாதம் வரையில் மகன் வருவான் என்ற நம்பிக்கையில் காலந் தள்ளினாள். அதன் பிறகுதான் திகில் பிறந்தது. மகனைக் கடிதம் எழுதி வரவழைக்க வேண்டும் என்ற தாபம் தாண்டவமாடி என்னைத் தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். பாவம்! அதே பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது அவள் நிலைமை. நான் விலாசம் தெரியாமல் எப்படிக் கடிதம் எழுதிப் போடுவது என்ற குழப்பத்தில் இருந்தேன். அவள் பரிதாபமான குரலும் கண்ணீரும் நாளுக்கு நாள் அதிகரித்து என் உள்ளத்தைக் கலக்கின. உறவினர்களுக்கு எழுதும் கடிதங்களைப் பக்கிரிக்குத்தான் எழுதுவதாய்ச் சொல்லி அவளையே போஸ்டு பண்ணச் செய்தேன். அவள் முகத்தில் என்ன ஆனந்தம்! விளையாட்டிற்குக்கூட பிறரை ஏய்ப்பது என் சுபாவமன்று. ஆனால் பழனியின் பரிதாபத்தைக் கருதி எதையும் செய்யத் துணிந்தேன். ஒரு நாள் "பழனி இன்று உன் மகனுக்குக் கடிதம் எழுதப்போகிறேன்" என்றேன். அவள் ஆனந்தத்திற்கு அளவே அல்லை. "என் அருமைப் பக்கிரிக்கு, மகமாயி கிருபைசெய்யணும். நான் சாகிற சமயமாய் இருக்கிறேன். நீ நல்ல மனசுபண்ணி ஒன் தொரைகிட்ட கேட்டுக்கிட்டு வந்துடு. சத்தியமாய் இனிமேல் உன்னை வேலைசெய்யப் போ என்று சொல்லவில்லை. உன்னைக் காணாமே என் மனசு துடிக்குது. உடனே வா. உன் ஆயா" என்று சமாசாரத்தைச் சொல்லி முடித்தாள். அந்தோ! என்ன பரிதாபம்! வெள்ளம்வந்து மேடு பள்ளம் பாராது ஓடுவதுபோல் அவள் குழிவிழுந்த கண்களிலிருந்து கண்ணீர் சுருங்கிய கன்னங்கள் வழியாய்த் தாராளமாய்ப் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தது. கலங்கிய மனதுடன் கடிதத்தைக் கவரில் போட்டு ஒட்டினேன். "பழனி, மழை அதிகமாய்ப் பெய்கிறது. உன்னால் இரண்டு மைல் நடந்துபோய்ப் போஸ்டு பண்ண முடியாது. வேலைக்காரப் பையனிடம் கொடுத்துப் போஸ்டுபண்ணச் சொல்கிறேன்" என்றேன். அவள் ஆவேசம் கொண்டவள் போல் எழுந்தாள். "பையன் எங்கேயாச்சும் போட்டுடுவான்" என்று சொல்லித் தன் கிழிந்த புடவைத் தலைப்பில் நனையாதபடி கடிதத்தைச் சுற்றிக்கொண்டு தள்ளாத உடம்புடன் கொட்டும் மழையில் மகன் பாசத்தால் ஆடிக்கொண்டிருந்த பற்கள் கிட்டுவதையும் பொருட்படுத்தாமல் காற்றாய்ப் பறந்து விட்டாள். என்ன பாசம்! இரண்டு நாட்கள் அவள்

முகம் சற்று நிம்மதியாய்க் காணப்பட்டது, என் மனமும் ஏதோ ஒரு பெரிய கடமையைச் செய்து அவளைத் திருப்தி செய்துவிட்டதாய்ச் சந்தோஷம் உற்றது. மூன்றாவது நாள் காலையிலிருந்து தபாலாபீசுக்குப் போக ஆரம்பித்துவிட்டாள். ஒவ்வொரு நாளும் "அவனிடமிருந்து பதில் வரவில்லை. ஒருவேளை ஏதாச்சும் கெடுதல் நேரிட்டிருக்குமோ? செவ்வாக் கெளமை கெளம்பிப் போயிட்டான். அதுவே மனசு உறுத்திட்டுக் கிடக்கு. ஓம் மூஞ்சியே பாக்கலே இனின்னு அவன் சொல்லச்சே தெக்கேவேறே பல்லி சொல்லிச்சு. அவன் வராதத்தைக்கொண்டு கெடுதல் நேரிட்டிருக்குமோ? என் ராசா எப்படிப் போனானோ?" என்று அழ ஆரம்பித்துவிட்டாள்.

"ஏதடா இது, இவளைச் சமாதானப்படுத்த நாம் சொன்ன பொய் விபரீதத்தில் கொண்டு வந்துவிட்டதே" என்று பயந்து பொய்களுக்குத் துணிந்து எங்களுக்கு வரும் கடிதங்களைப் பக்கிரியிடமிருந்து வந்ததாகப் பாவித்துச் சாதுர்ய வாசிப்பு வாசிக்க ஆரம்பித்துவிட்டேன். என் பாட்டி "எப்போதும் வேலைக்காரியுடன் என்ன பேச்சு?" என்று கோபிக்க ஆரம்பித்துவிட்டாள். பாவம், பெற்ற உணர்ச்சி அவளுக்கு என்ன தெரியும்? அவள் என் தகப்பனாரின் ஸ்வீகாரத் தாய். தவிரப் பாசம் என்பது உயர்வு தாழ்வின்றி எங்கும் நிறைந்த உணர்ச்சி என்பதை அறியாதவள். பாட்டியின் பேச்சை நான் பொருட்படுத்தவில்லை. எங்கள் ஊரின் வம்பர் சபைப் பெண்களும் எங்கள் வீட்டின் பரம்பரைப் பெருமையை வேலைக்காரியுடன் சதா பேசித் தகர்த்துவிட்டதாக என்னைப் பற்றி வம்பளந்து கொண்டிருந்தார்கள். என் மனம் என்னவோ பழனிக்காகக் கடவுளிடம் வேண்டிக்கொண்டிருந்தது.

நாட்கள் சென்றன. வழக்கப்படி ஒரு வியாழக்கிழமை பூஜை செய்துவிட்டுப் பழனியின் மனத்துயரை நீக்கும்படி இறுதிப் பிரார்த்தனையுடன் எழுந்தேன். வாசலில் தபால்காரன் "அம்மா, மணியார்டர்" என்றான். நான் வாசலுக்கு ஓடி யாருக்கென்று கேட்டேன். பழனி பேருக்குப் பத்து ரூபாயும் ஒரு கடிதமும் வந்திருப்பதாகக் கூறினான். என் உள்ள மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. கடிதத்தையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வடக்கில் கொஞ்ச தூரத்திலுள்ள அவள் குடிசைக்கு ஓடினேன். அப்பொழுது "பக்கிரி, நீ என்ன திங்கிறியோ எப்படி இருக்கியோ" என்று ஒரு பிடி சாதத்தை வாயில் போட்டுக்கொண்டிருந்தாள். எனக்கு அவசரம். அவள் மென்று விழுங்குவதற்குள் "பழனி, பக்கிரி இன்று நிஜமாகவே கடிதமும் பத்து ரூபாய் பணமும் உனக்கு அனுப்பியிருக்கிறான். கடிதத்தைப் பிறகு வாசித்துச் சொல்லுகிறேன். தபால்காரன் காத்துக்கொண்டிருக்கிறான். உன் கையால் மணியார்டர் பாரத்தில் ரேகை போடவேணும்" என்றேன். அப்படியே கையை உதறிவிட்டு ஓட்டமாய் ஓடிவந்து ரேகையைப் போட்டுவிட்டுத் திண்ணையில் படுத்துவிட்டாள். வந்த சிரமத்தில் பேசமுடியவில்லை. அவள் முகத்தில் ஆவல் நிரம்பியிருந்தது. அக் கடிதத்தில் உள்ள விஷயம் வருமாறு:—"பழனி ஆயாளுக்கு, உன்னால் இங்குவந்தேன். வந்ததன் பலனை இரண்டு விஷயங்களில் உணர்ந்தேன். ஒன்று தாயைத் தவிக்கவிட்டுப் பிரிந்தவன் படவேண்டிய மனோ வேதனை. இரண்டு, ராணுவத்தில் சேர்வதால் நம் உயிருக்கு முடிவு தேடிக்கொள்ளுகிறோம் என்று நம் ஊர்த் திண்ணைத் தூங்கிகள் பேசும் வம்பின் மெளட்டியம். இங்கேதான் எவ்வளவு வீரம் உலாவுகிறது? என்ன ஒழுங்கு? என்ன நாகரிக நடை உடை பாவனை? சிப்பாய்களின் செளகரியம் வசதி கவனிக்கப்படும் ஊக்கம்தான் என்னே? நான் இப்பொழுது இருக்கும் இடத்திற்கு 'கிர்கி' என்று பெயர். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறேன். அதுவும் என்னுடைய முட்டாள்தனத்தால் அடைந்த காயத்திற்கு. இங்கே காட்டப்படும்கவனத்தால் சீக்கிரத்தில் குணமடைந்துவிடுவேன். இதுவரையில் நான் சேமித்திருக்கும் இருநூறு ரூபாயுடன் எனது ஆபீஸர் கருணையுடன் வாக்களித்திருக்கும் இரண்டு மாத லீவில் வந்து சேருகிறேன். கவலையுறவேண்டாம். பக்கிரி." பழனி பணத்


## புது வருஷக் குறிப்பு

★

# "பாரிலாண்ட்ஸ்" டால்கம் பவுடர்
(FAIRY LANDS)

சர்மத்தின் மேன்மையை பாதுகாப்பதில்
— சிறந்த பொருள்களின் சேர்க்கை —
புது மலர்களின் இனிய அதன் மணத்தை
— நிச்சயம் விரும்புவீர்கள் —

**கவர்ச்சிகரமான புட்டிகளில் 3 சைஸ்களில் எங்கும் கிடைக்கும்**

சேலம் ஏஜண்ட்
M. S. வெங்கட்ராமய்யர், செவ்வாய்பேட்டை

ஸ்டாகிஸ்ட்
சேலம் சிடி கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் லிமிடெட்
ஸ்ரீ ராஜேஸ்வரி ஸ்டோர்ஸ் திருக்கழுக்குன்றம்
G. கிருஷ்ணசாமி நாயக்கர் & Bros. திருக்கோயிலூர்
நாக் கிருஷ்ணா ஸ்டோர்ஸ் பங்களூர் சிடி

ஏஜன்சி விபரங்களுக்கு
**ஸ்ரீ பாரத் இண்டஸ்ட்ரீஸ் கும்பகோணம்.**

தையும் கடிதத்தையும் தடவித்தடவிப் பார்த்தாள், ஆடினாள், மகிழ்ந்தாள். "பக்கிரி நல்லபடியாய் வந்து சேர்ந்தால் ரூபாய் ஒன்று கலியபெருமாளுக்கு. பாக்கி ரூபாயை அப்படியே வச்சிருக்கணும். குழந்தை ஓடியாடி சம்பாதித்தது. அவன் வந்தா நல்லா விருந்து பண்ணிப் போடணும்" என்று சொல்லிக் கொண்டு தள்ளாடியபடி குடிசைக்குள் நுழைந்துவிட்டாள். வயது முதிர்ந்ததை முன்னிட்டுப் பழனியால் வேலைசெய்ய முடியாது என்று எங்கள் வீட்டில் வேறு வேலைக்காரி நியமிக்கப்பட்டாள். ஆனால் என் தாயார் அவளுடைய சம்பளமாகிய நெல்லை நிறுத்தவில்லை.

என் மனம் மட்டும் பழனியிடம் எங்கள் வீட்டுக் கடிதங்களைப் பொய்யாகவும் கல்பனையாகவும் அவள் மகன் கடிதங்கள் என்று வாசித்து வந்த ஏமாற்றலையுன்னி உறுத்தலை அடைந்தது. திடீரென்று எங்களுக்குத் திருச்சிப் பயணம் நேர்ந்து அங்கு ஒரு மாத காலம் தங்கினோம். நாங்கள் திருச்சிக்குப் போகும்பொழுதே அவள் தேக சௌகரியம் குறைந்திருந்ததால் நான் உண்மையை அவளிடம் கூறி மனோபாரத்தை அகற்றுவதற்குள் அவள் உயிர் நீங்கிவிடுமோ என்று பயந்தேன். ஆகையால் திருச்சியிலிருந்து வந்ததும் அவள் குடிசைக்கு ஓடினேன். அங்கு இரண்டு குரல் கேட்டது. பழனி தன் மகனிடம் "பாப்பா இல்லாட்டால் நான் அப்பொழுதே செத்திருப்பேன். பாப்பா தவிர இந்தக் கௌத்தை லச்சியம்பண்ணி யார் ஒன் கடுதாசிகளை வாசிப்பாங்க" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். அவள் மகன் அதைப் பொருட்படுத்தாமல் "நான் இதுவரையில் உனக்குக் கடிதம் எழுதாதற்கும் கிழவயசில் உன்னைவிட்டுப் போனதற்கும் மன்னித்துவிடு" என்று சொல்லிக்கொண்டிருந்தான். குற்றமுள்ள மனதுடன் குடிசைக்குள் எட்டிப் பார்த்தேன். ஆகா என்ன காட்சி! மகன் தன் தாயின் மடியில் படுத்திருக்க அவள் சுருங்கிய கைகளால் அவன்மேல் தடவிக் கொண்டிருந்தாள். இருவர் கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. "குடிசையில் பாசம் இத்தகையதா? உணர்ச்சி வெள்ளம் உயர்வு தாழ்வின்றி எங்கும் பாயும் மாண்புதான் என்னே!" என்று பிரமித்துக் கொண்டிருக்கும் எனக்குப் பின்னால் என் பாட்டியின் ஸஹஸ்ரநாம வசைமொழிகள் ஒலித்துக்கொண்டிருந்தன. ஆனால் பாசத்தின் பரவச உணர்ச்சியைக் கண்டு களிக்கும் எனக்குக் காதில் அவைகள் ஏறவில்லை.




மேதாஸ்

# மஸ்தானு மாத்திரைகள்

**சிறந்த டானிக்**

மேல்நாட்டு வைத்திய முறை, நமது ஆயுர்வேத முறை
இவைகளை ஒருங்கே சேர்த்து தயாரிக்கப்பட்டுள்ளது

**பலஹீனம், வாத வலிகள், மன ஓய்வு,
தலைவலி, அஜீர்ணம், மலச்சிக்கல்,
காசநோய், சிற்றின்பத்தில் பலஹீனம்**

இவைகளுக்கெல்லாம் கைகண்ட ஔஷதம்
**இன்றே ஆரம்பியுங்கள்**

கிடைக்குமிடம்:—

**K. S. மேதா & கோ.,**
மருந்து வியாபாரிகள்,
**250, சைனு பஜார் (மாடி), சென்னை.**





501 ஸோப்பு சிறு துண்டு துக்கடாக்களையெல்லாம் சேர்த்து கொதிக்கும் ஜலத்தில் கரைய வைத்து அந்த ஸோப்பு ஜலத்தை பாட்டிலில் ஊற்றிவையுங்கள். மேலும் உபயோகிக்கலாம்



ஸோப்பை எப்பொழுதுமே ஜலம் படாதபடி ரப்பர் அல்லது ஒயர்ட்ரேமீது வைத்திருங்கள்.



அழுக்கெல்லாம் இளக துணிமணிகளை வெந்நீரில் நன்கு ஊற வையுங்கள்.



துணிகள்மீது ஸோப்பை லேசாகத் தேயுங்கள், அழுத்தமாக தேய்க்கவேண்டாம். ஸோப்பும் துணிகளும் நீடித்து நிற்கும்

**மேலும் முக்கியமாக**
உங்கள் தேவைக்கு அதிகமாக ஸோப்பு வாங்கவே வாங்காதிர்கள்.

# உங்கள் ஸோப்பு நீடித்து நின்றுவருகிறதா?

மற்ற எத்தனையோ ரகங்களைப்போலன்றி 501 ஸோப்புகள் நீடித்துழைக்கின்றன. காரணம் அவற்றில் அதிக ஸோப்பு உள்ளதனுல்தான். சிக்கனம் அதி முக்கியமான இந்நாட்களில் நீங்கள் உங்கள் சலவைக் காரியத்தில் கீழ் வரைந்துள்ள அற்ப விஷயங்களை சற்றுக் கவனத்துடன் பின்பற்றி வருவீர்களானுல் ஸோப்புகளை இன்னும் நீடித்து நிற்கச்செய்ய முடியும்.

# 501 ஸோப்புகள்

நீளக்கட்டிகளாகவும், கியூபுகளாகவும் டாப்லெட்டுகளாகவும், சீவல்களாகவும் கிடைக்கும். கூட, எல்லா மெல்லிய ஆடைகளுக்கும் உபயோகிக்க 501 ஸ்பெஷல், ஸில்க் ப்ளேக்குகள் இவையும் கிருமி நாசகமான கார்போலிக்கும் கார்ட்போர்ட் பெட்டிகளிலும் விற்கப்படுகின்றன.

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா:
19, வானியர் தெரு, த. பெ. நெ. 31, மதராஸ்.
**தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,**
டாடாபுரம் & பம்பாய்.

24 APR 1944
MADRAS

# முத்தம்

**ரா. விழிநாதன்**

—:O:—

அன்று ஆகாயத்தில் மேகங்கள் துந்துபி போல முழங்கிக் கொண்டிருந்தன. வாயு பகவான் தன் பேய்க்காற்றை வேறு ஏவி விட்டிருந்தான். அந்தப் பெருங்காற்று மழையில் அலங்கோலப்படுத்தப்பட்ட ஒரு கார் வெகு கஷ்டத்துடன், பேர் போன விக்ஞான ஆராய்ச்சியாளனான வினயனின் 'லெபரெட்டரி' யின் 'போர்ட்டிகோ' வில் வந்து நின்றது. அறையினுள் இருந்த வினயன், இதைக் கவனியாமல் தன் ஆராய்ச்சி வேலையில் ஆழ்ந்திருந்தான்.

ஒரு மாநிறமுள்ள யுவதி மழையில் நனைந்த ஆடையுடுத்திய வண்ணம் அவன் முன்பு வந்து நின்றாள். அப்பொழுதும் வினயன் அவளைக் கவனிக்கவில்லை. ஒரு விதமான சலிப்புடன் "ஏன் ஸார், விக்ஞானி வினய வஸுவின் வீடு எது?" என்று வினவினாள்.

தன் காரியத்தில் கண்ணும் கருத்துமாயிருந்த வினயன், தலை தூக்கிப்பாராமலே, 'சற்று இருங்கள்' என்று கூறிப் பேச்சை நிறுத்திக்கொண்டு விட்டான்.

பொறுமையிழந்து யுவதி கடு கடுப்புடன் கூறினாள்—"படித்த பட்டணத்தார்களின் நாகரிகம் இதுதான் போலும். மழையில் நனைந்து சொட்டச் சொட்ட நிற்கிறேன். எனக்குச் சற்று இருக்க நேரமில்லை. முடியுமானால் வினய வஸுவின் வீட்டின் அடையாளத்தை மட்டுமாவது தயவு செய்து கூறுங்கள், போதும்."

வினயன் தலை நிமிர்ந்து நோக்கினான். இப்படித் துடுக்காக ஒரு பெண் பேசி அவன் கேட்டவனல்ல. பரிசயமற்ற புருஷனுடன், இம்மாதிரி துடுக்காக, பௌருஷத்துடன் அரட்டைக் கேலி செய்யும் மாதரை அவன் கண்டதில்லை. ஆதலால் அதிசயமிகுதியில், ஒருவித மோனப் பார்வையில் அவளை உற்று நோக்கலானான்.

தன் வாழ்நாளில் இரண்டு மாதர்களுடன் நெருங்கிப் பழக அவனுக்குச் சந்தர்ப்பம் வாய்த்திருந்தது. ஒருத்தி தாய். மற்றொருத்தி மனைவி. அவனது தாய் சாந்தமே உருவெடுத்தவள். மிக்க பொறுமைசாலி. நல்லறிவு வாய்ந்தவளும்கூட. காலம் சென்ற மனைவியும் அத்தாயின் ஸ்வபாவத்தையே கடைப்பிடித்து வந்தவள். கல்யாணம் ஆகி இரண்டு வருஷம் வரைதான் அவள் உயிருடன் இருந்தாள். இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் பிரஸவ காலத்தில் இவ்வுலகைத் துறந்தாள் அவள். வினயனும் அவளும் தம்மை—உலகை—மறந்து காதல் வெள்ளத்தில் லயித்திருந்தவர்கள்.

வினயனின் இந்த மோனப் பார்வை யுவதிக்குப் பிடிக்கவில்லை. "நான் ஒன்றும் வேடிக்கைப் பார்க்கத்தக்க பொம்மையல்ல, இப்படித் தாங்கள் பார்ப்பதற்கு. இந்த அடைமழையும் பேய்க்காற்றும் என்னை நிலைகுலையச் செய்திருக்கின்றனவே தவிர வேறொன்றும் இல்லை" என்றாள் யுவதி.

வினயன் சற்றுத் தெளிந்து யுவதியின் கூரிய கண்ணொளியை முதலில் நோக்கினான். அடுத்தபடியாக, மழைத் தூறலில் நனைந்திருந்த, துல்லிய ஆடை உடுத்தி நின்ற யுவதியின் இயற்கையழகை. கடைசியாக, கனத்த மழையையும் பேய்க்காற்றையும் கண்டபின்தான் யுவதி சிரமப்பட்டிருப்பாள் என்பதை ஊகித்துக்கொண்டான். "இன்று ஊதலும் சாறலும் சற்றுக் கடுமையாகத்தானிருக்கின்றன" என்று கூறினான்.

வினயன் வாய் திறந்து பேசியதைக் கண்ட யுவதிக்கு, வினயன் தன் தோல்வியை ஒத்துக் கொண்டுவிட்டதுபோல ஒரு எண்ணம், ஒரு அல்ப சந்தோஷம். "கடுமை என்றுதான் தெரிகிறதே! அது தாங்கள் சொல்லியா தெரியவேண்டும்? உங்களது அறை விரிப்பு நனைந்துபோயிருப்பதிலிருந்தும், புஸ்தகங்கள் மழைத்துளி பட்டு ஊற ஆரம்பித்திருப்பதிலிருந்தும், ஜன்னல் கதவுகளைக்கூட தாங்கள் சாற்றிவைக்காமல் ஏதோ வேலையில் முனைந்திருக்கிறீர்கள் என்பதுகூட நன்றாகத் தெரிகிறது" என்று இயம்பினாள்.

வினயன் அப்பாவிப் பார்வையுடன் புஸ்தகங்களைப் பார்த்துவிட்டு, எழுந்து ஜன்னல் கதவுகளைச் சாற்றியவண்ணம் "இங்கு இருந்த நான் இதைக் கவனிக்காமலிருந்துவிட்டேன், நல்லவேளை, நீங்கள் ஞாபகப்படுத்தினீர்களே!" என்று கூறினான்.

"ஆமாம், அது இருக்கட்டும். நான் கேட்டேனே......"

"என்ன கேட்டீர்கள்?"

இந்த அதிசய ஸ்வபாவம் படைத்த மனிதன்பால் யுவதியின் உள்ளத்துள் அலாதிக் கருணை ஏற்பட்டது. "வினய வஸுவின் வீடு எது என்றுதான்" என்ருள்.

"இதுதான்; அந்த வாசல் வழியாக உள்ளே போங்கள்."

யுவதி அதிசயப் புன்முறுவலுடன் ஒரு முறை அவனைப் பார்த்துவிட்டுக் காட்டிய வழியே, உள்ளே செல்லலானுள்.

வினயனின் தாய் சாந்தா, அவளைக் கண்டதும் ஓடிவந்து அணைத்துக்கொண்டு, "மாயா வா அம்மா, இப்பொழுதுதான் வருகிருயா? எவ்வளவு நாட்களாக நீ வரப்போகிருய் வரப்போகிருய் என்று காத்திருந்தேன் தெரியுமா! என்னை மறந்துபோய்விடவில்லையே. நீ மழையில் ஒரேயடியாக நனைந்து போய்விட்டாயே. உலர்ந்த ஆடை சீக்கிரம் உடுத்திக்கொள்" என்று அன்புடன் மொழிந்தாள்.

உடையை மாற்றியவண்ணம், "ஆறு வருஷ காலம் தாய் போன்றிருந்த உங்களை மறப்பது என்பது முடிந்த காரியமா? ஏன் அம்மா, தங்கள் தலைமயிர் முன்பெல்லாம் இவ்வளவு நரைத்திருக்கவில்லையே! முகத்திலும் இவ்வளவு சுருக்கம் ஏற்பட்டிருக்கவில்லையே! ஏன் அம்மா இப்பொழுது இப்படியாகிவிட்டது?" என்று கேட்டாள்.

"அப்பொழுது, என்ன நான் கிழவியாயிருந்தேனு அதற்கு? வினயன் மேல் படிப்புக்காக அயல்நாடு சென்றிருந்தபொழுது அவரும் அஸ்ஸாமுக்கு மாற்றப்பட்டுவந்தார். அங்கேதான் உன் தாயுடன் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. இப்பொழுது அவரும் இவ்வுலகில் இல்லை. உன் தாயும் இவ்வுலகை விட்டு அகன்றுவிட்டாள். அதுமுதல் நானும் சொல்லுகிறேன், 'தனியாக இராதே. இங்கே வந்துவிடு' என்று. ஆனுல் நீ கேட்கவேமாட்டேன் என்கிருயே?" என்று அன்பு ததும்பக் கேட்டாள்.

"அம்மா இனிமேல் இங்கேயே இருக்கிறேன். B. A. பரிக்ஷை எழுதுவதற்காகத்தான் இவ்வளவு நாள் தங்கிவிட்டேன். இனி எங்கும் போகவேண்டியதில்லை. உங்களோடேயே இருக்கிறேன். அம்மா, மறந்தேபோய்விட்டேனே, வண்டியில் சாமான் இருக்கிறது எடுத்துவர ஒரு ஆளை அனுப்புங்களேன்".

இந்தப் பரந்த உலகில் 'தன்னவர்' என்று சொல்லிக்கொள்வதற்கு மாயாவிற்கு ஒருவருமே இல்லை. இவ்வளவு வருஷங்களாகச் சாந்தாவே மாயாவின் செலவுகளையோ அவசியங்களையோ, நிர்வகித்துவந்தாள்.

சாந்தாவின் கணவர் அஸ்ஸாமுக்கு மாற்றப்பட்டுச் சென்றிருந்த சமயத்தில் மாயாவின் குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அதுமுதல் மாயாவைத் தன் குழந்தையாகவே பாவித்து வந்தாள் சாந்தா. வினயனுக்கும் மாயாவிற்கும் பரிச்சயமே கிடையாது. ஒருவரையொருவர் பார்த்ததுகூட கிடையாது. தன் முதல் மாட்டுப்பெண் இறந்தபின் சாந்தாவிற்கு வீடு 'வெறிச்'சென்றிருந்தது. வீட்டில் தாயும் தனயனும்தான் இருந்துவந்தனர். வீட்டை லக்ஷ்மீகரமாக ஆக்க எண்ணி, வினயனை மறு விவாகம் செய்துகொள்ளுமாறு சாந்தா எவ்வளவோ வற்புறுத்திஞள். அநேக படித்த அழகிய யுவதிகளை வினயனுக்கு அறிமுகம் செய்துவைத்தாள். ஆனுல் வினயன் மறுவிவாகம் செய்துகொள்ளச் சிறிதும் விரும்பி இசையவில்லை. சாந்தா வற்புறுத்தி மாயாவை வரவழைத்த காரணம் யாதோ அதுஅவளுக்குத்தான் தெரியும்.

2

"அம்மா நீ இதைக் கேட்டாயோ! இன்று என் லெபரெட்டரிக்குள் அரட்டைக் கேலிப் பெண் ஒன்று வந்திருந்தது!" என்று சாப்பிட உட்கார்ந்திருந்த வினயன், அருகில் அமர்ந்திருந்த தன் தாயிடம் கூறிஞன்.

"அரட்டைக் கேலியா? அது யாரது" என்று ஆச்சரியத்துடன் வினவிஞள் வினயனின் தாய்.

"அரட்டைக்கேலிதான். இருந்தாலும் நல்ல பெண். நனைந்து கெட்டுப்போக இருந்த புஸ்தகங்களைக் காப்பாற்றினவள் அவள்தான்".

பால் பாத்திரத்துடன் வந்துகொண்டிருந்த மாயாவின் செவியில் இவ் வார்த்தைகள் விழுந்தன.

"வினயா,மாயா வந்துவிட்டாளே தெரியுமா? நீ இதற்குமுன் அவளைப் பார்த்திருக்க நியாயமில்லை—மாயா, வா. வினயனை உனக்குப் பரிச்சயம் செய்துவைக்கிறேன்."

சாந்தா கூப்பிட்டதும் மாயா உள்ளே நுழைந்தாள்.

காலையில் சந்தித்த, அஸப்யமாகபேசிப்பழகி மிருகத்தன்த்தைக் காண்பித்த, உள்ள நெகிழ்வற்ற அதே வாலிபன், தன்னெதிரில் அமர்ந்திருப்பதைக்கண்டு, மாயாவிற்கு, "இவனு உலகப்பிரசித்தி பெற்ற விக்ஞானி வினயன்" என்ற ஆச்சரியம் மூண்டது. இதே விக்ஞானியின் பொருள் நிறைந்த, கம்பீரம் வாய்ந்த, அறிவு சொட்டும் கட்டுரைகளைப் படித்து, பக்திமேலீட்டால், அவனுக்குத் தேவதாஸ்தானம் அவள் அளித்திருந்தாள். அவனது ஒவ்வொரு வாக்கியமும் எவ்வளவு முறை படித்த பொழுதிலும், என்றும் புதியதாகவே தோன்றிற்று அவளுக்கு. தனது தேவனுகிய அந்த விக்ஞானியைக்காண அவளுக்கு ஏற்பட்டிருந்த அபிலாஷைக்குக் கங்குகரை இல்லை. எந்த விக்ஞானியைக்காண அவள்

இவ்வளவு நாட்கள் தவம் கிடந்தாளோ, அவனை நேரில்கண்ட அவளுக்கு, "அவன் இவனாக இருக்கமுடியுமா?" என்ற அவநம்பிக்கைதான் ஏற்பட்டது.

காலையில் அரட்டைக்கேலி பிடித்துக்கொண்டிருந்த அதே பெண், தாயார் வாயாரப் புகழ்ந்து தூக்கிவைக்கும் 'மாயா'வாக மாறிவிட்டாள் என்பதைக் காண அவனுக்கு ஆச்சரியமாகப்போய்விட்டது. தாயின் புகழ் மொழிகளைக்கேட்டு, எவளிடம் மரியாதையும் சிரத்தையும் கலந்த அன்பு ஏற்பட்டிருந்ததோ அதே மாயாவைக்கண்டதும் அவனது முகத்தில் ஒருவித அதிசய பாவம் உதித்தது. அரட்டைக்கேலி மாயாவைக்கண்டு மௌனம் சாதித்தவண்ணம் அமர்ந்திருந்தான்.

"முன்பு தெரிவிக்காமல் கிளம்பி வந்துவிட்டாள் குழந்தை. அதனால் மழையிலும் சாரலிலும் அவள் சிரமப்பட நேர்ந்தது. நான் அடிக்கடி சொல்வேனே அந்த மாயாதான் இவள் தெரிந்ததா வினயா?"

"காலையில் ஒரு அரட்டைக்கேலி வந்தது என்று சொன்னேனே அம்மா, அவள்தான் இவள்" என்று கூறும்பொழுதே வினயனை வெட்கம்வந்து சூழ்ந்தது. அவன் இம்மாதிரியான வாக்கியத்தை அவள் முன்புகூற விரும்பவில்லை. வாய்தவறி அவ்வாக்கியம் வந்துவிட்டது. இவ்வார்த்தையைச் செவியுற்ற மாயாவிற்கு "இதென்ன இது பெரிய பட்டிக்காடாக இருக்கிறதே" என்று ஆச்சரியமாக இருந்தது. மாயா தன் கூரிய நேத்திரங்களால் வினயனை நோக்கினாள். வினயனது வெட்கத்தை அவளது கண்கள் நன்கு கவனித்துவிட்டன. மாயாவின் கண்களில் உலகப் பிரசித்திபெற்ற இந்த விஞ்ஞானி, அநாகரிக முள்ளவனாகவும், பட்டிக்காட்டானாகவும் தென்பட்டான். ஆயினும் அந்த அநாகரிகன் வெட்கித் தலை குனிந்தது, அவளுக்கு அநாகரிகமாகவோ குற்றமாகவோ படவில்லை.

"நான் அரட்டைக்கேலியாக இருந்தால் இருந்துவிட்டுப்போகிறேன். ஆனால் மழையினால் அலங்கோலப்படுத்தப்பட்டுச் சொட்டச் சொட்ட நிற்கும் ஒரு பெண்ணை மணிக்கணக்காக நிறுத்திவைப்பது என்பது தங்களைப் போன்ற விஞ்ஞானப் பேராசிரியர்களுக்கு அழகுதருமே தவிர, என்னைப்போலொத்த அரட்டைக்கேலிகளின் காரியத்திற்கு அழகாகாது" என்று குத்தலாக மாயா கூறினாள்.

"நானா உன்னை சொட்டச் சொட்ட நிற்கச் சொன்னேன்? உள்ளேபோகச் சாமர்த்தியமில்லாதவர்களுக்குப் பிறரைத்தான் குறைகூறத் தோன்றும்" என்ற வினயனது வாக்கியத்தைக் கேட்டு, மாயா 'கலகல'வென நகைத்துவிட்டாள். அவளது நாகரிக உலகத்தில் இந்தச் சிரிப்பு அநாகரிகமாகக் கருதப்படும் என்பதை அறிந்தும் அவள் உரக்கச் சிரிப்பதை அடக்கிக்கொள்ளவில்லை.

சாந்தாவிற்கு, அவர்களிருவரும் தூரத்துவம் என்ற எல்லையைத்தாண்டி, சிரித்துப் பேசிக்கொண்டு, ஒற்றுமை மார்க்கத்தை இவ்வளவு சீக்கிரம் பிடித்து விடுவார்கள் என்ற நம்பிக்கை இது காறும் உதிக்கவில்லை. அவர்கள் விளையாட்டாக நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவாரம்பித்துவிட்டனர் என்பதையறிந்து மிக மகிழ்வுற்றாள்.

"உள்ளே போக வழி எது என்று நான் கேட்டதற்கு 'சற்று இரு' என்று கூறி விட்டீர்களே. இதற்கே இந்தத்தண்டனை கொடுத்திர்களானால்..." என்று சிரிப்பையடக்கிக்கொண்டு இழுத்தாள், மாயா.

"ஓகோ, அப்படியா! நீங்கள் சொன்னதையே நான் நன்கு கவனிக்கவில்லை" என்று கலவரத்துடன் கூறினான் வினயன்.

"அரட்டைக் கேலிப்பெண்ணை ஆராய்வதில் ஒருகால் ஈடுபட்டு விட்டீர்கள் போலும், அதனால் நான் கேட்டது உங்கள் காதில் விழவில்லை என்று எண்ணுகிறேன்."

வாய்ப்பேச்சு மூலம் இருவருக்கும் நெருங்கிய தொடர்பும் பரிச்சயமும் ஏற்படுகின்றன என்பதைக்கொண்டு, சாந்தாவிற்கு 'வெறிச்' சென்றிருக்கும் வீடு 'லக்ஷ்மீகர'மாக ஆகிவிடும் என்ற நன்னம்பிக்கை உதித்தது.

— 3 —

மாலை நான்கு மணியிருக்கும். சிற்றுண்டி நிரம்பிய 'பிளேட்' ஒன்றைக்கையில் ஏந்திய வண்ணம், மாயா ஒரு ராகத்தை முணுமுணுத்துக்கொண்டு வினயனது 'லெபரட்டரி'யில் நுழைந்தாள். அச்சமயம் வினயன் ஏதோ ஒரு ரஸாயனம் தயாரிப்பதில் முனைந்திருந்தான். 'பிளேட்டையும்' கிளாஸையும் மேஜையின் மீது வைத்து விட்டு வினயனது முன்னிலையில் போய் நின்றாள்.

"சற்றுப் பேசக்கூடாது, மாயா" என்று கூறினான் வினயன்.

"ஏனோ? நான் பேசினால் இந்தத் திராவகம் ஆவியாக மாறிப் பறந்து போய்விடுமோ" என்று ஒரு குறுக்குக் கேள்வி கேட்டாள்.

"இவ்வளவு மாணவர் என்னிடம் பயில வருகின்றனர். இதுமாதிரியெல்லாம் அவர்கள் கேட்பதில்லை" என்று சலித்துக்கொண்டான்.

"நானும் அதற்கு உங்கள் மாணவியா என்ன?" என்று புன்முறுவல் பூத்தாள்.

"நீயா? ஒருகாலும் மாணவியாக ஆக முடியாது. பெண்களுக்கு விஞ்ஞானத்தைப் பற்றி என்ன தெரியும்?"

"அப்படியானால் பெண்கள் விஞ்ஞானத்தைக் கற்றுக்கொள்ளவோ, அறிந்துகொள்ளவோ, முடியாதா?" என்ற கேள்வியுடன் வினயனது அருகில் உட்கார்ந்துவிட்டாள்.

"முடியவே முடியாது" என்று தலையசைத்தான் வினயன்.

"நான் கற்றுக்கொள்ளத்தான்போகிறேன்."

"நீயா?" என்று அவநம்பிக்கை ததும்பும் குரலில் கேட்டான்.

"ஆமாம், நான்தான்" என்று திடசங்கல்பத்துடன் கூறினாள் அவள்.

"உன்னால் கற்றுக்கொள்ள முடியாதே!"

"முடியும். நீங்கள் கற்றுக்கொடுத்தால்."

"நான் கற்றுக்கொடுப்பதா" என்று வினயன் துணுக்குற்றான். இச்சமயத்தில் வினயனது முகத்தில் ஏற்பட்டிருந்த அவநம்பிக்கைக் குறியைப்போல வேறு எவர் முகத்திலும் காணமுடியாது.

இதைக் கண்ணுற்ற மாயா, "உங்களால் முடியாவிட்டால் வேண்டாம். உங்களுடைய அந்த இரண்டு மாணவர்களும் ஊரிலிருந்து திரும்பி வரும்வரையிலாவது நான் உங்களுக்கு ஒத்தாசையாயிருக்கிறேன்" என்றாள்.

வினயனும் அதை ஆமோதித்தான். சிற்றுண்டியருந்திக்கொண்டே அவளுக்கு விஞ்ஞானத்தைப் புகட்டலானான்.

இவ்விதம் இரு மாதங்கள் ஓடின. மாயாவை 'லெபரெட்டரி'யிலிருந்து வெளியேற்றும் பேச்சையே வினயன் எடுக்கவில்லை. ஒருகால் அதை மறந்தேபோய்விட்டானோ என்னவோ! மாயாவும் எவ்வித சங்கோசமுமின்றி 'லெபரட்டரி'க்குள் நினைத்த பொழுதெல்லாம் போய்வரலானாள். வினயன் கற்பிக்கும் விஷயங்களை ஊன்றிக் கவனித்து மனதில் பதித்துக்கொள்வாள். மாயாவின் மேதையைக் கண்டு விஞ்ஞானி வினயன் பிரமித்துப் போவான். இரண்டு மாணவர்களும் திரும்பி வந்தனர். ஆனால் தங்களது பழைய இடத்தை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை. அந்தப் பழைய இடத்தில் மாயா வேரூன்றி நின்ற வண்ணம் புன்முறுவல் பூத்துநிற்பாள்.

இப்பொழுதெல்லாம் மாயாவில்லாமல் வினயனுக்குப் பொழுது போவதே கிடையாது. ரஸாயனம் தயாரிக்கும்பொழுதெல்லாம், மணிக்கணக்கில் வினயனது கைகளும் மாயாவின் கைகளும் ஒன்றையொன்று ஸ்பரிசித்தவண்ணமிருக்கும். அச்சமயம், அவர்களிருவருக்கும் ஒரு உணர்ச்சி, உள்ளத் துடிப்பு, மயிர்க்கூச்சல், இவை ஏற்பட்டிருக்குமோ, ஏற்பட்டிருக்காதோ, தெரியாது. இதேபோல பெரும்பாலான நாட்கள் அவர்களது வாழ்க்கையில் நிகழ்வதுமட்டும் உண்டு.

அன்றைய தினம் 'லெபரெட்டரி'க்குள் நுழைந்துகொண்டிருந்த மாயா எதையோ கண்டு பயந்து 'வீர்' என்று கூச்சலிட்டாள். வினயன் சமயத்தில் சென்று அவளைத் தாங்கிக்கொண்டான், அவன் தாங்கியிருந்திராவிடில் மாயா கீழே விழுந்திருப்பாள். தலையிலும் ஏதாவது நல்ல அடிபட்டிருக்கும். பயமிகுதியினால் வினயனின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டிருந்த மாயாவின் தேகம் நடுங்கிக்கொண்டிருந்தது.

"எதைக்கண்டு பயந்து விட்டாய் மாயா?" என்று இரு கைகளாலும், அவளைத்தழுவிய வண்ணமே அன்பு ஒழுக வினயன் கேட்டான்.

"பாம்பைக்கண்டு. வாருங்கள் ஓடிவிடுவோம்" என்றாள் மாயா.

"அட அசடே, அது நான் கொண்டு வந்த செத்த பாம்பல்லவா! அதைக்கண்டா பயந்துவிட்டாய்?"

வினயனின் தோள்களைப் பிடித்த வண்ணம் எட்டிப்பார்த்தாள். தனது பிழையை உணர்ந்தாள். எவ்விதமான பரபரப்போ, வெட்கமோ இன்றி, ஒரு புருஷனின் ஆலிங்கனத்தில் தான் மெய்மறந்திருப்பதைச் சிந்திக்கவும், அவளது வதனத்தில் வெட்கமும் கலவரமும் குடிகொண்டன. அடுத்த நிமிஷம் அவனது கட்டினின்றும் விடுபட்டு ஓடி மறைந்தாள். அதை ஆச்சரியத்துடன் நோக்கிநின்ற வினயன், ஒரு பெருமூச்சுடன் தன் வேலையில் ஈடுபட்டு விட்டான்.

அங்கு, மாயா இரவு பூராவும் உள்ளக் கிளர்ச்சியில் சிக்குண்டிருந்தாள். 'இந்த விஞ்ஞானி ஒரேயடியாக மௌனம் சாதித்து வருகிறானே, அவனது இந்த மௌனத்துவம் எனது உள்ளத்தில் அன்பு வெள்ளத்தைப் பாயச்செய்கிறது. அந்த மௌனத்துவத்தில் என்ன சக்தி இருக்கிறதோ, தெரியவில்லை. சமாதியில் ஆழும் யோகியைப்போல் அல்லவா இவன் கல்லாகச் சமைந்து கிடக்கிறான். இக்கல் நெஞ்சனின் அன்பைப் பெற எவ்வளவு நாட்கள் தான் நான் தவம் கிடப்பது? ஊரில் இல்லாத வதந்தியெல்லாம் பரவத்தொடங்கி விட்டன. அந்த ஊர் வாயை அடக்குவது எப்படி? இவை அவர்கள் காதிற்கு எட்டியிராவா, என்ன? எனக்கே இச்செய்தி எட்டி விட்டதே, அவர்களுக்கு எட்டாமலா இருக்கும்?' என்பது போன்ற எண்ண அலைகள் மாயாவின் உள்ளத்தில் எழுந்தன.

மறுநாள் மாயா 'லெபரெட்டரி'க்குள் போகவில்லை. 'உன் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டேன், வினயா' என்று சாந்தா, சாப்பிடவந்திருந்த வினயனிடம் கூறிக்கொண்டிருந்தாள். வெளியே நின்ற மாயாவின் செவிகளிலும் இவ்வார்த்தைகள் விழுந்தன.

"இந்தமாதிரி வீணாக என்னைத் தொந்தரவு செய்யாதே, அம்மா" என்ற வினயனது சொல் மாயாவின் காதுகளில் 'ஏழையின் புலம்பல்' போல விழுந்தது.

"இதில் உனக்கு என்ன தொந்தரவு? நம் 'மாயா'தான் வீட்டிற்கு லக்ஷ்மியாக விளங்கப் போகிறாள். நீயும் சுகமாக இருக்கப் போகிறாய். வீணாகப் பிடிவாதம் செய்யாதே" என்று தாயார் கூறினாள்.

"இல்லை, அம்மா. என்னை மன்னிக்கணும். நான் இந்தச் சமயத்தில் கல்யாணம் செய்து கொள்ள விரும்பவில்லை."

இச்சொற்களைக் கேட்ட மாயாவிற்கு உலகமே சுழலுவதுபோன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. உடனே தன்னறைக்குச் சென்று தன் படுக்கையில் விழுந்து விசிக்கலானாள்.

— 4 —

மாயா, தன் பெட்டி படுக்கையைக் கட்டிக் கொண்டிருந்தாள். "இதென்ன வேலை, மாயா?" என்று கேட்டவண்ணம் உள்ளே நுழைந்தான் வினயன்.

"நான் ஊருக்குக் கிளம்பப் போகிறேன்" என்று மென்மையுடன் பதில் அளித்தாள் மாயா.

"பெட்டி படுக்கை கட்டுவதிலிருந்தே தெரிகிறதே, அது. என்னைத் தனியே விட்டுவிட்டு ஏன் போக விரும்புகிறாய் என்பதுதான் கேள்வி. உன்னைப் பிரிந்து என்னால் தனியே இருக்கமுடியாது மாயா."

என்ன இது. வினயனது வாயினின்று கிளம்பும் சொற்களா, இவை? கல்நெஞ்சன் என்று எண்ணியிருந்த விஞ்ஞானியினிடமா இந்தவாழ்வின் துடிப்புப் படிந்திருக்கிறது என்ற அதிசய எண்ணத்தில் மாயா கல்லாய்ச் சமைந்து வினயனை நோக்கினாள்.

மாயாவின் அசையாத அதிசயப் பார்வையைக் கண்டு, "மாயா, உன்னைப் பிரிந்து என்னால் தனித்து இருக்க முடியாது. இது சத்தியம். நீ என்னைத் தனியே விட்டுச் சென்றுவிடாதே. அம்மா சொல்லக்கேட்டு ஸகலவிஷயங்களையும் அறிந்துகொண்டேன். ஆனால் நான் உன்னைப் பெற விரும்பினேனே தவிர இழக்க விரும்பவில்லை. அதனால்தான் விவாகம் வேண்டாம் என்று எண்ணினேன். உலக சம்பிரதாயம், என்னிடமிருந்து உன்னைப் பிரிக்கத்தான் விரும்புகிறதுபோலும், அதற்கு இடம்கொடாமல் உன்னுடன் விவாகம் செய்துகொண்டாவது உன்னைப் பெற முயலுவேன். மாயா, நிச்சயம் உன்னைக் கல்யாணம் செய்துகொள்கிறேன். நீயும் என்னைவிட்டுப் பிரிந்துபோகும் பேச்சை நிறுத்திவிடு. உன்னைப் பிரிய நான் சம்மதியேன்" என்று கூறி வினயன் வெகு துரிதமாக வெளியேகினான். இச்சொற்களைக் கேட்ட மாயாவும் பதுமைபோல அசையாமல் அமர்ந்திருந்தாள்.

ஃ ஃ ஃ

சாந்தி மணவறை, புதிய வாஸனை வீசும் புஷ்பங்களாலும், அநேக வாஸனைத் திரவியங்களாலும், மிகவும் மனோரம்மியமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. 'மாயா'வை அலங்கரிப்பதில் சாந்தா விசேஷ சிரத்தை எடுத்துக் கொண்டாள். தேர்ந்த கைகளால் அலங்கரிக்கப்பட்ட மாயா இந்திரபுரியின் இந்திராணிக்கு நிகராக விளங்கினாள். ஸௌபாக்யவதிகளின் சின்னமான குங்குமப் பொட்டு, மாயாவின் நெற்றியில் வெகு ரம்மியமாக விகஸித்துக்கொண்டிருந்தது.

காதலே உருவெடுத்த மாயா வெகு ஒய்யாரமாக வளைகள் ஒலிக்க, மெதுவாக நடந்து சென்று, அறையின் மத்தியில் நின்றாள். வினயன் மிகப் பரிவுடன் எழுந்து அவளது கரங்களை ஏந்திக் கட்டிலில் அமரவைத்தான். பிறகு, தான் சற்று விலகியே உட்கார்ந்தான். 'ஏன் அரட்டைக் கேலிப் பெண்ணே! ஓடிவிடுவேன், ஓடிவிடுவேன் என்று பயமுறுத்தினாயே. இனிமேல் என்ன செய்வாய்? உன்னை விவாக பந்தனத்தில் கட்டிப்போட்டுவிட்டேனே, பார்த்தாயா என் வேலையை?" என்று வேடிக்கை வீராப்புக் கூறினான் வினயன்.

மாயாவின் காதல்வெறி மூண்ட மோகனப் பார்வை, வினயனது வதனத்தில் விழுந்தது. அப்பார்வை — ஆம் — அதே பார்வைதான் வினயனது உள்ளத்தில் வாசனை கமழும் தென்றலை வீசியது. அதைச் சகிக்கமாட்டாமல், வினயன் மயிர்க்கூச்சலுடன் மறுபுறம் திரும்பினான். அடுத்த க்ஷணம் ஏதோ எண்ணிக் கொண்டு எழுந்து நின்று, அடக்கமான குரலில், 'மாயா, நீ தூங்கு. நானும் தூங்கப் போகிறேன்' என்று கூறிவிட்டு விரைவாக வெளியே சென்றான்.

மாயா, தன் அழகு, சகிப்புத்தன்மை இவைகளை அவமதித்து வினயன் வெளியேகியதைக் கண்டு, துயரத்தில் ஆழ்ந்தாள். "இந்தச்சாந்தியிரவை வெகுநாட்களாக எதிர் நோக்கி நிற்கும் சாந்தி முகூர்த்தப் பெண்ணாகிய எனக்கு ஒரு முத்தம்-ஒரு சிறு முத்தம்கூட அவர் அளித்துச் செல்லக்கூடாதா? முத்தம் பெறும் உரிமை எனக்குக் கிடையாதா? யௌவன தசையைப் புதிதாக அடைந்திருக்கும் பெண்ணின் மான சம்ரக்ஷணத்தின் பொருட்டாவது ஒரு சிறு முத்தத்தை அவர் ஏன் செலவழித்திருக்கக் கூடாது? ஒரு சிறு முத்தத்தை இந்தச் சாந்தி இரவில் அவர் அளித்துச் சென்றிருந்தாரானால், எனக்கு எவ்வளவு மகிழ்வு ஏற்படும்? அந்த அழியா நினைவில் நான் என்னையே மறக்க முயல

மாட்டேனா? இந்த மங்களகரமான இரவையும் இந்த இரவிற்காகத் தவம் கிடந்து காத்திருந்த ஒரு பெண்ணின் பிறப்பையும் வியர்த்தமென எண்ணி அவமதித்துச் சென்றாரே, அது ஏனோ தெரியவில்லை!...ஆம் நான்தான் பிழை செய்தேன். கல்லில் நீர் சுரப்பதுண்டா? கல்நெஞ்சனிடம் அன்பை எதிர்பார்த்த நானல்லவா புத்தியற்றவள். 'ஒருவித குற்றமும் அற்ற பெண்ணின் வாழ்க்கைச் சுகத்தை நான் கெடுக்க விரும்பவில்லை' என்று அவர் கூறினாரே ஒரு சமயம். அதன் பொருள் எனக்குச் சரியாக விளங்கமாட்டேன் என்கிறதே" என்ற இம்மாதிரியான எண்ணங்களில் தன்னையும் உலகையும் நொந்துகொண்டாள்.

காலையில் வினயன் தேநீர் அருந்தும் பொருட்டு மேஜையருகில் உட்கார்ந்திருந்தான். இராக்கண் விழித்ததனால் சிவந்திருந்த கண்களுடன் மாயா வினயனுக்குச் சிற்றுண்டி கொண்டுவந்தாள். அவளது வாடிய முகத்தைக் காண வினயனுக்குச் சகிக்கவில்லை. மனத்துள் ஒருவிதத் தாக்குதல் ஏற்பட்டது. அத்தாக்குதல் அவனது உள்ளத்தையே பிளந்துவிடும்போலிருந்தது. ஆழ்ந்த காதலைக் காட்டும் பார்வையுடன், மாயாவை நெருங்கி, அவளது தலையைத் தடவிக்கொடுத்துக் கொண்டே, "வா, மாயா, நேரமாகிறது. நாலைந்து நாட்களாக வேலை சரிவர நடப்பதே இல்லை. இன்றாவது கொஞ்சம் செய்வோம், வா, 'லெபரெட்டரி'க்கு" என்று கூறினான். மாயாவும் மந்திரவசப்பட்டவள்போல், வினயன் பின்னால் சென்றாள்.

காலதேவன் தனது ரதத்தை ஓட்டிக்கொண்டேயிருந்தான். வருஷத்திற்குப் பிறகு வருஷமாக ஓடி மறைந்தன. வினயனது உள்ளத்தும் காதல் அலைகள் அடித்தன. ஆதுரத்தை அடக்கிக்கொண்டு, விலகியிருந்தே காதல் தேவதையைப் பூஜித்துவந்தான். பூஜையின் ஒலி கேட்டு மாயாவின் காதல்வெறி, விருத்தியடைந்துகொண்டே வந்தது. நாளுக்கு நாள் காதல் பெருக்கை, வயிறு நிரம்ப, ஆசை தீர, பருகவேண்டும் என்ற ஆசை அவள் மனத்துள் அதிகரித்தது. கணவனின் ஆலிங்கனத்தைப் பெற்று, காதல் ஒலியை அனுபவிக்க வேண்டுமென விரும்பினாள். இவற்றையெல்லாம் விரும்பிய அவளுக்குக் கிடைத்ததெல்லாம், சூன்யத்தினின்றும் எழுந்த 'இல்லாமை' என்ற பேரொலிதான்.

நிலவு நிறைந்த இரவு. நாவல் மரத்தின் கிளையொன்றில் மறைந்து உட்கார்ந்துகொண்டு குயில் இனிய காதல் கீதம் பாடிக்கொண்டிருந்தது. மாயாவின் ஹிருதய வீணையில் அதன் எதிரொலி எழுந்தது. உடனே அவளது யௌவனம் விழித்துக்கொண்டது. மாயா ஒய்யார நடையில் பூங்காவை அடைந்தாள். மரங்களின் இலைகளில் மறைந்துகொண்டு இயற்கை ராணி புன்முறுவல் பூத்தாள். இயற்கை ராணியின் அழகைக்காண எண்ணியோ, காதல் வெறியில் மூழ்கியோ, தெரியவில்லை, மாயா இலைகளை உதிர்த்து எறிந்தாள். பூங்காவிலுள்ள செடி கொடிகளும் காதல் வெறிகொண்ட மாயாவிற்குத் தலை வணங்கின. மாயா அவைகளைக் கால்களால் மிதித்த வண்ணம் பூங்காவில் இங்கும் அங்கும் சுற்றிக்கொண்டிருந்தாள். இதே சமயம் வினயன் மெல்ல மெல்ல அடிவைத்துச் சென்று மாயாவின் தோள்களில் கைவைத்துக் கூறினான். "மாயா-இந்த வேளையில் இங்குவந்து தூங்காமல் என்ன செய்துகொண்டிருக்கிறாய்; போய்த் தூங்கு. வீணாக உடம்புக்குச் சிரமம் கொடுத்துக்கொள்ளாதே".

வினயனது அந்த ஸ்பரிசம் மாயாவின் ஒவ்வொரு நரம்பிலும் ஒரு அலாதி வெறியை உண்டுபண்ணியது. அவ்வெறியில் கணவனை இறுகத் தழுவிக்கொண்டாள். வினயனது ஒவ்வொரு நரம்பிலும் அவளது உஷ்ணப் பெருமூச்சு ஒருவித அதிர்ச்சியை உண்டாக்கியது. சிறிது நேரத்திற்கெல்லாம் எந்த நம்பிக்கையுடனோ தெரியவில்லை, வினயனது வதனத்திற்கருகில் ரொம்ப ஸமீபமாகத் தனது முகத்தைக்கொண்டுபோனாள். நிறைந்த நிலவின் ஒளியில் காதலைப் பருகக் கருதும்—துடிக்கும் அவளது உதடுகளையும், அன்பை எதிர்நோக்கும் கண்ணொளியையும் நோக்கினான் வினயன். அவனது பௌருஷம் வாய்ந்த உள்ளத்தும் காதல்வெறி மூண்டது. அடக்கிவைத்திருந்த அணை ஆதுரத்தில் உடைத்துக்கொண்டுவிடும்போலிருந்தது. மிகவும் பிரயாசையுடன் அதைத் தடுத்துக்கொண்டு, 'மாயா உன்னை நான் இழக்கவிரும்பவில்லை. வீணாக ஆத்திரப்படாதே' என்று கூறியவண்ணம் தன்னை விடுவித்துக்கொண்டு தனியே அமர்ந்தான்.

"இப்பசப்பு வார்த்தைகளையெல்லாம் நான் கேட்க விரும்பவில்லை. கல்நெஞ்சம் படைத்த தங்களைப் பூஜிக்கும் சக்தி என்னிடம் இல்லை. புதிதாக யௌவன தசையை அடையும் பெண்ணின் முதல் முத்தத்தை அவமதித்துப் பாழ்படுத்திவிட்டீர்கள். ஒருகால் அந்தப் புதுப்பெண் அதைச் சகித்துக்கொண்டுவிட்டாள். ஆனால் இன்றைய பூர்ண யௌவனத்தை அடைந்த இப்பெண்ணினிடம் தங்களது அந்த அவமதிப்பைச் சகித்துக்கொள்ளும் சக்தியில்லை. ஒரு சிறு-லேசான-முத்தத்தை, மனைவி கணவனிடம் பெற அருகதையற்றவளா, அதற்கு".

"அருகதையற்றவள் என்று நான் கூறவில்லையே. மாயா, ஒன்றல்ல. கணக்கில் அடங்காத முத்தங்கள் என் ஆருயிர்த் தோழி மாயாவிற்காக இந்த உள்ளத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன".

"அப்படியானால் அவை, என்று எந்தச் சந்தர்ப்பத்தில் உபயோகிக்கப்படுமோ?"

"மாயா, அந்தக் கொலைபாதக முத்தங்கள் எனது உள்ளத்துள்ளேயே அடங்கியிருக்கட்டும். தயவுசெய்து என்னிடமிருந்து அதைப் பெற விரும்பாதே".

"கொலைபாதக முத்தங்களா? இல்லவே இல்லை. அதிமதுரமானவை அவை".

"இல்லை மாயா. அவை புலிபோல ரத்த வெறி பிடித்தவை".

"இல்லை, புஷ்பங்களைப்போல மோகிக்கும் சக்தி வாய்ந்தவை".

"ஸர்ப்பத்தைப்போல விஷம் நிரம்பியவை அவை".

"அப்படியிருக்கவே முடியாது. அமிருதம் போல இனிபானவைதான் அவை".

"நீ கூறுவது தப்பு மாயா. அவை அமிருதத்தை நிரப்பும் நரம்புகளிலேயே விஷத்தையும் நிரப்பிவிடுகின்றன. முத்தங்களில் நிரம்பியிருக்கும் வெறி மயக்கந்தான் ஆயுளை உறிஞ்சிவிடுகிறது. என் முதல் மனைவி விமலாவை என்னிடமிருந்து இந்த முத்தங்கள்தான் பிரித்துவிட்டன. இவைகளின் வெறியில்தான் நாங்கள் ஆழ்ந்திருந்தோம். இந்த முத்தங்கள் தாம் அவளை உறிஞ்சிவிட்டன. தன் வரமாகிய குழந்தையைக்கொடுத்து இவைகளின் காரணமாகத்தான் அவள் பிரஸவ வேதனைப்பட நேர்ந்தது. முத்தம் கொடுத்த நான் அவளது தலைமாட்டில் நின்றுகொண்டு, அவள்படும் அவஸ்தைகளையெல்லாம் கண்ணால் கண்டேன்! கடைசி வரை அவஸ்தைப்பட்டு முத்தங்களின் மூல்யத்தை அளிக்கும்பொருட்டு அப்பாவிப்பெண் உலகை நீத்துச்சென்றாள். கவனித்துக்கேட்கிறாயா, மாயா. வாழ்க்கையில் இரண்டாவதாக உன்னைக்காதலிக்கும் ஸந்தர்ப்பம் ஏற்பட்டது. நான் எவ்வளவோ அதைத் தடுக்க முயன்றேன். மனத்தை அறிவுறுத்தினேன். பாழும் மனம் அதற்குச் செவி சாய்க்கவில்லை. அதற்குப் பிறகு கல்யாணம் நடந்ததெல்லாம் நீ அறிந்ததே. நீ என்னை அணுகும்பொழுதெல்லாம், என் மனத்துள் எழும் ஆதுரத்தை அடக்கமுடிவதில்லை. இருந்தாலும் பழைய முத்தங்களின் சுமையை நினைக்கும்பொழுது மனம் துணுக்குறுகிறது. நான் சொல்வது காதில் விழுகிறதா மாயா? நான் பிரயாசைப்பட்டு ஆதுரத்தையடக்குவது எல்லாம், உன்னை இழக்க விரும்பாமல் இருப்பதனால்தான். மாயா, உன்னை அடையத்தான் விரும்புகிறேன். இழக்க விரும்பவில்லை. தெரிகிறதா? போய், வருத்தமில்லாமல் தூங்கு".

மாயா, அவனது ஒவ்வொரு வாக்கியத்தையும் வருத்தமும் ஆச்சரியமும் கலந்த பாவத்துடன் கவனமாகக் கேட்டாள். "அவர் காட்டும் இந்த அன்பு, இந்த மதிப்பு, இந்த மரியாதை எல்லாம் என்பொருட்டல்லவா? இப்படிப்பட்டவரையா நான் கல்நெஞ்சன் என்று கூறுகிறேன். இந்த ஸாதகனின் ஸாதனைக் கோயிலுள் சென்று, கட்டுப்பாடின்றி நிர்வாண நிருத்தியம்புரிய ஆரம்பித்துவிட்டேனே. என் மடமையை என்னவென்று உரைப்பது? சீச்சீ, நான் ஒரு பெண் மாதிரி! கணவனின் அன்பிற்குப் பாத்திரமான மாதர், என்னைப்போலொத்த இவ்வுலகில் கிடைப்பது அரிது. எனது வாழ்க்கையின் கௌரவம் பிறமாதர்களது வாழ்வில் கிடைப்பது அரிது' என்ற எண்ணத்தில் அன்று சுகமாகத் தூங்கினாள்.

— 5 —

மாசி மாதம் பிறந்தது. மாயாவின் வதனத்தில் முல்லைச்சிரிப்பு வைர விளக்குப்போலப் பிரகாசித்து வந்தது. குடும்ப காரியங்களிலோ, 'லெபரட்டரி' வேலைகளிலோ, சிநேகிதிகளுடன் பேசுவதிலோ மாயா உத்ஸாகத்துடன்தான் ஈடுபட்டு வந்தாள். தன் கணவருடன் சிரித்துப் பேசி மிக்க கர்வத்துடன் தன் நாட்களை ஒய்யாரமாகக் கடத்திவந்தாள்.

மாயாவின் தோழிகள், தங்களது தாம்பத்திய வாழ்க்கையின் விசித்திரங்களையும், முத்தங்களின் பல்வேறு விதங்களையும், ஆலிங்கனத்தின் அற்புதங்களையும், காதற் கடிதங்களையும் மாயாவினிடம் ரகஸ்யமாகக் கூறிவந்தனர். சிலர் கடிதங்களையே அவளுக்குக் காட்டிவந்தனர். தோழிகளின் தாம்பத்திய வாழ்க்கையின் ஆனந்தத்தை நினைக்கும்பொழுதெல்லாம் 'நாம் இம்மாதிரியெல்லாம் கொடுத்துவைக்கவில்லையே' என்ற குறையில் உள்ளம் துடிக்கும். கண்கள் நீர்த்திவலைகளை உதிர்க்கும். உலகத்திற்குத் தன் வாழ்க்கையைக் காட்டாமல் இருக்கும்பொருட்டுத் தனிமையில் கண்களைத் துடைத்துக்கொள்வாள்.

மாசி மாதம் மறைந்தது, பங்குனி பிறந்தது. பங்குனிக் காற்று மரங்களின் இலைகளுக்குத் தன் முத்தத்தை ஈந்து சென்றது. மாயாவின் கண்கள் இயற்கையின் இந்த லீலைகளை நோக்கும். உள்ளம் நெகிழ்ந்து, வேலையை மறந்து இக்காட்சியைப் பார்க்க ஆரம்பித்துவிடுவாள். வினயன் கூப்பிட்டுக் கூப்பிட்டுச் சலித்துப்போவான். இயற்கைக் காட்சியில் லயித்துநிற்கும் மாயா பதிலே பேசமாட்டாள். இப்படியே மாயா, சிறிது சிறிதாக மனோவியாதியில் சிக்குண்டாள். மனோவியாதி, தன் சக்தியைக்கொண்டு அவளைத் துர்ப்பலமாக்கிவிட்டது. கொஞ்ச நாட்களுக்கெல்லாம், மாயாவின் நகை ததும்பும் வதனம் கறுக்க ஆரம்பித்துவிட்டது. வினயனுக்கும் மாயா நோய்வாய்ப்பட்டு விடுவாளோ என்ற சந்தேகம் உதித்தது. அதற்கேற்றாற்போல மாயா எழுந்திருக்கச் சக்தியற்றுப் படுத்தப் படுக்கையானாள். சிகித்ஸை ஆரம்பிக்கப்பட்டது.

மாயாவின் தளர்ந்த சரீரம் நாளுக்கு நாள் தளர்ந்ததே தவிர குணப்படவில்லை.

ஒரு நாள் நடுநிசியில் மாயா பிதற்றவாரம் பித்தாள். "இனிமேல் நானாவது பிழைக்க வாவது. கணவன்து முத்தத்தை எதிர்நோக்கி எதிர்நோக்கி ஏமாந்தேன். முத்தம் கொடுத் தால் இறந்துவிடுவேன். கொடுக்காவிட்டால் இறக்கமாட்டேனுக்கும். அவள் முத்தம்பெற்று இறந்தாள், நான் முத்தம் பெருமலேயே இறக்கப்போகிறேன். முத்தம் மாந்தர்களைக் கொல்லும் வஸ்துவாக இருந்தால் இந்த உலகத்தில் இவ்வளவு பிராணிகள் உயிர் தரித் திருப்பானேன். இவ்வளவு படித்த உங்களுக்கு உலகத்தின் இந்தச் சிறு இயற்கை இயல்பு கூடத் தெரியவில்லையே. 'மாயா, உன்னை இழக்க விரும்பவில்லை. பெறத்தான் விரும்பு கிறேன். அதனால்தான் நான் உனக்கு முத்தம் கொடுக்கவில்லை' என்று சொன்னீர்களே! இப்பொழுது முத்தம் கொடாமலே என்னை இழுந்துவிடப் போகிறீர்களே. இனி என்ன செய்வீர்கள்?" இம்மாதிரி சொல்லிய வண்ணம் மாயா பேய்ச்சிரிப்புச்சிரிக்கலானுள். அருகில் அமர்ந்து இதையெல்லாம் செவியுற்ற வினயன் திடுக்கிட்டு "மாயா, மாயா இதென்ன?" என்று உரக்க வினவினுன்.

மாயா விழித்துக்கொண்டாள். விழீத்துக் கொண்ட அவசரத்திலே, என்னவோ, மாயா வீற்கு மூச்சுத்திணற ஆரம்பித்தது. "இனி பிழைக்கமாட்டேன் போலிருக்கிறது" என்று சிரமத்துடன் கூறினுள்.

"மாயா, இதென்ன கூறுகிருய்? என்னைத் தனியே விட்டுப்போவதா? கனவிலும் நினைக் காதே. அவளை இழந்தேன், முத்தத்திற்காக, முத்தம் கொடுத்து, முத்த வெறியில் மூழ்கி. ஆனுல் இன்று முத்தத்திற்காக, முத்தம் கொ டுக்காமல், முத்தத்தின் ஆசையை உதறித் தள்ளி, உன்னை இழப்பதா! மாயா, அது முடி யாது. மாயா, என்னை உதறித் தள்ளிவிடாதே! உனக்கு இதோ முத்தம் தருகிறேன். மாயா, மாயா என்னைக் கைவிடாதே" என்று கூறிய வண்ணம், குனிந்து மாயாவின் கன்னத்தில் முத்தம் இட்டான்.

மாயாவும், சற்றுத்தெளிந்து தன் கணவனது கன்னத்தில் முத்தமீந்தாள். வினயனும் மரண தேவதையை அழைத்துவந்த முத்தத் தைப் பூஜித்து மரணத்தை ஜயிக்கும் முயற்சி யில் ஈடுபட்டான்.

மரண தேவதை முத்தத்தின் சிபாரிசை ஏற்றுக்கொண்டு மாயாவை, வினயனுக்குத் துணையாக வைத்துவிட்டு மறைந்துவிட்டாள்.




# பண்ணைத் தெய்வம்

கௌரி

அஞ்சலை அப்பொழுது சிறியவள். கறுப்பனுக்கும் முருகனுக்கும் சோறு போட்டுக்கொண்டிருந்தாள். கறுப்பன் கூறியது தான் அவளுக்கு மிகவும் பிடித்தது. அவளுக்கும் அதில்தான் ஆசை. ஆனால் முருகன் ஏன் இப்படிப் பேசுகிறான்? அவள்பேரில் அவனுக்குப் பொறாமையா? ஏன்? இதுதான் அவளுக்குப் புலப்படவில்லை. அவள் நன்றாய் இருக்கக்கூடாது என்ற எண்ணமா?

"அவன் யாரோ என்னவோ? அவனைக் கண்டுகிட்டு மயங்கிட்டயே அதுக்குள்ளாச்சியும். நம்புளுக்கு இதெல்லாம் சரியா வருமா? நான் சொல்றேன்னு கேளு. வாணாம். அந்த ரோசனையே உட்டுடு" என்றான் முருகன்.

"எலே, போடா, இம்புட்டு பயல்-என்ன தெரியும் ஒனக்கு? ரெண்டு எளுத்துத் தெரிஞ்சவன்னா அது வேறேதான். நீயும் பேசரயே? வருசம் வருசமா பண்ணையிலே கிடந்துகிட்டு என்னாபண்ணி கிளிச்சுப்பிட்டோம்? ஒரு களுத்தருப்பு இல்லே. சவனேன்னு புள்ளேயே கொடுத்தா அவளாச்சியும் சொகமா இருப்பாளில்லே? நீதான் சொன்னா ஒண்ணும் கேக்கமாட்டேன்னுட்டே' என்றான் கறுப்பன்.

"என்னவோ இப்படி அளுதுகிட்டுக்கிடக்கறயே? இப்போ என்ன முழுகிப் போயிடுச்சி? இம்மா வருசமா சப்பிடாமெயா இருக்கம்? அந்த சாமி அவளை பாக்காமெயா உட்டுடும்?" என்றான் முருகன் மறுபடியும்.

கறு: "போடா, என்ன பொளெப்பு? எம்புட்டு ஒளச்சா என்ன? வேணும்னா ரெண்டு காசு புரளுதா கையிலே? இல்லே, எதாச்சியும் ரொக்கம்தான் தக்குதா? ஒண்ணும் இல்லே. மாடு கணக்கா ஒளெக்குதே அதைத்தான் கண்டிச்சு. நம்புளுக்குதான் வேறே பொளெப்பு இல்லேன்னா அவளாச்சியும் நல்லா இருப்பாளில்லே? நேத்து பூசாரிகூட என்ன சொன்னாரு தெரியுமா? அவளைக் கட்டிக்கிட்டா அஞ்சலை ராசாத்துரி மாதுரி இருப்பளாம். அடுத்த வருசம் இதுங்காட்டியும் நம்ம ஊட்டுலே புள்ளே இருக்குனல்ல சொல்றாறு. சும்மா சத்தம் போட்ரயே? அவரல்லா சொல்றாறு அப்படி?"

முரு: "ஆமாம், சாத்துரமும் சொல்லிச்சு இளவும் சொல்லிச்சு, அல்லாரும் சொல்றாப்பிலே உனக்குப் பைத்தியம்தான் பிடிச்சுடுச்சி. நீ சொல்ரதே கேட்டுக்கிட்டு அதுவுமல்லா குதிக்குது கிடந்துக்கிட்டு. ரெண்டுபேரும் எப்படியாச்சியும் போங்க. எனக்கு என்ன?" என்று சொல்லிக்கொண்டே முருகன் வெளியில் போய்விட்டான்,

இவர்கள் பேசிக்கொள்வதற்கு ஒன்றும் பதில்சொல்ல முடியாவிட்டாலும் அஞ்சலையின் மனதில் இதைக் கேட்டதும் ஏதோ ஒரு கலக்கம் உண்டாகியது. உள்ளே இருந்தவள் கறுப்பன் இருந்த இடத்திற்கு வந்து நின்றாள்.

"அவன் எப்பவும் அப்படிதான் சொல்லிகிட்டுக் கிடப்பான். அதெல்லாம் ஒன்னும் காதிலே வாங்காதே தெரிஞ்சுச்சா? இனிமெ எனக்கும் வயிசாயிடுச்சி, இது ஒரே ஒரு ஆசைதான். உன்னே கட்டிகொடுத்துடரேன். முருகனுக்கும் ஒரு நல்ல பெண் பிடிச்சு கட்டிட்டா எனக்கு உட்டுது. அவன்தான் சொன்னா ஒண்ணும் கேக்கமாட்டான். நீயாச்சியும் இதை செய்யனும். புள்ளேங்களே போட்டு இந்த பண்ணையிலே அடிக்காதே. எப்படியாச்சியும் ரெண்டு எழுத்து படிக்க வச்சுடு. கேட்டியா அஞ்சலை? அது ஒன்று தான் ஆசை இம்மாங்காலமா" என்றான் கறுப்பன்.

அந்த ஊரில் கறுப்பக் கிழவனார் என்றால் தெரியாதவர் கிடையாது. ஊர் பெரிய பண்ணையில் பட்டிக்காரன். நல்ல செல்வாக்கு உண்டு. நல்ல வீடு வாசல், வண்டி, காளைகள் இரண்டு ஜோடி எல்லாம் உண்டு. ஆனால் வெகு நாட்கள் வரையில் மக்கள் கிடையாது. இது ஒரே ஒரு குறைதான். அஞ்சலையும் முருகனும் கறுப்பனுக்கு அந்தக் காலத்தில் பிறந்த செல்வக் குழந்தைகள். முருகன் மூத்தவன். ஆனால் இவ்வளவு வருஷங்கள் கழித்துத் தெய்வம் கண்ணைத் துறந்தது என்றாலும் சீக்கிரத்திலேயே வீட்டுத்தெய்வம் கறுப்பனின் மனைவியைக் கொண்டுபோய்விட்டது. அதனால் அஞ்சலையும் முருகனும் கறுப்பனையே தாய் என்று நினைத்து வளர்ந்தவர்கள். எவ்விதம்தான் வளர்ந்தார்களோ அவனுக்கே தெரியாது. அஞ்சலை நன்றாய் வளர்ந்து கலியாணத்திற்கு நின்றதுதான் அவனுக்குத் தெரியும். "ஆத்தாளை ஒரு நாள் பார்க்கல்லே, உரிச்சுவச்சாப்போலே அப்படியே நிக்குது பாரு" என்றான் அடிக்கடி.

கறுப்பனுக்கு நல்ல மதிப்பு. பண்ணையில் நல்ல பெயர், ஐயரிடம் நல்ல செல்வாக்கு எல்லாம்தான் இருந்தது. இருந்தாலும் ஒரு பயித்தியம். இரண்டு எழுத்துப் படித்தவன் என்றால் அவனிடம் தனி மோகம். முருகனை எப்படியாவது பள்ளியில் போடவேண்டுமென்று எவ்வளவோ ஆசைப்பட்டான்.

ஆனால் பண்ணை—திடீரென்று எவ்விதம்விட்டு விடுவது? தான் வைத்தது எவ்வளவு சட்டம், வைத்தது எவ்வளவு செடிகள்? அன்புடன் தடவி வளர்த்தவை எவ்வளவு பசுக்கள், காளைகள்? எல்லாவற்றையும் தனக்குப்பிறகு பார்ப்பதற்கு யார்? முதலில் அய்யர் பேசாமல் இருந்துவிடுவாரா? வேறு வழியில்லை. மகனைத்தான் பண்ணையில்கட்டி அடிக்கவேண்டும். அஞ்சலையைப்பற்றி எவ்வளவோ ஆசை. முருகனைப் பள்ளியில்போடாத குறைக்கு இவளையாவது இரண்டு எழுத்துப்படித்தவனுக்குக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டுவிட்டான். இவனுடைய விருப்பம் சுலபமாகப் பூர்த்தியாகவில்லை என்றாலும் அஞ்சலையின் அதிருஷ்டம் அவளுக்கு ஒரு கணவன் கிடைத்தான். முருகன் நன்றாய் விவரம் தெரிந்தவன். சுமார் இருபது வயதுக்கு மேலாகிவிட்டது. அவனுக்கு இந்தக் கலியாணம் பிடிக்கவில்லை. இதற்காகத் தந்தைக்கும் மகனுக்கும் எவ்வளவோ வாக்குவாதம். இருந்தாலும் கறுப்பனுடைய ஆசை. அவன் நினைத்ததைச் செய்தே முடித்தான். அஞ்சலைக்கும் இதில் பரம திருப்தி, சீக்கிரத்திலேயே கறுப்பன் வீட்டிற்கு மருமகன் வந்தான். கறுப்பன் கண்ணை மூடிக்கொண்டுவிட்டான்.

கறுப்பன் நினைத்தபடியா அஞ்சலை இருந்தாள் என்று பார்ப்போமாகில் எது செய்தாலும் எல்லாம் எழுத்து ஒன்று தனியாய் இருக்கிறது. அஞ்சலையின் கணவன் இரண்டு எழுத்துப் படிக்கத்தெரிந்தவன். அவ்வூர்ப் பள்ளியில் வாத்தியார் வேலை பார்த்துவந்தான். அஞ்சலையைப் படித்தவன் எவ்வளவோ நன்றாய் வைத்துக்கொள்வான் என்றுகறுப்பன் நினைத்துக்கொண்டு நிம்மதியாய்க் கண்ணை மூடினனே ஒழிய வாஸ்தவத்தில் அவள் அவனுடன் வாழ்ந்தது மிகவும் குறைவே-சுபாவத்தில் மிகவும் முரடன். 'முணுக்' என்பதற்கு முன்னால் கோபம் தலைக்குமேல் வந்துவிடும். அவன் செய்யும் உத்தியோகத்தினால் அவன் உள்ளமும் உணர்ச்சியற்றுவிட்டதோ என்னவோ? சில சமயங்களில் ஒரு சிறு பிழைக்குக் கூட அஞ்சலையை அப்படிப் போட்டு அடித்துவிடுவான். பிரம்பெடுத்துப் பையன்களை அடிக்கும் அக்கைகளுக்கு வெறும் கையோடு அடிப்பது அடிப்பது அல்லபோலும்? வாஸ்தவத்தில் அவளுக்குக் கணவனிடம் ஒருபயம். இத்துடன் ஒரு அளவு கடந்த மதிப்பு. குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் அல்லவா குட்டுப்படவேண்டும்? என்பதுபோல் படித்தவன் எல்லோரையும் போல் அல்ல. உத்தியோகம் செய்து சம்பாதிக்கிறவன். எவ்வளவு விஷயங்கள் தெரிந்தவன்? ஒரு கதை சொன்னாலும் பாட்டுச் சொன்னாலும் எவ்வளவு அருமை! அவன் ஒவ்வொன்றையும் சொல்லிச்சொல்லி அஞ்சலைக்கு எவ்வளவு ஒழுக்கமும் சுத்தமும் உண்டாய் இருக்கிறது? அவளுடன்கூட இருந்தவர்களில் ஒருவர் இவ்வளவு மேன்மையாய் இருக்கிறார்களா? ஏதோ சற்றேகோபக்காரன். அடித்தாலும் புடைத்தாலும் படித்தவன். ஊரில் நல்ல மதிப்பு உள்ளவன். இதையெல்லாம் நினைக்க நினைக்க நாளுக்கு நாள் அவனிடத்தில் அவளுக்கு மதிப்புப் பன்மடங்கு வளர்ந்தது. எழுத்துக்கள் கற்றுக்கொள்ள வருபவர்களும், வீடும், அளவுகடந்த பெருமை. கறுப்பன் சாத்திரம் எல்லாம் சொன்னபடி சீக்கிரத்திலேயே மகன் பிறந்தான். அஞ்சலையின் பெருமைக்குக் கேட்கவேண்டுமா? இருவருமாய்க் குழந்தையைக் கொஞ்சுவதும் இதுவும்தான் வேலை.

ஒரு நாள் மகனை மடியில் போட்டுக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருந்தாள். அவள் புருஷன் எதிரில் கயிற்றுக்கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"அப்பாறு இருந்தா எம்மாஞ் சந்தோசப்படுவாரு? வாய்க்கு வாய் சொல்லிக்கிட்டே இருந்தாறு. பாளுந்தெய்வம் அதுக்குள்ளுரவா கொண்டுகிட்டுப் போவனும்?" என்றாள் அஞ்சலை.

"போனதைப்பத்தி ஏன் சும்மா பேசிட்டு கிடக்கிறாய்? எல்லாம் அதிட்டம் ஒன்னு வேணுமா?" என்றான் அவள் புருஷன்.

அஞ்: "உன்னைப்போல புள்ளேயும்படிச்சல்லா உத்தியோகம் பண்ணப்போவுதாம். எல்லாம் அப்பவே அல்லா சொல்லிக்கிட்டு இருந்தாறு. ஆம்பளைப்புள்ளே பொரக்குமன்னுகூட அப்பவே அவருக்குத் தெரிஞ்சுடுச்சி" என்று அவள் முடிப்பதற்குள் முருகன் உள்ளே நுழைந்தான்.

"வாங்க மச்சான்" என்று அழைத்தான் அஞ்சலையின் புருஷன்.

"யான் அண்ணாச்சி இம்மா நேரம்? ஒளிஞ்சு வாரேன்னியே? வேலை ஒளியல்லையாங் காட்டியும்?" என்றாள் அஞ்சலை.

முருகன் வந்து அஞ்சலையின் முன் உட்கார்ந்தான். குழந்தையைஎடுத்து மடியில் போட்டுக் கொண்டு "பூசாரி இருக்காரங்க இல்லே, அவுங்களைப் பார்த்துக்கிட்டு வாரேன்" என்றான்.

அஞ்: "பூசாரி ஊட்டுக்கா? அங்கே என்னா ஜோலி? முன்னமே சொல்லியிருந்தா பயலைப் பத்திகூடவிசாரிச்சுட்டுவந்திருக்கலாமில்லே?"

முரு: "அதைத்தானே இப்போ விசாரிச்சு கிட்டு வாரேன்."

அஞ்: "என்ன சொன்னாரு? நல்ல இருப்பனுமா? நல்லா எளுத்துப் படிப்பான்னு அப்பவே சொன்னாரே அப்பாறு?" இதைக்கேட்டவுடன் கடகடவென்று சிரித்தான் முருகன்.

''அப்பாருக்கு சரியான மவள். அதையே அல்ல சொல்லிக்கிட்டு கிடக்கரே. போனேன் பூசாரியை கேட்டேன், நல்லா இருப்பானும் புள்ளே. ஊருக்கே ஒஸ்தியாய் இருப்பானும். போயேன் வேரே என்னுதான் வேணும் ஒனக்கு?'' என்ருன்.

அஞ்:—''வேரே ஒண்ணும் சொல்லலியே?''

''இன்னும் என்ன என்னமோ சொன்ஞரு. அதெல்லாம் உனக்கு என்னுத்துக்கு இப்போ? எனக்கு நேரமாவுது. ஊட்டுக்குப்போரேன்'' என்று சொல்லிக்கொண்டு முருகன் எழுந்தான்.

உள்ளே சென்று இரண்டு தோசையை எடுத்து வந்து அவன் முன் வைத்தாள் அஞ்சலை.

''வாணும் அஞ்சலே, எனக்குப் பசி இல்லை'' என்று சொல்லிவிட்டு முருகன் வீட்டிற்குப் போய் விட்டான். இப்படி நாட்களும் ஓடின. அஞ்சலையின் மகன் சின்னுனுக்கு இரண்டு வயதும் நிறையப் போகின்றது. அதற்குள் ஊரெங்கும் ஒரு நோய் கண்டது. எங்குப் பார்த்தாலும் ஒரே படுக்கை, தெய்வக்குற்றம் என்ருர்கள் எல்லோரும். பிடாரி கோவிலுக்குப் பூசை போடவேண்டும் என்ருர்கள் குடியானவர்கள். ஆனுல் அதற்குள் எமன் தன் கணக்கை வேகமாக எண்ணிக்கொண்டிருந்தான். இக்கணக்குடன் அஞ்சலையின் புருஷனையும் கூட்டிக்கொண்டு விட்டான். குழந்தை, அவள், புருஷன் மூன்று பேரும் படுத்ததில் அஞ்சலை புருஷன் எமன் வாய்க்கு இரையானுன்.

கணவன் இறந்ததும் அஞ்சலை முருகனிடம் வரச் சம்மதிக்கவில்லை. கையில் கொஞ்சம் ரொக்கம் இருந்தது. வைத்துக்கொண்டு எப்படியோ காலத்தைக் கடத்தலாம் என்று நினைத்தாள். ஆனுல் முருகன் விடவில்லை. ''நீ என்னமோ அப்படி சொல்ரே அஞ்சலை. ஊர் வாயை மூடிக்கிட்டு இருக்குமா? யாராச்சியும் எதாலும் சொன்னுக்கா என் மானமல்லா போவும்? பச்சே புள்ளேயும் வச்சுகிட்டு நீ தனியா இருக்கவாணும்'' என்ருன்.

முருகனுக்கு வெளுத்ததெல்லாம் பால். அவனுடன் வந்து இருந்து விடுவதால் ஒன்றும் சிரமமில்லை. ஆனுல் உள்ளுக்குள் எவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன? அவன் கூடப்பிறந்தவன்—மற்றவர்கள் அப்படியாகுமா? இதை எல்லாம் அவனிடம் யார் சொல்வது? மாட்டேன் என்ருலும் வருத்தப்பட்டுக்கொள்வான். இதைவிட அவளுக்கும் தான் என்ன இருக்கிறது? யோசித்துப் பார்த்துவிட்டு ஒரு முடிவிற்கு வந்தாள். இதில் முருகனுக்கும் ஒரு திருப்தி.

எப்படியோ மாதங்கள் ஆறும் ஓடிவிட்டன. வீட்டில் முருகன் மனைவி எழுந்திருப்பதற்கு முன்பு எழுந்து வேலைகளைப் பார்ப்பாள். குழந்தைகளையும் வீட்டையும் சுத்தமாக வைத்தாள். சில நாட்களிலேயே வீட்டில் ஒரு அழகும் லக்ஷ்மீகரமும் தாண்டவமாட ஆரம்பித்தன .முருகனும் இதை அடிக்கடி புகழ்ந்தான் என்ருலும் அஞ்சலைக்கு மனதில் ஒரு விதமான திருப்தி ஏற்படவில்லை. ஏதோ ஒரு எண்ணம் மனதில் உறுத்திக்கொண்டே இருந்தது. இதற்குக் காரணமும் உண்டு.

வீட்டில் முருகன் மனைவி இரண்டாந்தரம். முதல் மனைவிக்கு இரண்டு குழந்தைகள். இவளுக்கு மூன்று. கூடச்சின்னுன் ஒன்று. இவ்வளவு பெயருக்கும் சம்பாதித்துப் போடவேண்டியவன் முருகன் ஒரே கை. உட்கார்ந்து சாப்பிடுவதென்ருல் அவளுக்குச் சம்மதப்படவில்லை. அவள் மனம் சம்மதப் பட்டதோ படவில்லையோ மற்றவர்கள் ஒன்றும் பேசாமல் இருந்து விடுகிருர்களா? எவ்வளவோ வம்பு! வழக்கு. ''சும்மா குந்திக்கிட்டுச் சாப்பிட முடியுமா? இரண்டு பேருக்குச் சோறு போடரதுன்னு சும்மாவா?'' என்று ஊரார் முருகன் மனைவியிடம் பேசிக் கொள்வது சிலசமயங்களில் அவள் செவியிலும் விழத்தான் செய்தது. இதெல்லாம் முருகனுக்கு எப்படித்தெரியும்? தெரிந்தாலும் இதைப்பற்றிக் கவனிக்கப் போகிருனு? அஞ்சலையின் மனம் கேட்கவில்லை. கேட்டால் முருகன் வேண்டாம் என்றுதான் சொல்லப்போகிருன். நன்ருய்த்தெரியும். பேசாமல் ஒரு வேலைதேடினுள். அய்யர் வீட்டிலேயே வேலை செய்து குழந்தை எடுத்து வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டுவிட்டாள். அவள் மனம் கொஞ்சம் நிம்மதி யடைந்தது. இனி ஒரே ஒரு கவலைதான். அவள் கணவனும் கறுப்பனும் கூறியபடி சின்னுனைப் பள்ளியில் போடவேண்டும்.

இதெல்லாம் நடந்து இரண்டு மூன்று வருஷங்களும் ஓடி விட்டன. சின்னுனுக்கும் ஐந்து வயது நிரம்பியது. ஒவ்வொரு நாளும் சின்னுனை வீட்டில் விட்டுவிட்டுத்தான் அஞ்சலை வேலைக்குச் செல்வாள். ஒரு நாளாகிலும் அவளுடன் சென்று வரவேண்டுமென்று அவனுக்கு வெகு ஆசை. அவளைத்தொந்தரவு செய்துகொண்டே இருந்தான். ஆனுல் அவள் ஒரு நாளாகிலும் அவன் ஆசையைப் பூர்த்தி செய்யவில்லை.

அஞ்சலை வீட்டிற்கு வந்ததுமுதல் முருகனுக்கு உள்ளூற ஒரு எண்ணம். அவள் வந்த நாள் முதல் அவன் நினைத்ததுதான் என்ருலும் சின்னுனுக்குக் கொஞ்சம் விவரம் தெரிய வேண்டுமென்றதுதான். அவனுக்கும் வயது ஆருகப்போகிறது. இன்னும் ஓரிரண்டு வருஷங்களில் ஒரு அரையாள் ஆய்விடுவான். இனி கவலை இல்லை என்று நினைத்துக்கொண்டவன் ஒரு நாள் அஞ்சலையிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தான்.

''யான் அஞ்சலே? ரொம்ப நாளா என் மன சிலே ஒரு ஆசை. என்ன சொல்ரே நீ?'' என்ருன்.

''என்ன ஆசை? சொல்லேன், அதைத்தான் பாப்பம்'' என்ருள் அஞ்சலை.

முரு:- ''நம்ம பயதான் வளர்ந்துட்டான். அய்யர் வயலுக்கு மண் அடிக்க வண்டி கேக்க ராரு. ஒங்கையிலே ரொக்கம் இருக்குதால்லே? அதை போட்டு ஒரு வண்டியும் நல்ல காளை யும் வாங்கிட்டா என்ன? மேலே சின்னன் பயலுக்கு ஓதவுமில்லே?''

முருகனின் கேள்வி அவளைச் சற்றுக் கலக் கியது. ''இதுதான இம்மா ஆசை ஒனக்கு?'' என்ருள் முருகனைப் பார்த்து.

''யான் ஒனக்குப் பிடிக்கலையாங்காட்டியும்?'' என்ருன் முருகன்.

அஞ்சலை ஒன்றும் பேசவில்லை. யோசனை யில் ஆழ்ந்தாள்.

முருகனிடம் வரும்பொழுது அவளிடம் இரு நூறு ரூபாய் ரொக்கம் இருந்தது. அதை முருகனிடம் கொடுத்தாள். துட்டு எவ்வள வோ செலவு. தன் கையில் வைத்துக்கொண் டால் சரியாக வளராது என்பது தெரியும். அய்யரிடம் வட்டிக்குக் கொடுத்துவைத்திருந் தான். அதைத்தான் வாங்கி நல்ல மாடு வாங்கவேணுமென்று அவனுடைய ஆசை. ஆனல் அஞ்சலைக்கு எண்ணமே வேறு. கறுப் பன் என்ன சொன்னன்? அவள் கணவன் என்ன சொன்னன்?

''அஞ்சலே எது எப்படிப் போனலும் புள் ளேயே சும்மா உட்டுடாதே, பள்ளியிலே போடு'' என்ற கறுப்பன் வார்த்தையும் ''புள் ளேயே பண்ணையிலே கட்டியடிக்காதே அஞ்சலே'' என்ற அவள் கணவனின் கடைசி வார்த்தையும் அவள் செவிகளில் கணீ ரென்று ஒலிக்க ஆரம்பித்தன. அவள் ரொக் கத்தைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனல் சின்னனைப் பள்ளியில் போட்டுவிட்டு ஏதாவது இரண்டு காசு வேண்டுமானல் யாரைப்போய்க் கேட்பது? மாடும் வண்டியும் வாங்கி யாருக்கு என்ன பயன்? அவைகளுக்குத் தீனிபோட வேண்டாமா? எல்லாவற்றிற்கும் முருகனைத் தானே தொந்தரவு செய்யவேண்டும்? அவ ளுக்குச் சரியாய்த் தோன்றவில்லை.

''அண்ணச்சி, நீ எது வேணுமாச்சியும் வாங் கிக்க, நான் ஒண்ணும் வானும் எங்கலே. நம்ம சின்னனைப் பள்ளியிலே போட்டுடு. அது ஒண்ணுதான் எனக்கு இருக்கர ஆசை. அவன் அப்பாரும் நம்மா அப்பாருஞ் சொன்னப்பலே ரெண்டு எளுத்து படிச்சாதான் என் மனசு அக்கடான்னு இருக்கும். எல்லாம் ஒனக்கு தெரியாதது ஒண்ணும் இல்லை இல்லே?'' என்ருள்.

திடுக்கென்றது முருகனுக்கு.

'ஆரம்பிச்சிட்டயே நீயும். எளுத்து எளுத்து எளுத்துன்னு.'' இந்த எளுத்தே கட்டிக்கிட்டு என்னபண்ணப்போரம் நம்போ? எளுத்து எளுத்துன்னு ஒன்னைதான் கணத்துலே தள்ளி னுங்களே அப்பாறு, நீயாச்சியும் இதை வுட மாட்டே? இம்மாங் காலமா இந்த எளுத்தா சோறுபோட்டு வருது? அய்யரு அண்ணக்கே பிடிச்சு கேட்டுக்கிட்டே இருக்காரு. கேட்டா என்ன சொல்லுவாரு?

முருகனிடம் எவ்வளவோ பயபக்தி இருந்தா லும் அஞ்சலையின் மனம் இதற்குக் கீழ்ப்படிய இடம் தரவில்லை. அவள் கணவன் இருந்த தும், அவனுடைய கௌரவமும், அறிவும் அவள் அகக் கண் முன்பு வந்து நின்றன. ''வேண்டாம் அஞ்சலை, முருகன் சொல்வதைக் கேட்காதே'' என்று அவள் கணவனும் கறுப் பனுமாய்ச் சேர்ந்து வந்து கூறுவதுபோலிருந் தது. மண்ணையும் எருவையும் சுமந்து மகன் வேலை செய்து பார்க்க அவள் மனம் இடம் தரவில்லை.

''இல்லே அண்ணச்சி, அவுங்க சொன்னப் பலே செய்யாமே போன அவுங்க ஆத்துமா சந்தோசம் அடையுமா? நீ என்ன வேணுமாச் சியும் செய்துக்க. புள்ளேயே மட்டும் பண்ணை யிலே போடாதே. நீ நல்லா இருப்பே'' என்ருள் மறுபடியும்.

முருகனுக்கு என்னவோ இது கொஞ்சமா வது சம்மதப்படவில்லை. இப்படி நினைத்து நினைத்துதானே அஞ்சலையின் வாழ்க்கை வீணய்விட்டது? என்று நினைக்கும்பொழுது எப்படியாவது அவளைச் சந்தோஷமாய் வைக்க வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. சின்ன னைத் தன் கையில் வைத்துக்கொண்டு வேலை வாங்கினல் வேண்டியதைச் செய்யலாம். அய்யர் மனம் குளிரும்படி செய்து ஒரு காணி நிலமாவது வாங்கி அஞ்சலைக்குத் திருப்தியை யும் மகிழ்ச்சியையும் உண்டாக்கவேண்டு மென்று பார்த்தான். எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். நல்லதனமாகவும் சொன்னன். சற்றே கடிந்தும் சொன்னன். ஆனல் ஒன்றும் பயனில்லை. அஞ்சலை அவள் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொன்னள்.

''நீ எதை வேணுமாச்சியும் சேஞ்சுக்க, நான் எதாச்சியும் சொன்னேன? ஒன் இஷ் டப்படி மாடுவாங்கிக் கட்டிக்கோ, எப்படி யாச்சியும் பயலைமட்டும் பள்ளியிலே போட் டுடு—அவனுக்கும் வயசாயிடுச்சி'' என்ருள் ஒரே பிடிவாதமாய்.

''கடைசியில் அவளுக்குத்தான் என்ன சுகம் இருக்கிறது?'' என்று நினைக்கும்பொழுது முருகனும் ஒன்றும் பேசமுடியவில்லை. அவள் விருப்பப்படி சின்னனைப் பள்ளியில் போட்டு விட்டான்.

அஞ்சலையின் விருப்பம் நிறைவேறியது அளவுகடந்த ஆனந்தம். தினம் வேலையிலிருந்து வீட்டிற்கு வரவேண்டியதுதான். பள்ளியில் என்ன கற்றுக்கொண்டான் என்று கேட்பாள். படிக்கச் சொல்லுவாள். எழுதச் சொல்லுவாள். அவன் படிப்பதையும் பலகையை வைத்துக்கொண்டு எழுதுவதையும் பார்த்து முருகனுடைய குழந்தைகளும் ஆசைப்படுவார்கள். ஏன் அவர்களையும் சேர்க்கக் கூடாது? முருகன்பேரில் அஞ்சலைக்கு மிகுந்த வருத்தம்தான். "நாங்கூட சின்னான்போலே படிக்கிறேன் அத்தே. என்னையும் அனுப்பரயா?" என்று குழந்தைகள் கேட்கும்பொழுது அவள் மனதில் அளவில்லாத வேதனை உண்டாகியது. அவைகள்மட்டும் உழைக்கவா பிறந்த குழந்தைகள்? எழுத்துப் படித்தால் வராதா? முருகனை அடிக்கடி தொந்தரவுசெய்தாள். ஆனால் அவளுக்கே இவ்வளவு பிடிவாதம் இருக்கும்பொழுது அவனுக்குமட்டும் எவ்வளவு இராது?

"ஆமாம், போதும் போதும். இப்பவே அய்யர் சொல்ரது பத்தல்லே. எம்புள்ளேங்களையும் சேர்த்துட்டா ஒண்ணுமே வாணும்" என்று தட்டிவிட்டான் முருகன்—இப்படி இரண்டு வருஷங்களும் ஓடிவிட்டன. அஞ்சலைக்கு இருந்த ஆசைக்குச் சின்னானும் நன்றாய்ப் படித்துவந்தான்.

ஆனால் திடீரென்று ஒருநாள் ஒரு சம்பவம் நடந்தது. அதில் அஞ்சலைக்கும் முருகனுக்கும் மனஸ்தாபம்கூட ஏற்பட்டுவிட்டது.

ஒரு நாள் மாலை. முருகன் வீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தான். அஞ்சலை இன்னும் வீடு திரும்பவில்லை. சின்னானும் அவளுடன் போயிருந்தான். திடீரென்று ஊருக்குப் பெரிய கிழவன் இரைக்க இரைக்க ஓடி வந்தான்.

"முருவா, முருவா," என்று ஒரே சத்தம் போட்டுக்கொண்டு உள்ளே ஓடிவந்தான். முருகன் திடுக்கிட்டுவிட்டான்.

"முருவா, அய்யர் சத்தம் போடராரு வூட்டுலே. உன் மறுமவப்பய என்ன செய்திருக்கான் பார்த்துட்டுவா. நான் அப்பவே வேண்டாம்மின்னு சொன்னேனில்லே? கேட்டியா? இப்ப யார் முளிக்கிறது அய்யர் மொவத்துலே?" என்று பதை பதைக்கக் கத்தினான். முருகனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "என்ன பெரியவரே? என்ன நடந்துடிச்சு அப்படி? எனக்கு ஒன்னும் வெளங்கல்லையே" என்றான் படபடப்புடன்.

"எல்லாம் நீயே போய் பார்த்துக்க, நான் ஒன்னும் சொல்லல்லே. எல்லாம் இருக்கிரபடி இருந்தாக்க இப்படியல்லாம் வருமா?" என்று சொல்லிக்கொண்டே என்னவோ முணு முணுத்தான். முருகனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. விழுந்து அடித்துக்கொண்டு ஓடினான்.

அன்று இரவு சின்னானுக்குச் சக்கை உதை. "ரெண்டு எளுத்து தெரியுங்காட்டியும் வந்துடுத்தோ கொளுப்பு? உரிச்சிப்புடரேன் உரிச்சு, இப்படி எல்லாம் ஆடலாம்னு நனைச்சுகிட்டு இருக்கே?" என்று சவுக்கால் நன்றாய் வாங்கிவிட்டான் வாங்கி. விழுந்த உதையில் அப்படியே சுருண்டு விழுந்துவிட்டான் சின்னான். அஞ்சலையும் அப்படியே ஒடுங்கிப்போய்விட்டாள். சின்னானின் பேரில் விழுந்த அடி ஒவ்வொன்றும் அவள் பேரிலேயே விழுவதுபோலிருந்தது அவளுக்கு. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். தாய் உள்ளமல்லவா? ஏதோ தெரியாமல் செய்துவிட்டான். வேணுமென்று செய்தான்? அடிக்கட்டும். அதற்காக இப்படியா? சுருண்டல்லவா போய்விட்டது குழந்தை? மனம் கேட்கவில்லை.

"இப்படி அடிச்சா புள்ளே தாங்குமா அண்ணாச்சி?" என்றாள் மகனைத் தூக்கிக்கொண்டே.

முருகனுக்கோ கோபம் தாங்கமுடியாமல் வந்துவிட்டது.

"வந்துட்டாயா அதுங்காட்டியும் புள்ளைக்கு பரிஞ்சுகிட்டு? மானம்போவுது. மொவத்தைத் தூக்கமுடியல்லே. பேசவந்துட்டே நீ. வாணும் வாணும்-நமக்கு இது சரிப்படாதுன்னு முட்டிகிட்டேனே கேட்டியா? எம்மா வாயின்னு இப்ப தெரிஞ்சுக்க?" என்றான்.

அஞ்: "என்னமோ எதுக்கு எடுத்தாலும் இப்படியே அடிச்சுக்கிட்டுகிடக்கிறயே? யான் அப்படிப்பேசரே? புள்ளையே அடிக்க வாணும்னு சொன்னேனா? ஏதோ அரியாப் புள்ளே செஞ்சுடுச்சு. அதுக்கா இம்மா? என்னாலே ஒனக்கு கஷ்டம்னா நான் வேனும்னா எங்கேயாச்சியும் போயிடரேன். இப்படி எல்லாம் சும்மா பேசிக்கிட்டுக்கிடக்காதே.

இவ்வார்த்தைகள் அஞ்சலையின் வாயிலிருந்து வரவேண்டியதுதான். முருகனுக்குத் தலையே வெடித்துவிடும்போல் அவ்வளவு ஆத்திரம் வந்துவிட்டது.

"வாயைப்பாரு வாயை! ஆத்தாளைப்போல் தானே இருப்பாள் மவளும்? கிளியுதே வாயி. அய்யர் இல்லகாட்டி பள்ளியிலே படிச்சு கிளிச்சடலாம். நெனெச்சுக்கிட்டு இரு. இனிமெ எங்கிட்ட ஒண்ணும்வாணும். ஒம் புள்ளையாச்சு, நீயாச்சு. எங்கே வேணும்னாச்சியும் போங்க. என் மொவத்துலே முளிக்க வாணும். ஊரே சிரிக்குது" என்று ஒரே சத்தமாய்ப் போட்டவன் ஒரே ஓட்டமாய் அய்யர் வீட்டிற்கு ஓடினான். அஞ்சலையின் ரொக்கத்தை வாங்கிக்கொண்டுவந்து வீசி எறிந்தான். அவ்வளவுதான். பிறகு திரும்பிக் கூட பார்க்கவில்லை.

ஒன்றுமில்லாததற்கே ஊர் கூடிவிடும். கேட்கவேண்டுமா துளி கிடைத்துவிட்டால்?

"ஒரு ஆம்பளே சொல்ரதைக் கேக்காமெ நாட்டாமெ பண்ணிஞ உருப்புடுமா புள்ளே? எளுத்தாம் எளுத்து! நம்ம எளுத்துதான் தெரிஞ்சுகிடக்கே? அய்யர் தங்கமானவரு. அவர்கிட்ட போயா இப்படி அல்லாம் புன்றது?" என்று ஒவ்வொருவரும் பேசிக் கொண்டார்கள்.

நடந்த விஷயம் இது. தினம் அஞ்சலே அவனுக்கு அய்யர் வீட்டைப்பற்றி எவ்வள வோ சொல்வாள். அடிக்கடி ஏதாவது சட்டைத்துணி மணிகளோ தின்பண்டங்களோ கொண்டுவந்து கொடுப்பாள். அய்யர் வீட்டில் எல்லோரையும்பற்றி விதம்விதமாய்ச்சொல்லு வாள். சில சமயங்களில் முருகன் குழந்தை களும் அவளுடன் செல்லுவார்கள். ஆனல் இது வரையிலும் சின்னுன் மட்டும் சென்ற தில்லே. அவனே அழைத்துப் போவதற்கு அஞ்சலேக்கே என்னவோ ஒருவிதமான சங்கோசம். அவன்மட்டில் நித்தியம் படித்துக் கொண்டே இருந்தான். ஒரு நாள் அவனுக்கே என்ன தோன்றியதோ என்னவோ? இவ்வளவு வருஷங்களாக அழைத்துப்போகாதவள் அன்று ஏன் அழைத்துப்போகவேணும்? எல்லாம் அவளுடைய போதாத காலம்தான். இல்லாவிட்டால் ஏன் இப்படி எல்லாம் நடக்க வேண்டும்? ஒருநாள் அவனேயும் அழைத்துக் கொண்டு சென்ருள். சின்னுனுக்கும் மிகுந்த சந்தோஷம். குதித்துக்கொண்டு அஞ்சலே யுடன் சென்ருன். அன்றைய தினம் சற்றே தாமதமாய்விட்டது. இருவரும் அவசர அவசர மாய்ப் பறந்துகொண்டு சென்ருர்கள். வீட்டை அடைந்ததும் அடையாததுமாய் அஞ்சலேக்கு நல்ல திட்டுக்கள் கிடைத்தன. மூலேக்கு ஒரு வராய்க் குழந்தைகள் ஓடிவந்து "ஏண்டி இவ்வளவு நாழி?" என்று ஒவ்வொரு பக்கத்திலும் அடித்தார்கள். இதெல்லாம் அஞ்சலேக்குச் சாதாரணம். ஒவ்வொரு நாளும் நடக்கும் சம்பவம். மேலே வேலேயைப் பார்க்கப்போய்விட்டாள். "என்னுடி அஞ்சலே அதிசயமாய் பிள்ளேயே அழைச்சுண்டு வந்தூட்டே? கண்பட்டுவிடப் போகிறது போ" என்ருர்கள் எல்லோரும். ஆனல் வரும் பொழுது குதித்துக்கொண்டுவந்த சின்னுனுக்கு வந்த சிறிது நேரத்திலேயே முகம் வாடிவிட்டது. ஏதோ ஏமாந்தவன்போல் மலங்க மலங்க ஒன்றும் தோன்ருது விழித்தான். எதைப்பார்த்தும் ஒரு உத்சாகமும் இல்லே. யாராவது ஏதாகிலும் கேட்டால்கூட முகத்தைத்திருப்பிக் கொண்டான்.

"என்னடீ? படிச்சு பெரிய உத்தியோகம் பண்ணப்போரானே இல்லேயோ அவன்? அவனுக்கு ஒருவரும் லக்ஷியமில்லே இப்பொழுதே" என்று பரிகாசம்செய்தார் அய்யர்கூட.

"யாண்டா? அய்யருக்கும் அம்மாளுக்கும் கும்புடு. பாக்கணும்னு என்னே போட்டுத் தொளெச்சுக்கிட்டு கிடந்தயே?" என்று எவ்வளவோ சொன்னுள் அஞ்சலே. சின்னுனுக்கு உற்சாகம் தட்டவில்லே. "வீட்டிற்கு வா" என்று அவள் முந்தானேயைப்பிடித்து இழுத்துக்கொண்டே இருந்தான். அவன் மனதில் இருப்பதை அறிந்துகொள்ளாவிடினும் சின்னுனுக்கு ஏதோ பிடிக்கவில்லே என்பதுமட்டும் அஞ்சலேக்கு நன்ருய் விளங்கியது. எதையும் வீட்டிற்குச் சென்று கேட்டுக்கொள்ளுவோம் என்றவள் வேலேகளே முடித்துக்கொண்டு கிளம்பினுள். வீட்டு வாசலில் குழந்தைகள் விளேயாடிக்கொண்டிருந்தனர். அஞ்சலேயுடன் கூட வந்து கொண்டிருந்தவன் சின்னுன், திடீரென்று ஓடினுன். ஒரு பெரிய கல்லேஎடுத்து அய்யர் மகள் தலேயில் அடித்துவிட்டு ஓடிவந்துவிட்டான். கல் நன்ருய்ப் பட்டுவிட்டதால் இரத்தம் வழியக்குழந்தை அழுதுகொண்டே உள்ளே ஓடிவிட்டாள். பிறகு கேட்கவேண்டுமா? அஞ்சலேக்கு ஸப்த நாடியும் அப்படியே ஒடுங்கிவிட்டது. சின்னுனே அங்கேயே ஆத்திரம் தீரப் பத்துஅறை அறைந்தாள். ஆனல் என்ன செய்து என்ன? அய்யருக்குக்கோபம் பிரமாதமாய் வந்துவிட்டது.

"என்னடீ, அவ்வளவு கொழுப்பு உன் மகனுக்கு இப்பொழுதே? எல்லாம் எந்த இடத்தில் வைக்கணுமோ அந்த இடத்தில் வைத்தால்தானே சரியாய் இருக்கும்? ஒன்றும் தலேகால் தெரியவில்லேயோ?" என்று கோபித்துக்கொண்டார்.

அஞ்சலேக்கு ஒன்றும் தோன்றவில்லே. அவள் தேகமெல்லாம் நடுக்கமெடுத்தது. பேச நாவெழவில்லே. சமாளித்துக்கொண்டு பதில் கூறுவதற்குள் சின்னுன் வெடுக்கென்று அய்யர் பேரில் பாய்ந்தான்.

"அல்லாரும் எங்கம்மாவை யான் போட்டு அடிச்சாங்க? அதுதான் நானும் அடிச்சேன்" என்று துடுக்காய்ப் பதில் சொல்லிவிட்டான். சிறிதுநேரம் அய்யரே பிரமித்துப்போய்விட்டார். என்ன கூறுவதென்றே தெரியவில்லே. அஞ்சலேக்கு மார்பும் நெஞ்சும் "படக், படக்" என்று அடித்துக்கொண்டது. அவன் என்னவோபோல் விழித்ததின் காரணம் இப்பொழுது அவளுக்கு விளங்கிற்று. அவளுக்கு எல்லாம் பழக்கம். நித்தியம் நடப்பது. ஆனல் அவனுக்கு? அஞ்சலே அவன் அருமைத் தாயல்லவா! ஆமாம். இதை எப்படி அவனுல் பார்க்கமுடியும்? நினேக்கும்பொழுது அவள் மனம் கலங்கியது. இந்த உலகத்தில் அவ்வளவு அன்புடன் இருக்கும் ஒரே உயிர்! குழந்தைகளில் அதுவேறு இதுவேறு வேற்றுமையுண்டா? சிறிது நேரம்குழந்தையை அவளால் ஒன்றும் கூறமுடியவில்லே. அவளுடைய கைகள் அவனேயும் அறியாமல் சின்னுனே இழுத்துத் தழுவின. அடுத்த கணம் அவளுடைய அதே கைகள் அவனேப்பிடித்துத் தூரத் தள்ளி அறையப் போயின. எதுவாய் இருந்தாலும் இதெல்லாம் எந்த இடத்தில், அடித்தாலும் புடைத்தாலும் நாம் அவர்களிடம்

மிஞ்சமுடியுமா? என்ற எண்ணம். பயத்தினால் அவள் உடல் நடுங்கியது. என்ன சொல்லுவார்கள்? உடல் நாணத்தால் குறுகியது. முருகன் என்ன கூறுவான்? அவள் உயிரே துடித்தது. அந்த ஒரே கணத்தில் அவளுடைய எண்சாண் உடம்பில் ஆயிரக்கணக்கில் ஊசிகள் ஏற்றப்பட்டதுபோல் தோன்றியது அவளுக்கு. முந்தானியால் முகத்தை மூடிக்கொண்டு "எது செய்தாலும் சரி ஏற்றுக்கொள்ளுகிறேன், பிள்ளை தெரியாமல் செய்துவிட்டது" என்று கூறமாட்டாமல் ஐயர் காலில் விழுந்தாள். குழந்தைக்கோ காயம் பலமாய்ப் பட்டுவிட்டது. அவருக்குமட்டில் கோபம் வராமல் இருந்துவிடுமா? ஒரே ஆவேசத்தோடு கிளம்பி விட்டார். "எங்கேடா அந்த முருகப்பயல்" என்ற சத்தம் ஊரே கிடுகிடுத்துவிட்டது.

இவ்வளவு வருஷங்களாய் உழைத்துவந்த முருகனுக்கும் நல்ல மரியாதை கிடைத்தது. அப்படியே உயிரை விட்டுவிடலாம்போல் தோன்றியது. பிறகு கேட்க வேண்டுமா? ஒரே அமர்க்களம். சின்னானைப்போட்டுப் பிளந்துவிட்டான். ஏதோ செய்துவிட்டான் என்றால் குழந்தை இந்த அடியைத் தாங்குமா? அப்படியே சுருண்டுபோய்க் கீழே விழுந்துவிட்டான். சின்னான் செய்தது பிசகுதான். முருகன் அடித்தது சரி. இருந்தாலும் பெற்றெடுத்த குழந்தை சுருண்டுவிழப் பார்க்கத் தாய் உள்ளம் கேட்குமா? அஞ்ஞானம் அவளை வந்து சூழ்ந்தது. தன்னையே மறந்து அவள் எதையோ பேசிவிட்டாள். பிறகு வார்த்தை தடித்தது. கடைசியில் "இனிமே உன்னை வச்சுகிட்டு சோறுபோட்டா ஊரே என்னைப் பாத்து சிரிக்கும். நீங்க எங்கேயாச்சியும் போங்க, என் கண்ணிலே முளிக்கவாணாம்" என்று முருகன் கூறும்மட்டும் வந்துவிட்டது. இது நடந்து மூன்று நாட்கள் ஓடிவிட்டன. முருகனும் அவளுடன் பேசவில்லை. அவளும் அவனுடன் பேசவில்லை.

இவ்வளவு நடந்தபிறகு முருகனுடன் இருப்பது அஞ்சலைக்கும் பிடிக்கவில்லை. எது எப்படிப் போனாலும் சின்னானின் படிப்பைக் கெடுக்க அவள் மனம் இடம்கொடுக்கவில்லை. வேறு போவதற்குச்சாமான்களையும் கட்டிவிட்டாள். கிளம்புவதற்கு முன் முருகனிடம் ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ளாமல் எப்படிப் புறப்படுவது. மனது ஒப்பவில்லை.

விடியற்காலை. முருகன் மாடுகளை அவிழ்த்துக்கொண்டிருந்தான். அஞ்சலை மெதுவாய் அவன் முன் போய் "அண்ணாச்சி நான் போயாரேன், மனசுலே ஒண்ணும் நினச்சுக்கிட்டு வருத்தப்படாதே" என்றாள். அவளுடைய கண்களில் கண்ணீர் ததும்பிக்கொண்டிருந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது,

மூன்று நாட்களாக முருகன் அஞ்சலையைத் திரும்பியும் பார்க்கவில்லை. என்றாலும் இரத்த பாசம் அஞ்சலை வந்து எதிரில் நிற்கையில் அவனால் அவளைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. கையில் பிடித்திருந்த மாடுகள் தானாக நழுவின.

"எங்கே போரே?" என்றான்.

அஞ்: "நான் இனிமே இங்கே இருந்தாக்க ஒனக்கு ரொம்ப சங்கடம். நான் தனியா பொளெச்சுக்கரேன் போயி. என்னாலே ஒனக்கு ரொம்ப வருத்தம்."

வாஸ்தவத்தில் முருகனுக்கு இதுவா எண்ணம்? நடந்த விஷயத்திற்கு யாருக்குத்தான் வராது கோபம்? ஏதோ கோபத்தில் சொல்லி விட்டான். அவள்பேரில் அவனுக்கு ஆசை இல்லையா? இரக்கம் இல்லையா? அவன் வெளியில் சொல்லவில்லை. குழந்தையைப் போட்டு அப்படி அடித்தது அவனுக்கே மிகவும் வருத்தம்தான். வேறு நாதியற்றவனென்று வந்த பிள்ளையை இப்படி அடித்தா பாத்தியம் கொண்டாடுவது? அவன் கண்களிலும் மளமளவென்று கண்ணீர் நிறைந்துவிட்டது.

"என்ன அஞ்சலே? பச்சைப் புள்ளேயே போல பேசிக்கிட்டு இருக்கரே? என்னமோ கோவம் வந்துச்சு. சொல்லிட்டேன். உன்னையும் புள்ளேயும் தனியா அனுப்பிச்சுட்டு நான் சொகமா இருந்துடுவேனா?" என்றான்.

அஞ்: "இல்லே அண்ணே, என்னை உட்டுடு. இனிமெயும் என்னாலே ஒனக்கு கஷ்டம் வாணாம். நான் போயாரேன்-புள்ளேங்களே பாத்துக்க"

முருகனுக்கு ஒருகணம் ஒன்றும் தோன்றவில்லை. கண்ணீர்வழிய அஞ்சலையைப் பார்த்தான். நடந்தது நடந்துவிட்டது. இனிமேல் சின்னானை விடக்கூடாது என்பது அவனுடைய எண்ணம். அவன் இஷ்டப்படி எல்லாம் செய்து அவனையும் தன்னுடன் வைத்துக்கொள்ளவேண்டுமென்ற ஒரே ஆசை. அஞ்சலையிடம் எவ்வளவோ சொல்லிப்பார்த்தான்.

"இல்லே அண்ணாச்சி, புள்ளேயே யாங் கெடுக்கனும்?" என்றுவிட்டாள் தீர்மானமாய். வேறு வழி இல்லை. வெகு நாட்களாகப் பத்திரப்படுத்தி வைத்திருந்த தன்னுடைய பொக்கிஷம் ஐம்பது ரூபாயையும் எடுத்து முருகன் அஞ்சலையிடம் கொடுத்தான்.

"என்னாத்துக்கு அண்ணே? நீ புள்ளே குட்டிக்காரன், வச்சுக்க, என்னுது எனக்கு போதும்" என்றாள் அஞ்சலை.

"காசுக்கு என்ன அஞ்சலே? இன்னிக்கு வருது நாளைக்கு போவுது. மனுஷ்யாள் கெடைப்பாங்களா? ஒனக்கு வேரே என்ன

செய்யப்போறேன் நான்?'' என்றான் முருகன். என்ன இருந்தாலும் கூடப்பிறந்த பிறப்பு. வேண்டாமென்றால் அப்பொழுதே அழைத்து வராமல் இருந்துவிடமாட்டானா முருகன்? அவனுக்கும் வேதனை சொல்லிமுடியவில்லை.

இனி அஞ்சலைக்குத் தடை கூறுபவர் ஒருவரும் இல்லை. கையில் ரொக்கமும் தயாராய் வந்துவிட்டது. ஆனால் முருகனுடைய பேச்சும் முகமும் அவளை என்னவோ செய்தன. என்ன இருந்தாலும் இனி இங்கே இருந்தால் சரிப்பட்டு வராது. புறப்பட்டுச் செல்வதற்கே தீர்மானித்துவிட்டாள். புறப்படும் சமயம் குறுக்கே பூசாரிக்கிழவன் வந்துசேர்ந்தான்.

''யான் குட்டீ, முருவன் சொல்ரதைக் கேக்க மாட்டேங்கராயாமே? நல்லா இருக்கா இது? ஊர் என்னா சொல்லும் ஒன்னே?'' என்றான் அஞ்சலையைப் பார்த்து.

அஞ்: ''ஊர் அப்படித்தான் எதையாச்சியும் சொல்லியிட்டே கெடக்கும். அதுக்காவ என்னா செய்யச்சொல்ரே தாத்தா? நான் போய் எங்கேயாச்சியும் பொளச்சிகரேன். முருவனுக்கு என்னாலே கஷ்டம் வாணாம்னு தானே சொல்ரேன்?''

பூசா: ''இதாபார் அஞ்சலே, ஒனக்கு ஒண்ணும் ஒலவமே தெரில்லே-எங்கேயோ சண்டையாம், ஊரே அப்படியே புரளுது. அறியாப் புள்ளேங்களை எல்லாம் வாரிகிட்டு போவுது. சொன்னா ஒனக்கு தெரியமாட்டேங்குது. எழுத்து எழுத்துன்னு அடிச்சுட்டுகிடக்கிறீயே? ரெண்டு எழுத்து கத்துகிட்டா சும்மா வுட்டுடுவாங்களா இப்பா? ரெண்டு வருசம் போனா புள்ளேயே அல்ல கண்காணாமே கொண்டு போயிடுவாங்க. இதெல்லாம் தெரியுதா ஒனக்கு? ''லவா லவா''ன்னு நீ சொல்றதையே சொல்லிக்கிட்டுக் கிடக்கிரயே?''

அஞ்: ''என்னாது சண்டையா? அதெங்கிட்டு? சண்டையிலே சின்ன புள்ளேங்களா போவாங்க? பெரியவங்க அல்லா சண்டை போடுவாங்க?''

பூசா: ''அதெங்கிட்டோ சாமிக்குத்தான் தெரியும். நிறைய சம்பளம் கொடுக்கராங்கன்னு ஊரே அல்லா பெரளுது? ஓம் மவனையும் இளுத்துகிட்டு அல்லா போயிடுவாங்க. சொன்னா கேளு அஞ்சலே. சவனேன்னு புள்ளேயே முருவனோடே வுட்டுடு. எளுத்து எளுத்துன்னு எங்கேயாச்சியும் கண்காணாமே இளுத்துக்கிட்டுப் போயிடப்போராங்க. நான் இப்பவே சொல்ரேன்'' என்று கிழவன் அஞ்சலைக்குப் புத்தி சொன்னான்.

வாஸ்தவத்தில் அஞ்சலைக்கு ஒன்றும் விளங்கவில்லை. நல்ல சம்பளம், உடைகள் எல்லா சௌகரியமும் இருக்கும் பொழுது, பிழைப்பிற்குப் பயமில்லை. நல்ல உத்தியோகம் கிடைக்கும். கௌரவமாய் இருக்கும். அவனை ஏன் தனியாக விடவேண்டும்? அவன் இருக்கும் இடத்தில் தானும் இருப்பது, என்றெல்லாம் ஒரு கணம் தோன்றியது. ''ஆமாம் கிழவன் கூறுவது போல் சண்டைக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டால்? பணத்திற்காகப் பிள்ளையையா பறி கொடுப்பது? வேண்டாம், ஒருவருடைய தயவும் வேண்டாம். தான் சொன்னபடி அவனைப் படிக்க வைக்கலாம். ஆனால் தான் ஒரு கால் கிழவன் கூறுவது போல் குழந்தையைத் தனியாக விட்டு விட்டு இறந்து விட்டால்? அப்பொழுது யார் அவனுக்கு? அப்பொழுது மட்டும் முருகன் ஓடிவருவானா? எந்தத் தெய்வம் அவனைக் காப்பாற்றும்? அஞ்சலையின் மனம் ஒருவழியும் போகாமல் தவிக்க ஆரம்பித்தது. எல்லாம் தான் உயிருடன் இருக்கும் வரையில் சரி, பிறகு? உத்தியோகத்தில் விட்டால் என்ன ஆகுமோ? சண்டைக்குத்தான் செல்வானோ? அதற்குப் பலியாகத்தான் உயிரை விடுவானோ? முருகனுடைய வார்த்தை இப்பொழுது அவள் மனதில் மழையிடையே மின்னல் போல் தோன்றியது. அவன் கூறுவதுபோல் இவ்வளவு காலம் சோறு போட்டுக் காப்பாற்றிய தெய்வம் அவனை மட்டும் விட்டு விடுமா? அதற்கு அழிவு உண்டா? எவ்வளவு பரம்பரையைக் காப்பாற்றிய அரிய தெய்வம்! தத்தளித்துக் கொண்டிருந்த அவள் மனம் சற்று நிம்மதி அடைந்தது. ஒரு முடிவிற்கு வந்தாள்.

மறுநாள் காலை. முருகன் வண்டியைப்பூட்டிக் கொண்டிருந்தான். உயர்ந்த காளைகள் பூட்டிய வண்டி யொன்றை ஓட்டிக்கொண்டு முன்னால் சென்றான் சின்னான். ''பாத்தாயா அஞ்சலே? மவன் எப்படி ஓட்ரான் வண்டி'' என்றான் முருகன். ''ஹேய் - எலே'' என்ற சத்தம் தெருவைப் பிளந்தது. தட தட வென்ற ஓசையுடன் வண்டியின் சக்கரம் சுழன்றது. தெருக் கோடியில் வண்டி மறையும் வரை அஞ்சலை அங்கே நின்றிருந்தாள். ''இம்மா நாளாய் காப்பாத்திக்கிட்டுவர தெய்வம் அவனை மட்டும் உட்டுடுமா அஞ்சலே?'' என்றான் முருகன். '' எப்படியாச்சியும் புள்ளே நல்லா இருந்தா சரி'' என்றாள் அவள். கண்களில் மிதந்து வந்த கண்ணீர்த் துளிகளைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

# இது விளையாட்டானல்

ரா. ஸ்ரீ. தேசிகன்

—x—

காலையிலிருந்தே 'சிலு, சிலு'வென்று வீசிக் கொண்டிருந்த காற்று ஒரு பெரும் புயலாக மாறிவிட்டது. அது சிறிச் சீறி அடித்தது: ஓலமிட்டது: மரங்கள் தலைவிரித் தாடின. கதவுகள் 'படீர்', 'படீர்' என்று அடித்து, அடித்து மூடிக்கொண்டன. தூரத்தில் இடியின் முழக்கம் முழவொலி காட்டிற்று. மின்னல்கள் ஓயாமல் சாட்டைகள்போலப் பின்னிச் சுழன்றன. வானம் இருண்டது. சாயங்காலம் ஐந்து மணிக்கே இரவு வந்தது போல வெளியிலே காட்சி தென்பட்டது. "வானமே உள்ளே வந்துவிட்டது" என்ருர்கள் சிலர்.

கடற்கரையிலுள்ள வாசகசாலையில் மின்சார விளக்குக்களை ஏற்றிவிட்டார்கள். நான் சமுத் திரக்கரை வழியாய் அந்த வாசகசாலைக்குப் போய்க்கொண்டிருந்தேன்.

சமுத்திரத்தில் ஆயிரம் பாம்புகள் படங்களை விரித்து ஆடினற்போல அலைகளும் வளைந்து வளைந்து எழுந்தன, படுத்தன, சீறின. தூரத்தில் வாசகசாலை விளக்குக்களைக்கண்ட நான் என் நண்பர்கள் அங்கேதான் இருப் பார்கள் என்று விரைவாய்ப் போனேன். எங்கிருந்தோ வேகமாய் ஓடிவருகிற மழை என்னைப் பின்தொடர்ந்தது. வாசகசாலைக்குள் நுழைந்தேனே இல்லையோ, மழையும் குடம் குடமாகப் பெய்தது.

என் நண்பர்கள் தினசரிப் பத்திரிகையை வைத்துக்கொண்டு ஏதோ பேசிக்கொண்டிருந் தார்கள். அங்கே போய்ச்சேர்ந்ததும், "என்ன மழையைக் கொண்டுவந்து விட்டீர்களே" என்ருர் குப்புசாமி ஐயர்.

"என்ன, ஊரில் இல்லையோ. ஐந்தாறு நாட்களாக இங்கே காணுமே" என்று சிரித் தார் திருமலை ராவ்.

அவருக்கு நிரம்ப கவலை. "நாற்பது வயதுக்கு மேலே அநாதியாய் இந்தக் குழந்தையைத் தகப்பன் தாயார் விட்டுவிட்டு இறந்துபோய் விட்டார்கள். இனிமேல் நாம் இந்தக் குழந் தையை ரக்ஷிக்கவேண்டும்" என்று என்னைக் கேலிபண்ணினர் இராகவ ஐயங்கார்.

"ஆமாம், அநாதைக் குழந்தைதான், நாம் ரக்ஷிப்போம்" என்ருர் மீண்டும் திருமலை ராவ்.

என் தகப்பன் தாய்மார்கள் இப்பொழுது தான் இறந்தார்கள். என்னை இன்பமாய்ச் 'செல்லமணி' என்று யார் அழைக்கப்போகி ருர்கள். அந்த நிலையில் நான் ஒரு அநாதை தான் என்று என் மனத்தோடு பேசிக் கொண்டேன்.

"இன்று தினசரியை நீங்கள் வாசித்தீர்களா?" என்று திருமலைராவ் கேட்டார்.

இல்லை என்றேன்.

"ஒரு கோரமான சம்பவம் அதிலிருக்கிறது" என்று இராகவ ஐயங்கார் சொன்ஞர்.

"அதென்ன?"

"இரவு எட்டு மணி இருக்கும். ரசிக ரஞ்சன சபையிலிருந்து ஒருவர் திரும்பிவந்து கொண் டிருந்தார். ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிற பாதை வழியாய்த்தான் அவர் போய்க்கொண் டிருந்தார். திடீரென்று மோட்டார் கோண லாய்ப் பாய்ந்தது. அவரைமட்டும் அரைத்து விட்டது" என்ருர் குப்புசாமி ஐயர்.

"ஐயோ, அப்படியா? வீட்டில் எத்தனை ஆவலோடு பார்த்துக்கொண்டிருப்பார்கள், அவர் வரவை அந்தக் கூட்டத்தில் அவரைப் பார்த்துக் குறிவைத்து அடித்துவிட்டதே தெய்வம், அத்தனை கொடுமையா, அதற்கு?'

"என்ன, கொடுமை என்று சொல்லப் போகிறீர்களே எல்லாம் பகவானுடைய விளை யாட்டு" என்ருர் திருமலை ராவ்.

"இதுவா விளையாட்டு என்றேன்"

"தெய்வம் நல்லதுமில்லை, கெடுதலுமில்லை: ஏதோ ஒரு குருட்டுச்சக்தி" என்று மொழிந்தார் இராகவ ஐயங்கார்.

"குருட்டுச் சக்தியா? சிறிய பையன்கள் வேணுமென்று பூச்சிகளைப் பிடித்து விளையாடு கிற நிலையில் தெய்வமிருக்கிறது. நம்மை சித்திரவதை செய்ய காத்துக்கொண்டிருக் கிறது அப்பாழுந் தெய்வம்" என்று சினந்து கூறினேன்.

"நம்முடைய சிற்றறிவுகொண்டு அளக்க லாமா? உலகப்படைப்பு பகவான் எழுதின மஹாகாவியம். அதில் ஒவ்வொரு அம்சமும் பொருத்தமாய் அமைந்து கிடக்கிறது. நாம் அதில் ஒரு மூலையைப் பார்த்துவிட்டுப் பிச கென்று தள்ளிவிடுவது ஞாயமில்லை" என்ருர் திருமலை ராவ்.

"நல்லது கெடுதல் என்பது உலகத்தில் இல்லையா?" என்று வினவினார் குப்புசாமி ஐயர்.

"எது நல்லது எது கெட்டது? நம்மைப் பாதிக்கிறதை வைத்துக்கொண்டு நல்லது கெட்டது என்று சொல்லிவிடலாமா? விருப்பு வெறுப்பு இல்லாமல் ஒருகலைஞன்போல நோக்கினால் எல்லாம் ஒழுங்காய்த் தோன்றும்."

"கோயிலைப் பாழ்படுத்தின வியாபாரிகளைச் சாட்டையெடுத்து ஏசுநாதர் அடித்தாரே, அதைப் பிசகென்று நினைக்கிறீர்களா, இல்லையா?" என்று கேட்டார் இராகவ ஐயங்கார்.

"அது பிழைதான்; அதுவும் பகவானுடைய லீலை என்று பார்க்கவேண்டும். ஏசுநாதரை விட சாக்ரடீஸ் ஒருபிடி உயர்ந்தவர் என்றே நான் சொல்லுவேன். சிலுவையில் அடிபடுவதற்குமுன் அவர் பட்டபாடு யாருக்குத் தெரியும். "அப்பனே, என்னைக் கைவிட்டுவிட்டீரே" என்று அவர் ஓலமிட்டார். சாக்ரடீஸ் சிரித்துக்கொண்டே மாண்டார். நம்மாழ்வார் என்ன சொன்னார் தெரியுமா?"

"நல்குரவும் செல்வமும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமுமமுதமுமாய்"
கோலங்கொள் சுவர்க்கமும் யானே யென்னும்
கோலமில் நரகமும் யானே யென்னும்"
என்றெல்லாம் பாடுகிறார்.

"கெட்ட குணங்கள் நீங்கினவன் பகவான் என்கிறார்களே வைஷ்ணவர்கள்? நரகமும் நானேயென்னும் என்றுசொல்லுகிறது பிளேக் கூறுகிறதுபோல இருக்கிறதே என்றார் இராகவ ஐயங்கார்."

"இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் கெட்டுப் போன பெண்ணிடத்தில் தேவியைக் கண்டார். சிருஷ்டி காவியத்தை முற்றிலும் அறிந்தவர்களுக்கு நல்லது கெட்டதில்லை" என்று அமைதியாய்ப்பேசினார் திருமலைராவ்.

"நீங்கள் என்னவோ வேதாந்தம் பேசுகின்றீர்கள். சகிக்க முடியாத சம்பவம் என் குடும்பத்தில் நிகழ்ந்து விட்டது" என்று சொன்னேன்.

"அதென்ன, சொல்லுங்கள்" என்றார்கள் என் நண்பர்கள் அனைவரும். நான் சொல்லத் தொடங்கினேன்.

"என்னுடைய தமக்கை பெண் மஞ்சக்குடியில் வாழ்க்கைப்பட்டவள். அவளுக்கு ஐந்தாறு குழந்தைகள். என் தாயாருக்கு அத்தங்கார் பையனுக்கு மஞ்சக்குடி பெண்ணின் தமக்கையைக் கொடுத்திருக்கிறது. என் தாயார் அத்தங்கார் தவறிவிட்டாள். அதற்கு என் அத்திம்பேர், என் தமக்கை, மஞ்சக்குடி மருமகள் அகமுடையான் எல்லோரும் பரமக்குடி போய் விட்டார்கள். மஞ்சக்குடியில் என் மருமகளும் குழந்தைகளுந்தான். பரமக்குடிக்குப் போனவர்கள் ஆகவேண்டிய காரியங்கள் ஆனபோதிலும் சீக்கிரம் திரும்பமுடியவில்லை. ஆனால் அத்தங்கார் பிள்ளைக்கு மட்டும் ஏதோ மனத்தைப் பிசைந்தது: அதற்கேற்ப பரமக்குடிக்குத் தந்தியும் வந்தது.

"பையனுக்கு வியாதி அதிகம், உடனே வருகிறது, மஞ்சக்குடி" என்று அந்தத் தந்தியில் கண்டிருந்தது.

மஞ்சக்குடி மாப்பிள்ளை கிளம்பத் தயாராயிருந்தார். மறுபடியும் ஒரு தந்தி வந்தது. சற்றுக்குணமென்று தெரியவந்தது. பரமக்குடியிலுள்ள பந்துக்கள் இன்னும் இரண்டு நாள் இருந்து விட்டுப் போங்களென்று அவரைக் கட்டாயப்படுத்தினார்கள்.

இரண்டு நாளைக்கு ஒருதகவலும் கிடையாது.

மூன்றாம் நாள் "அப்பவே சொன்னேனே ஒன்றும்பண்ணாது பிள்ளைக்கு இப்படித்தான் அடிக்கடி வரும் என்று மஞ்சக்குடி மாப்பிள்ளை சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது மற்றொரு தந்தி "என் மருமகள் மாண்டாள்" என்று பரமக்குடிக்குத் தந்திபோயிற்று. மாப்பிள்ளை மட்டும் முதலில் கிளம்பினார். பெண்ணுக்குத் தகப்பன்-அதாவது என் அத்திம்பேர், என் தமக்கை இவ்விருவரும் ஒன்றுந் தோன்றாமல் திகைத்துநின்று விட்டார்கள். தாமதித்துக் கிளம்பியதில், முதல் வண்டி தவறிவிட்டது.

"என்னவோ குருட்டுச்சக்தியென்று சொன்னீர்களே, என்ன தீர்மானத்தோடு ஜனங்களைச் பிரித்து விட்டது பார்த்தீர்களா?" என்றார் குப்புசாமி ஐயர்.

"குருட்டுச்சக்தியா? மனிதர்களின் இன்னல்களிலே, இசையை அல்லவா தெய்வம் கேட்கிறது".

பல்லாயிரம் தந்திகளையுடைய துன்பயாழைத் தீர்மானத்தோடு சமைத்து அதை மீட்டி இன்பத்தை அடைகிறது அத்தெய்வம்" என்று தெய்வத்தை நொந்தேன்.

"மரணம் எப்படி நேர்ந்தது தெரியுமா? தன் பிள்ளைக்கு வியாதி வந்ததில் என் மருமகளுக்கு உள்ளம் குன்றி 'இந்தக் கஷ்டத்திலா என்னை வைக்கவேண்டும் என் பிராணன் போகாதா?' என்று கத்தினாள். அந்த அதிர்ச்சியில் கடிகாரம் போல மார்பு அடிப்பு நின்றுவிட்டது. பக்கத்து ஊரிலுள்ள தகப்பன் தாய்மார்களை விலக்கிவிட்டது, கணவனை விலக்கிவிட்டது. கடைசிக் காலத்தில் எந்த எண்ணங்களோடு பிராணனை விட்டதோ அந்த ஜீவன். யாருக்குத்தெரியும்?"

நான் இவ்விஷயத்தைச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, என் நண்பர்களின் கண்களில் ஜலம் வர ஆரம்பித்தது. திருமலைராவ் மட்டும் ஒன்றும் பேசாமல் கேட்டுக்கொண்டார்.

மழை நிற்கவில்லை. இடி முழங்கிக்கொண்டிருந்தது. மின்னல்களும் ஓயவில்லை.

நான் மேலே கூறிக்கொண்டுபோனேன். கணவனுக்குப் பிணத்தைப் பார்க்கக்கொடுத்து வைத்திருந்தது. பெற்றோர்களுக்கு முகவிழிப்புக்கூடக் கிடைக்கவில்லை. இப்படி நிகழ்ந்த செய்தி அங்கே போய்த்தான் தெரியும்.

இங்கே சென்னையில் சாப்பிட்டுவிட்டு வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டிருந்தேன். மருமகள் இறந்துவிட்டாள். பத்தாம் நாள் மஞ்சக்குடியில் நடக்கிறது, என்ற கடிதம் வந்தது. எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. பத்தாம் நாள் முதல் இரவு வண்டி ஏறினேன். இரவு முழுதும் அக்குடும்பத்தின் பரிதாபகரமான நிலைதான் என் கண்முன் மிதந்துகொண்டேயிருந்தது. மஞ்சக்குடியில் ஆற்றுக்குப்போகிற சமயம் நான் போய்ச்சேர்ந்தேன். அங்கே அனைவர்களுடைய முகத்திலும் ஒரு பெரும் சோக அமைதிதான் தென்பட்டது. பேச்சென்ன பயனைத்தரும்? நான் சும்மாவிருந்தேன். உள்ளத்திலுள்ள சோகத்திற்கு அணைபோட்டுப்பார்த்தேன். என்னையும் மீறிக் கசிய ஆரம்பித்தது. அடிக்கடி மஞ்சக்குடிக்குப் பக்கத்திலுள்ள கிராமத்திற்குப் போகிற வழக்கம். ஆனால் ஏதோ நிர்பந்தங்களினால் மஞ்சக்குடிக்குப் போகமுடியாமலும் போய்விடும். "பக்கத்தில் வந்த மாமா என்னைப் பார்த்தாரா?" என்று அவள் குறைகூறின சொல்லும் என் காதில் ஒலிக்காமல் இல்லை. என்னுடைய உண்மையான அன்பு நிறைந்த உள்ளத்தை அவள் சூக்ஷ்ம சரீரத்தில் நின்றுகொண்டு அறிவாள் என்று நினைக்கிறேன். அவள் கையினால் அமுது உண்ணப் பாக்கியம் புரியவில்லை. அவளை உத்தேசித்துப் படைத்த பண்டங்களைத்தான் தின்றேன். இதுதான் விதி தந்த பாக்கியம் எனக்கு.

குடமுருட்டி ஆற்றங்கரைக்குப் போனோம், ஸ்நானம்செய்தோம். ஆறு ஒன்றுமே நிகழாதது போல ஓடிக்கொண்டிருந்தது. பறவைகள் கூவின, வயலில் உழவர்களின் அரவம் கேட்டது. ஆற்றங்கரை மேற்புறத்தில் மங்கல ஒலி கேட்டது. கலியாணப்பாலிகை மிதந்து வந்து பத்தோடு கலந்தது. ஒரு புறம் அழுகை மற்றொருபுறம் சிரிப்பு. சிரிப்பிலே அழுகையைக்கண்டேன், அழுகையிலே சிரிப்பைக் கண்டேன்.

என் அத்திம்பேரும் தமக்கையும் அசைவற்று நின்றார்கள். இரண்டு சோக உருவங்கள் துக்கங்களை மறந்த உள்ளத்தில் துக்க மடை திறந்துவிட்டது. பாம்பு கடித்து இறந்த பையனின் உருவம் அத்துக்க அலை மீது வந்தது முகப்பருவினால் மாண்ட மற்றொரு பையன் தோற்றம் தென்பட்டது.

ஒரு சம்பவம் அநேக சம்பவங்களை எழுப்பியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

என் மருமகளின் சிறிய குழந்தைகள் சிரித்து விளையாடின. இந்தக் குழந்தைகளை வைத்துக்கொண்டு இன்னும் எத்தனை சோக நாடகங்களை விதி தன் ஓயாத்தறியில் நெய்ய காத்துக்கொண்டு இருக்கிறதோ? இதெல்லாம் விளையாட்டானல்—என்று முடித்தேன்,

இதற்குள் மழை நின்றது. மேகத்தில் மறைந்த மதியும் வெளியிலே கிளம்பிற்று. மின்னல்கள் மறைந்தன. இடி அவிந்ததுபோல இரவும்தோன்றிற்று. ஓர் அமைதியில் உலகம் துயின்றது.

"இதோ பார்,புயலில் ஓர் அமைதியை, இருட்டிலே ஒரு ஒளியைப்பார். உலக இரைச்சலிலே ஓர் கானத்தைப்பார்.இருட்டுக்கப்பால்"—என்றார் திருமலை ராவ்.

ஆனால் என் உள்ளக்கடல் அலைமீது எழுகின்ற ஒலி இதுதான்—இது விளையாட்டானல்—


ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★



★

எம், லி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

# மனம்போல மங்கல்ய வாழ்வு

*கமலா பத்மநாபன்*

அன்று மாலை ஸ்திரீகள் ஸமாஜத்திற்குப் போய்வரலாமென்று கிளம்பினேன். வீட்டு வாசற்படியைவிட்டு இறங்கியதுதான் தாமசம், ஒரு வேலைஆள், வழிமறிப்பவன் போல், என் எதிரே வந்துநின்று ஒரு கடித உறையை என்னிடம் நீட்டி "அம்மா, இதைக் கலெக்டர்வீட்டு அம்மா உங்களிடம் கொடுத்து விட்டு, உங்களுக்குத் தொந்தரவு இல்லாது போனால், உங்களைக் கையோடு கூட்டிவரச் சொன்னாங்க" என்றான்.

"கலெக்டர்வீட்டு அம்மாவாவது, எனக்குக் கடிதம் கொடுத்துவரச் சொல்லவாவது!" என்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டே அக்கடித உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்து வாசித்தேன்.

"அன்பான ஜலஜம்!

நீ இந்த ஊரில் இருப்பதை இன்று காலை தான் அறிந்தேன். உன்னுடைய பழைய சிநேகிதியான என்னை நீ மறந்து இருக்க மாட்டாயென்று நம்புகிறேன். இக்கடிதம் கொண்டுவரும் ஆளுடன் நீ கட்டாயம் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். நானே உன்னைவந்து நேரில் பார்த்திருப்பேன். ஆனால் என்னுடைய தேக நிலைமை அதற்குக் குறுக்கே நிற்கிறது. சிரமத்தைப் பாராட்டாமல் உடனே புறப்பட்டு வரும்படி வேண்டிக்கொள்கிறேன். மற்றவை நேரில். உன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்,

உன் பிரிய நேசி,

நிர்மலா".

நான் தாங்கவொண்ணா ஆச்சர்யத்தினால் சில வினாடிகள் அசைவற்று நின்றேன். என் பழைய பள்ளிச்சிநேகிதி நிர்மலா எழுதியகடிதம்தான் அது! சந்தேகமில்லை. முத்துமுத்தாய் இருக்கும் அவளுடைய அழகான கையெழுத்தை நான் மறந்துவிடவில்லை. நான் அவளைக்கடைசியாகச் சந்தித்தது பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பு! பன்னிரண்டு வருஷங்கள் என்றால் கொஞ்ச காலமா என்ன? என் உள்ளத்தில் அச்சமயம் ஏற்பட்டிருந்த உத்சாகமும் பரபரப்பும் என்னை அந்த க்ஷணமே, கடிதம் கொண்டுவந்த வேலைக்காரனைப் பின்பற்றி நிர்மலாவின் வீட்டிற்குப் போகும்படி தூண்டின. ஸ்திரீ ஸமாஜத்தைப்பற்றிய நினைவே அடியோடு அழிந்துபோயிற்று. என் வீட்டைவிட்டுச் சுமார் இரண்டு பர்லாங்தூரம் தான் நடந்திருப்பேன். அதற்குள் நிர்மலாவின் வீட்டை அடைந்துவிட்டேன் என்பதை, வேலைக்காரன் "இந்த வீடுதான், உள்ளே வாருங்கள்" என்று வழிகாட்டிக்கொண்டு போனதைப் பார்த்துத் தெரிந்துகொண்டேன். பல வருஷங்களுக்குப் பிறகு இன்று என் அருமை நிர்மலாவை எதிர்பாராத விதமாய்ச் சந்திக்கப்போகிறேன் என்ற எண்ணத்தினால் என் மனதில் சந்தோஷம் கொந்தளித்தது. சேவகன் நிர்மலா இருந்த அறைக்கு என்னை அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

அங்கே கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த ஓர் மெலிந்த உருவம் சோகப் புன்னகையுடன் "வா ஜலஜம். நீ வருவாயென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். உட்கார் இந்த நாற்காலியில்" என்று கட்டில் அருகே கிடந்த ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டி என்னைப் பக்ஷமுடன் வரவேற்றது.

எனக்குப் பகீரென்றது! என் அருமைத் தோழி நிர்மலாவா இது? என்ன கோரமான மாறுதல்! அவளுடைய அழகும் யௌவனமும் எங்கே ஓடி ஒளிந்தன? சற்று முன்பு சந்தோஷத்தினால் துள்ளிய என் நெஞ்சம் இந்த மனதை உருக்கும் காக்ஷியைக் கண்ணுற்று அத்யந்த வேதனையிலாழ்ந்தது. கண்களில் என்னை அறியாமல் கண்ணீர் பெருகியது. நிர்மலா காட்டிய நாற்காலியில்போய் உட்கார்ந்து அவளுடைய எலும்பெடுத்துப்போன கரங்களிரண்டையும் சேர்த்து என் கைகளினால் பிடித்துக்கொண்டு "நிர்மலா, இதென்ன?" என்றேன். அதற்குமேல் என்னால் பேச இயலவில்லை. துக்கம் தொண்டையை இறுக்கிப் பிடிப்பதுபோல் தோன்றிற்று.

"எது என்ன, ஜலஜம்?" என்று குறும்புச் சிரிப்புடன் திருப்பிக் கேட்டாள் நிர்மலா.

"நிர்மலா, விளையாட இதுவா சமயம்? உன்னுடைய இந்த சுபாவகுறும்புத்தனத்தைப் பார்த்துத்தான் நீ பழைய நிர்மலாவென்று அடையாளம்கண்டு கொள்ளவேண்டுமேதவிர, மற்றப்படி முடியவே முடியாது. எவ்வளவு மாறுதலடைந்திருக்கிறாய்! உனக்கு என்ன உடம்பு? உன் கணவர் குழந்தை எல்லோரும் சௌக்கியமா? உனக்கு எத்தனை குழந்தைகள்? எங்கே அவர்கள் எல்லாம்? நீ எத்தனை நாட்களாக இந்த ஊரில் இருக்கிறாய்?" என்ற கேள்விகளைச் சரமாரியாக அடுக்கினேன்.

"அவசரப்படாதே, ஜலஜம். என் சரித்திரத்தைப் பூராவும் உன்னிடம் சொல்லி என் துக்கத்தை ஓரளவாவது ஆற்றிக்கொள்ள வேண்டுமென்றுதானே உனக்குச் சொல்லி அனுப்பி இங்கு வரவழைத்தேன். முதலில் நான் உன்னிருப்பிடத்தை எப்படித் தெரிந்து கொண்டேன் என்பதைக் கேள். உனக்குக் கடிதம் எழுதவேண்டுமென்று நான் வெகு காலமாக எண்ணியது உண்டு. ஆனால் உன்னுடைய இருப்பிடமும் விலாஸமும் தெரியவில்லையாதலால் எனது எண்ணம் ஈடேறவில்லை. நீ பல வருஷங்களாய் அனேக பத்திரிகைகளுக்கெல்லாம் கதை கட்டுரைகள் எழுதிவருகிறாய் என்று எனக்குத்தெரியும். உன் கதைகள் அடிக்கடி வெளியாகும் ஒரு பத்திரிகையின் ஆசிரியருக்கு நான் சென்றவாரம் கடிதம்எழுதி உன் விலாஸத்தை அறிவிக்கும்படி கேட்டிருந்தேன். அந்தவிதமே அவ்வாசிரியரும் என் வேண்டுகோளுக்கு இணங்கி உன் விலாஸத்தைத் தெரிவித்து எழுதிய பதில்கடிதம் இன்று காலை எனக்குக் கிடைத்தது. இந்த ஊரிலேயே, அதுவும் என் வீட்டிற்கு வெகு அருகிலேயேதான் நீ வசிக்கிறாய் என்பதைத் தெரிந்துகொண்டவுடன் என் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. வாஸ்தவமாய், ஜலஜம், உன்னை நேரில் பார்த்துப் பேசும் சந்தர்ப்பம் வாய்க்குமென்று நான் கனவில்கூட கருதியிருக்கவில்லை! இந்த விஷயத்தில் நான் ஒரு பாக்கியசாலிதான், சந்தேகமே இல்லை! அது போகட்டும். நாம் இருவருவரும் கடைசியாகச் சந்தித்தது பன்னிரண்டு வருஷங்களுக்குமுன்பு அல்லவா, ஜலஜம்? உனக்கு நினைவு இல்லையோ என்னவோ!" என்றாள் நிர்மலா.

"நினைவில்லாமல் என்ன நிர்மலா. 1932ஆம் வருஷம்தான் நாம் இருவரும் எஸ். எஸ். எல் ஸி. பரீக்ஷையில் தேறினோம். எனக்கு அந்த வருஷமே விவாஹமாகி நான் புக்ககம் சென்றுவிட்டேன். நீ காலேஜ் படிப்புக்காகச் சென்னைக்குச் சென்றாய். அப்புறம் நம் இருவருக்கும் இடையே இருந்த தொடர்பு விட்டுப் போயிற்று. ஆனாலும் உன்னைப்பற்றி நான் அடிக்கடி நினைப்பதுண்டு" என்றேன்.

"உனக்குக் கல்யாணம் ஆன வருஷமே எனக்கும் விவாஹத்தைச் செய்துவிட வேண்டுமென்று எனது பெற்றோர்கள் அரும்பாடுபட்டார்கள். எவ்வளவோ நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளைத் தேடிக்கொண்டுவந்து என்னைக் கெஞ்சாதபடி கெஞ்சினார்கள். நான் ஒவ்வொரு பிள்ளையையும் ஏதாவது குறை குற்றம் சொல்லித் தட்டிக்கழித்து வந்தேன். ஏன் தெரியுமா? அந்தக்காலத்தில் என் மனதானது ஏதோ ஒரு கற்பனா லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. எனக்குக் கணவராக வரப்போகிறவர் மேல்நாடு சென்று போட்டிப் பரீக்ஷைகள் ஏதாவதொன்றில் தேறியவராயும், உயர்தர உத்தியோகம் வகித்து நவநாகரிகம் வாய்ந்ததோர் ஸௌந்தர புருஷராகவும் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டேன். இது மட்டுமா? அப்பேர்ப்பட்ட ஸௌந்தர கணவரைக் கைப்பிடித்த பிறகு நாங்கள் இருவரும் வெகு டாம்பீகமாயும் நாகரிகமாயும் வாழ்க்கை நடத்தி இதர பத்தாம் பசலி தம்பதிகளுக்கெல்லாம் ஒரு உபமான ஜோடியாகத் தென்படவேண்டுமென்றும் இன்னும் என்னவெல்லாமோ ஆகாசக்கோட்டை கட்டலானேன்".

"அதற்கென்ன இப்போழுது? நீ கோட்டை கட்டியபிரகாரமே ஒரு ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தனையே மணம் செய்துகொண்டாய்? பத்து வருஷங்களுக்குமுன்பு உங்களிருவருடைய புகைப்படமும் மணக்கோலத்துடன் "ஹிந்து" பத்திரிகையில் வெளிவந்ததைக் கண்டுகளித்தேனே நான்" என்றேன்.

"எங்கள் படத்தைக் கண்டுகளித்தாயா? ஐயோ பைத்தியமே! உனக்கு மாத்திரம் தீர்க்க திருஷ்டி இருந்திருந்து, எங்களுடைய அந்த மணவாழ்க்கை எவ்வளவு பரிதாபகரமாய் இருக்கப்போகிறது என்பதை நீ அப்பொழுது அறியமுடிந்திருந்தால், எங்கள் விவாகப் படத்தைப் பார்த்துக் களிப்படைந்ததற்கு மாறாகக் கலம் கண்ணீர் சிந்தியிருப்பாய்! ஏன், எனக்கே தெரியாதே இப்படியெல்லாம் ஆகிவிடும் என்று! 'கலெக்டர் உத்தியோகம் வகித்துக் கைநிறைய சம்பாதிக்கும் எழில்மிகுந்த புருஷனை வாழ்க்கைத் துணைவனாக அடைந்துவிட்டேன். எல்லாம் என் மனக்கோட்டையில் சித்திரித்திருந்தபடியே கைகூடிவிட்டது என்ற ஒரே களிப்பில் மூழ்கித் திளைத்தேன். முக்கிய விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டேனே! நான் இண்டர்மீடியேட் பரீக்ஷையில் தேறிய வருஷம் எங்கள் காலேஜில் நடந்த வருஷாந்தர விழாவின் பொழுதுதான் நான் அவரை முதன் முதலாகச் சந்தித்தேன். கலெக்டராக இருந்த அவர் எங்கள் விழாவில் தலைமை வகித்திருந்தார். அன்று நான் 'மாணவிகளும் அவர்களுடைய பொறுப்புக்களும்' என்பதைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு சிறிய பிரசங்கம் செய்தேன். பேசி முடிந்ததும் அக்கிராசனர் ஆசனத்தில் வீற்றிருந்த கலெக்டர் (பின்னர் என் கணவரானவர்) எழுந்து, நான் சற்றும் எதிர்பாராதிருக்கையில், எனது கையைப் பிடித்துக் குலுக்கி என் பேச்சு வன்மையைக் குறித்து, மேடையின் மேல் நின்றபடி, புகழுரைகள் கூற ஆரம்பித்துவிட்டார். நான் வெட்கிப் போய் இதர மாணவிகளுடன் கலந்துகொண்டேன். அன்று முதல் என் மனதை அவரிடம் பறிகொடுத்துவிட்டேன். நான் எவ்வளவு முயன்றாலும் என் மனம் அவர்பால் இழுபடுவதைத் தடுக்க இயலவில்லை. அவருக்கும் இதேவித எண்ணம் இருப்பதை சீக்கிரத்திலே தெரிந்துகொண்டேன். விஷயத்தை வளர்த்துவானேன். என் பெற்றோர்களின் சம்மதியின்றி ஒரே பிடிவாதமாய் அவரையே மணம் செய்துகொண்டேன். இந்த வேடிக்கையைக்கேள்

என் கணவருக்கு நிரம்ப சிநேகிதர்கள் இருக்கிறார்களே தவிர, இது பரியந்தம் தமது பந்து என்பதாக ஒரு பிராணியைக்கூட அவர் எனக்கு அறிமுகம் செய்ததே இல்லை. அவருடைய குலம் கோத்திரம் இவை ஒன்றும் எனக்கு இப்பொழுதுகூடத் தெரியாது. மேலும்........."

"உன் பெற்றோர்கள் இப்பொழுது எங்கே இருக்கிறார்கள்?" என்று நான் குறுக்கிட்டேன்.

"என் கல்யாணமான இரண்டு வருஷங்களுக்கெல்லாம் அவர்களிருவரும் அதே வேதனையினாலும் அவமானத்திலும் மனமுடைந்து போய் ஒருவர் பின் ஒருவராக மரித்தனர். கேள் ஜலஜம், எனக்குக் கல்யாணமான சில மாதகால பரியந்தம் என்னைப்போன்ற பாக்யசாலி வேறு ஒருவருமே இருக்கமாட்டார்கள் என்றெண்ணி மகிழ்ச்சி கொண்டிருந்தேன். ஆனால் என் மகிழ்ச்சி நீடித்திருக்காதபடி என் கணவர் தம் சுய ரூபத்தைக் காட்டத் தொடங்கிவிட்டார். நாகரிகத்திற்கும் ஒரு வரம்பு கிடையாதா, ஜலஜம்? 'கருநாகம் போல் உன் தலைப்பின்னல்தான் எவ்வளவு லாவண்யமாய் உன் முதுகில் துவண்டு புரள்கிறது, நிர்மலா! என்று முன்பெல்லாம் என் கூந்தல் அழகைப்பற்றிச் சிலாகிப்பாயே நீகூட, அப்பேர்ப்பட்ட நேர்த்தியான கேசம் என் கணவருக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லையாம். என் முகத்திற்கு 'பாப்' (Bob) செய்துகொண்டால்தான் எடுப்பாக இருக்குமென்றும் சுமை மயிரைத் தாங்கிக்கொண்டிருப்பது வெகு அனாகரிகமென்றும் கூறி, நான் எவ்வளவு ஆக்ஷேபித்தும் கேளாமல், எனது நீண்ட கேசத்தைக் கழுத்தளவோடு நிற்கும்படி வெட்டச்செய்து தமது பிடிவாதத்தையே நிறைவேற்றிக்கொண்டார். என்னிடம் அவர் ஆரம்பித்த சீர்திருத்தம் இப்படியாக என்னுடைய கருங்குழலின் பலியோடு ஆரம்பமாயிற்று.

"ஆண், பெண் என்ற வித்தியாசம் கிஞ்சித்துமின்றி இருபாலரான சிநேகிதர்களுடனும் மிக நெருங்கிப் பழகுவார் அவர். நானும் அவ்விதமே நடந்துகொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். நான் முதலில் இதற்கு இணங்கமாட்டவேமாட்டேன் என்றேன். பலன் எங்கள் இருவரிடையே பேச்சுவார்த்தை நின்றுபோய் பெரிய மனஸ்தாபம் ஏற்படும்போன்ற நிலைமை உதயமாயிற்று. பல்லைக் கடித்துக்கொண்டு, அவர் என்மேல் வைத்திருந்த அன்புமாறாதிருப்பதற்காக, அவர் ஆட்டிவைத்த ஆட்டங்களுக்கெல்லாம் ஒரு இயந்திரப் பொம்மையைப்போல் ஆடினேன். காய்கறிகளில் உடம்பு ஆரோக்யம் மற்றும் வளர்ச்சிக்குப் போதுமான சத்துக் கிடையாதாம். மாம்ஸம் சாப்பிட்டுத்தான் தீரவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார். கண்களில் ஜலம் துளும்ப நெஞ்சில் துக்கம் வந்து அடைக்க, தலையெழுத்தை நொந்துகொண்டு, ஒரு ஸ்பூன் மாம்ஸ ஆகாரத்தை எடுத்து வாயில் போட்டுக்கொள்வேன். உடனே எட்டு ஒக்காளம் வந்து வாந்தி செய்துவிடுவேன். இதையெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கும் என் கணவர் "வீண் ஆகாத்தியம்! என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்கக்கூடாதென்றே நீ கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது!" என்று என்மேல் சீறி விழுவார். அவருடைய கோபத்திற்கு அஞ்சி மாம்ஸ ஆகாரம் உட்கொள்வதையும் பழக்கம் செய்துகொண்டேன். அருவருப்புடன் சாப்பிடும் ஆகாரம் யாருக்குத்தான் உடம்பில் ஒட்டும்? ஏதாவது அடிக்கடி ஜீர்ணக் கோளாறு சம்பந்தமான வியாதிகள் எனக்கு ஏற்பட்டுக்கொண்டிருந்தன. சாப்பிட்ட மாம்ஸம் சரிவர ஜீர்ணம் ஆகாது. அதற்கும் கீழ்ப்படிந்தேன். இந்த அதிசயத்தைக்கேள். பெண்கள் எப்போதும் சுதந்திரமாக வாழ வேண்டும். அடிமை மனப்பான்மை வெறுக்கத் தக்கது. கணவன் என்றால் நம் இந்தியப் பெண்மணிகள் கண்மூடித்தனமாய் வணங்கிக் கீழ்ப்படிகிறார்கள். இது முற்றிலும் தப்பு' என்று நான் காலேஜில் படித்துவந்த நாட்களில் எல்லாம் தர்க்கம் செய்து பிரமாதமாகச் சவடால் பேசுவேனே! நடைமுறையில் எனக்கு இந்தக்கொள்கைகளை கைப்பிடிக்க இன்று வரைக்கும் தைரியம் வரக்காணோமே என்பதை நினைத்தால் பெருத்த புதிராகத்தான் இருக்கிறது

"பெரிய பெரிய டின்னர் பார்ட்டிகளுக்கெல்லாம் எங்கள் இருவருக்கும் அழைப்பு வரும். அந்த விருந்துக் கூட்டங்களில் அநேகமாய் எல்லோரும் ஆங்கிலேயர்களாகவே இருப்பார்கள். கூட்டத்தில்-இருக்கும் அந்த ஆங்கில ஸ்திரீகள் எல்லாம் எவ்விதம் நடந்துகொள்கிறார்களோ அதேபோல் நானும் நடந்துகொள்ளவேண்டுமென்று என் ஐ. ஸி. எஸ். துரை எனக்கு ஆர்டர் செய்தார். ஒரு சமயம் இந்தமாதிரி டின்னர் பார்ட்டி ஒன்றிற்குப் போயிருந்தபொழுது விருந்துக்குப்பிறகு அவர்கள் நடத்தும் 'பால்'' (Ball) என்று சொல்லப்படும் நாட்டியக் களியாட்டத்தில் எக்கச்சக்கமாய் அகப்பட்டுக்கொண்டு நிலை தெரியாமல் திண்டாடினேன். என் சங்கடத்தைக்கவனித்த இரண்டொரு ஆங்கிலேய யுவர்கள் ஆவலோடு என்னிடம் ஓடிவந்து எனக்கு நாட்டியம் ஆடத் தாம் கற்றுக்கொடுப்பதாகக்கூறி என்னைப் பக்கத்திற்கு ஒருவராகப் பிடித்து இழுத்தனர். எனக்கு அசாத்தியக் கூச்சத்தினால் நடுக்கம் ஏற்பட்டு உடம்பெல்லாம் வெயர்த்துக் கொட்டிற்று. எனக்கு நாட்டியம் கற்றுக்கொள்வதில் ஆர்வமில்லை என்பதாக அந்த யுவர்களிடம் கூறி அவர்களுடைய பிடியிலிருந்து நழுவ முயன்று கொண்டிருந்தேன். இதை, ஒரு மூலையில், அழகுராணி ஒருவளுடன் கட்டிக் கூத்தாடிக்கொண்டிருந்த என் கணவர் கவனித்து விட்டார். தம் நாட்டியத்தைச் சற்று நிறுத்தி என்னைச் சுட்டு எரித்து விடுவார்போல பார்த்துக் கண்களாலேயே என் செய்கையைக்



உங்கள் கூந்தலைக் காப்பாற்ற
மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

## காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணு தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

## ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்த மற்றது.

எங்கும் கிடைக்கும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணு தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

**ஆங்கிளோ-இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்-2.**

கண்டித்தார். என்ன செய்வது என்று தோன்றாமல் நான் மலைத்துப்போய்ச் சில வினாடிகள் நின்ற தருணத்தைப் பயன் படுத்திக்கொண்டு அவ்விரு வாலிபர்களும் என்னைக் கட்டிப் பிடித்து இழுத்துக்கொண்டுபோனார்கள். 'இப்படிக் காலை வை, அப்படிக் காலை வை. பார்ட்னரை (Partner) இவ்விதமாகச்சேர்த்து அணைத்துக் கொள்ளவேண்டும்' என்று பலவித ஆபாசமான முறைகளை எல்லாம் எனக்குக் கற்பிக்கத்தொடங்கி விட்டார்கள். எனக்கு அந்த நிமிஷத்தில் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் என்று தோன்றிற்று. இந்த அனுபவத்திற்குப்பிறகு என்னை இன்னும் பலமாய்ப் பிடித்தது சைத்தான்! மறுதினத்திலிருந்து எனக்கு நாட்டியம் சொல்லிக்கொடுக்க ஒரு உபாத்தியாயரை நியமித்துவிட்டார் அவர். தீராத மனக்கசப்புடன் அந்தத் தடியனை ஒரு நாளைக்குக் குறைந்தபக்ஷம் ஐம்பதுதடவை அணைந்துகொண்டு அந்தக் கண்ணராவிக் கூத்தாட்டத்தையும் கற்றுக்கொண்டேன்.

"விவாகம் ஆன இரண்டு வருஷத்திற்குப் பிறகு எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்பாடா! குழந்தையை வளர்க்கும் சாக்கிலாவது நாகரிகம் என்ற பெயரால் அக்கிரமம் நடத்தப்பட்டு வரும் இந்த வாழ்க்கையிலிருந்து சிலகாலம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணி ஆனந்தப்பட்டேன். ஆனால் அந்த ஆசையிலும் மண்ணைப்போட்டு விட்டார் அவர். குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டி வளர்த்ததால் என் மேனி அழகு குறைந்துவிடுமென்று சொல்லி டஜன் கணக்காய்க் குழந்தைகளுக்குப் போட்டும் மாவு டப்பாக்களை வாங்கிப் போட்டார். கலெக்டர் மனைவியாகிய நான் கைக்குழந்தைக்காரி என்ற சாக்கை வைத்துக்கொண்டு வெளியில் வாசவில் போகாமலிருந்தால் உலகமே கைகொட்டி சிரிக்குமாம். குழந்தையை கவனித்துக்கொள்ள ஒரு தாதியை ஏற்பாடு செய்தார். பத்து மாதம் சுமந்து கணக்கில்லாத வேதனையை அனுபவித்துப் பெற்றெடுத்த என் குழந்தையை வளர்க்கும் சுதந்திரத்தையும் எனக்கு அளிக்க மறுத்து விட்டார் அவர். பிரசவமாகி ஒரு மாதகால பரியந்தம்தான் வெளியில் அதிக நடமாட்டம் வைத்துக்கொள்ளாமலிருக்க அனுமதித்திருந்தார் என் கணவர் பிறகு. வழக்கம்போல் தாம்போகும் பார்ட்டிகளுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் என்னை இழுத்துச்செல்ல ஆரம்பித்து விட்டார். எப்பொழுதாவது அவர் வீட்டில் இல்லாத சமயத்தில் குழந்தையை எடுத்து ஆசைதீர முத்தமிட்டுக்கொஞ்சி என் ஹ்ருதயதாபத்தைத் தீர்த்துக்கொள்வேன். குழந்தையை நான் தூக்கி எடுத்துக்கொஞ்சினால் அது என்னிடம் ஒட்டிக்கொண்டு விடுமாம், பிறகு எனக்கு வெளி விவகாரங்களில் ஈடுபடப் போதுமான அவகாசம் கிடைக்காதாம். இக்காரணங்களினால் நான் குழந்தையுடன் நெருங்கிப்பழகுவது கூடாதுஎன்று எனக்கு அவ்வப்போது புத்தி

புகட்டுவார். இவ்வார்த்தைகளைக்கேட்டு என் வயிறு கொதிக்கும். ஆனால் அவருடன் எதிர்த்துப்பேசும்தைரியம் மாத்திரம் எனக்கு இன்று வரைக்கும் வரவில்லை.''

இவ்வளவு நேரமாய் மூச்சு விடாமல் பேசியதின் ஆயாசம் தாங்காமல் நிர்மலா சற்று நிறுத்தி தன் முகத்துவியர்வையைத்துடைத்துக் கொண்டாள். அவளுடைய துயரமான சரித்திரத்தைக் கேட்டதினால் என் நேத்திரங்களில் நிறைந்த நீரை நானும் துடைத்துக்கொண்டேன். அதைப்பார்த்த அவள் ஒருமாதிரி சிரித்துக்கொண்டே, எதற்காக வருத்தப்படுகிறாய் ஜலஜம்? எல்லோரையும் போல் அப்பா அம்மா பேச்சைக்கேட்டு அவர்கள் தேடிக் கொடுத்த புருஷனை விவாகம்செய்து கொண்டிருந்தால் இந்த விபரீதங்கள் எல்லாம் நடந்திருக்குமா? தெரியாமலா பெரியவர்கள் பாத்திரமறிந்து பிச்சையிடு, கோத்திரம் அறிந்து பெண்ணைக்கொடு' என்றார்கள். குலம் கோத்திரம் ஒன்றையும் விசாரியாமல் தான்தோன்றித்தனமாய் ஒரு புருஷனைக் காதல் மணம் செய்துகொண்டு என் பெற்றோர்களின் மனம் புண்ணாகும்படி நடந்து கொண்டேன். அந்தப் பாவம் வீண் போகுமா? அதற்குத் தகுந்த தண்டனையை அனுபவித்துத்தானே தீரவேண்டும். போகட்டும். பாக்கிக் கதையையும்கேள். குழந்தைக்கு மூன்று வயதானதும் ஒரு போர்டிங் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய் விட்டு விட்டார். அந்த வருஷமே எனக்கு ஒரு பிள்ளைக் குழந்தை பிறந்தது. அதற்குப் பழைய புராணத்தையே திருப்பிப்படித்தாயிற்று. குழந்தையை ஆயா தான் வளர்த்தாள். தாய்ப்பாலும் ஊட்டவில்லை. இதற்கிடையில் என் கணவருக்கு குடிப்பழக்கம் ஜாஸ்தியாகிவிட்டது. இரவு வேளைகளில் வீட்டில் தங்குவது அரிதாகிவிட்டது. ஆனால் ஆபீஸ் வேலைகளை மாத்திரம் வெகு ஒழுங்காய்ச் செய்து வந்தார். அந்த விஷயத்தில் அவருக்கு ரொம்ப நல்ல பெயர். அவர் வீட்டில் இல்லாத சமயத்தில் கெட்ட எண்ணமுடைய அவருடைய சினேகிதர்கள் சிலர் என் வீட்டிற்கு அடிக்கடி வந்து என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார்கள். அவர்களை வரவேற்று உபசரிக்காவிட்டால் என் கணவரின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமே என்ற பயம் ஒரு புறம் என்னை வதைக்கும். மற்றொரு புறம் கண்ட தத்தாரிகளை எல்லாம் அவர் இல்லாத நேரத்தில் வரவேற்று உபசரிக்கவும் என் மனம் மறுத்தது. ஏதோ சாக்குப் போக்குக்கூறி இரண்டோர் சமயம் நான் அவருடைய தூர்த்த நண்பர்கள் சிலரைச் சரிவரக் கவனியாமல் இருந்து விட்டேன். உடனே என் கணவரிடம் புகார் சென்றுவிட்டது.

''வேண்டுமென்றுதானே நீ என் சினேகிதர்களை அலட்சியம் செய்தாய்? என்னை மட்டம் தட்டுவதென்றால் உனக்குப் பரம திருப்திபோலிருக்கிறது. என் இஷ்டத்திற்கு அனுசரணையாய் என்னுடன் கூடி வாழ உனக்கு விருப்பம் இல்லாவிடில் நீ இப்பொழுதே பிரிந்து போகலாம். உன் செலவுக்கு வேண்டிய பணத்தை நான் அனுப்புகிறேன்'' என்று இன்னும் கண்டபடி இரைந்து சண்டை பிடித்தார்.

"என்றைக்கு அவர் வாயிலிருந்து மேற்சொன்ன வார்த்தைகள் வெளி வந்தனவோ அன்று முதலே நான் பேரிடி விழுந்தவள்போல் ஆனேன். மனோ வேதனை என்னை கோரமாய்த் தாக்கிற்று. உடம்பு நாளுக்குநாள் மெலிந்து கொண்டே வந்து என்னுடைய அழகும் யௌவனமும் மறைய ஆரம்பித்தன. என் சரீர அழகு வற்ற ஆரம்பித்ததும் அவருக்கு என்னிடம் இருந்த கொஞ்ச நஞ்ச ஆசையும் பற்றுதலும் அடியோடு வற்றிப்போயின. அழகும் ஆரோக்யமும் இளமையும் குன்றிப் போன என்னைத் தம்மோடு வெளியில் அழைத்துக்கொண்டுபோவது இப்பொழுதெல்லாம் அவருக்குக் கௌரவக் குறைவாகத் தோன்றி விட்டது. ஆகையால் கடந்த நான்கு வருஷங்களாக வீட்டோடுதான் அடைபட்டுக்கிடக்கிறேன். ஒரு விஷயத்தில் இது என் மனதிற்கு எவ்வளவோ நிம்மதியாக இருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு எங்களைப் பம்பாய்க்கு மாற்றினார்கள். இந்த நாகரிகப் பட்டணம் என் கணவரின் முற்போக்கான பழக்கவழக்கங்களுக்கு ரொம்ப அனுகூலத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. அங்கே ஒரு பார்ஸிக் காரியின் நட்பைச் சம்பாதித்துக்கொண்டார். ஆபீஸ் வேலை செய்யும் நேரம்போகப் பாக்கிப் பொழுதெல்லாம் அவளுடன் கூடிச் சல்லாபம் செய்வதிலேயே கழித்தார். என்னைப்பற்றி இருக்கிறேனா செத்தேனா என்றுகூட கவனிப்பதில்லை. பிள்ளைக் குழந்தை பிறந்தது என்றேனே, அது பிறந்த ஆறுமாதங்களுக்கெல்லாம் ஏதோ நோய் கண்டு இறந்து போயிற்று. பெண்ணுக்கு இப்பொழுது பத்துவயது ஆகிறது. பூனாவில் ஒரு போர்டிங் ஸ்கூலில் வாசிக்கிறது. எல்லாம் வெள்ளைக்கார பாணியில்தான் பழக்கியிருக்கிறார். அம்மா வென்ற வாஞ்சை அதற்குக் கொஞ்சமாவது காணோம். எப்படியிருக்கும்? பிறந்தவுடன் ஆயா கையில் ஒப்புவித்தாயிற்று. பிறகு கொஞ்சம் விவரம் தெரிந்ததும் போர்டிங் ஸ்கூலில் கொண்டுபோய்ச் சேர்த்தாயிற்று. மம்மீ (Mummy) என்று கூப்பிட மாத்திரம் தெரிகிறது. பாக்கி விஷயங்களில் எல்லாம் யாரோ மூன்றாம் மனுஷ்யாளிடம் நடந்து கொள்கிறமாதிரிதான் நடந்துகொள்கிறது.

என் தேகஸ்திதி வரவர க்ஷீண தசை அடைந்துகொண்டே வந்தது. இரண்டு மாஸங்களுக்கு முன் ஒருநாள் அவர் திடீரென்று ஒரு பிரபல டாக்டரை அழைத்துவந்து என் உடம்பைப் பரீக்ஷை செய்யச்சொன்னார். அந்த மேதாவி என்னைப் பரிசோதித்து விட்டு T. B. என்று உதட்டைப் பிதுக்கினான். உடனே அவர் என்னை மைசூருக்குக் கூட்டிக்கொண்டு வந்து இங்கே இருக்கும் க்ஷய ஆஸ்பத்திரியில்

அட்மிட்செய்துவிட்டு ஊருக்குத் திரும்பிப் போகத் துடியாய்த் துடித்தார். ஆனால் இந்த T. B. (Sanatorium) த்தில் வேலை பார்த்து வரும் ஸ்பெஷலிஸ்ட் என்னைப் பரீக்ஷை செய்து பார்த்துவிட்டு எனக்குத் துளிகூட க்ஷயசம்பந்தமான வியாதியே இல்லையென்றும் ஏதோ பெருத்த மனோ வியாதியினால்தான் என் உடம்பு அவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டதென்றும் என்னைச் சிகிச்சைக்காக அந்த ஆஸ்பத்ரியில் வைத்துக்கொள்ள முடியாதென்றும் கூறிவிட்டார். என் கணவருக்கோ இந்த நிலைமையில் என்னைத் தம்மோடு பம்பாய்க்கு அழைத்துக்கொண்டு போவது பலவிதங்களிலும் அஸௌகர்யமாகத் தோன்றியபடியால் ஒரு வீட்டை ஏற்பாடு செய்து இரண்டு வேலைக்காரர்களை எனக்கு உதவியாக இங்கு வைத்துவிட்டுத் தாம் மாத்திரம் பம்பாய்க்குத் திரும்பிப்போய்விட்டார். அவருக்கு என்ன குறைச்சல் ஜலஜம்? மாதம் இரண்டாயிரம் ரூபாய் வருமானம் வருகிறது! எனக்கு மாதம் இருநூறு ரூபாய் செலவுக்கு அனுப்புவதாகச் சொல்லிவிட்டுப் போனார். இனிமேல் எனக்குப்பணம் என்னத்திற்கு ஜலஜம்? யாருக்காக என் ஹ்ருதயத்தையே அர்ப்பணம் செய்து அவர் அன்பைப் பெறுவதற்காகப் பல கஷ்டங்களை அனுபவித்துத் திண்டாடினேனோ அப்பேர்ப்பட்டவரின் அன்பையே இழந்தாயிற்று! மரண தேவதையின் அழைப்பிற்காக ஆவலோடு காத்துக்கொண்டிருக்கும் எனக்கு அவருடைய பணத்தினால் என்ன பிரயோஜனம் நீயே சொல்? அடிநாளில் உயர்தர அந்தஸ்தில் இருக்கும் நாகரிக புருஷனைக் கணவனாக அடையவேண்டுமென்று ஆசைப்பட்டேன் அல்லவா? அதற்குத் தகுந்தபடியே நாகரிகத்தின் சிகரத்தில் வீற்றிருக்கும் ஒரு கலெக்டர் பிரபுவையே கடவுள் எனக்குக் கணவனாக வாய்க்கும்படி அனுக்கிரஹித்து அதனால் சரியான பாடத்தையும் கற்பித்துவிட்டார்! **மனம் போல்தான் இருக்கும் மங்கல்ய வாழ்வு** என்று எங்கள் பாட்டி நான் சிறியவளாக இருக்கும்பொழுது அடிக்கடி கூறுவாள். அது என் விஷயத்தில் எவ்வளவு உண்மையாய்ப் பலித்துவிட்டதென்பதை இப்பொழுது தெரிந்துகொண்டேன். ஜலஜம், என் பரிதாபகரமான வாழ்க்கையைப் பற்றி உன்னிடம் கூறியதினால் உன் மனதிற்கும் அத்யந்த வருத்தத்தையும் கலக்கத்தையும் உண்டாக்கிவிட்டேன் என்பதை நான் நன்கு அறிகிறேன். என்னை மன்னிப்பாயாக. என் மனதை இவ்வளவு வருஷங்களாக அமுக்கிவந்த எனது கஷ்டங்களை எல்லாம் யாரிடமாவது வெளியிட்டால் ஒழிய என் நெஞ்சு நிம்மதியடையாதுபோல் எனக்குத் தோன்றிற்று. என் பிரிய நேசியாகிய உன்னையே அகஸ்மாத்தாய்ச் சந்தித்து, உன்னிடமே என் மனதை வெளியிடும்படியான பாக்கியம் கிட்டியது எனது அதிர்ஷ்டம் என்றே கருதுகிறேன். ஜலஜம், கடைசியாய் ஒரே ஒரு வேண்டுகோள். அதை நீ மறுக்காமல் நிறைவேற்றிவைப்பாயா?'' என்று கொஞ்சும் குரலில் கேட்டாள் நிர்மலா.

''அதென்ன சொல்? என்னால் முடிந்தால் அவச்யம் நிறைவேற்றி வைக்கிறேன்'' என்று நிர்மலாவுக்கு வாக்குறுதி கொடுத்தேன் நான்.

''உன்னால் முடியாத விஷயமல்ல ஜலஜம். சுலபமாய்ச் செய்யக்கூடியதுதான். நான் இப்பொழுது உன்னிடம் வெளியிட்ட எனது வாழ்க்கை வரலாற்றை அப்படியே நீ ஒரு கதையாக எழுதிப் பத்திரிகைமூலம் வெளியுலகிற்கும் தெரியப்படுத்த வேண்டுமென்பதே எனது கோரிக்கை. ஆதியில் நான் கொண்டிருந்த அதேமாதிரி மனப்பான்மையுடைய அநேக இரண்டும் கெட்டானான பெண்மணிகளுக்கு என் வாழ்க்கை வரலாறு ஒரு சிறந்த படிப்பினையாக இருக்குமென்று திடமாய் நம்புகிறேன். என்ன நான் சொல்வது?'' என்று என் பதிலை எதிர்பார்த்து, என்னையே உற்று நோக்கினாள் நிர்மலா.

நான் எவ்வளவு அடக்கிப் பார்த்தும் என்னால் என் மனதில் ஏற்பட்ட சங்கடத்தை மறைக்க முடியவில்லை. கண்களில் கண்ணீர் ஊற்றுப்போல் சுரந்தது. பேச நாவெழவில்லை. அவள் விருப்பப்படியே செய்வதாக மௌனமாய்த் தலையை ஆட்டினேன். நிர்மலா க்ருதக்ஞதையுடன் என்னை ஓர் பார்வைபார்த்துவிட்டு தன் முகத்தை தலையணையில் புதைத்துக்கொண்டு விக்கிவிக்கி அழுதாள். என்னால் அவளுக்கு எவ்வித சமாதானம் கூறமுடியும்? இல்லை, ஏதாவது இரண்டு வார்த்தைகள் உபசாரமாகக் கூறினால், கரை ஏறமுடியாத அளவு ஆழம்கொண்ட துக்கக் கடலில் அமிழ்ந்து கிடக்கும் அவளுடைய ஹ்ருதயத்திற்கு அமைதிதான் உண்டாகப் போகிறதா? அதை யெல்லாம் மீறிவிட்டது இப்பொழுது அவளுடைய நிலைமை. அவள் கூறியதுபோல் அவளுக்கு இனிமேல் நிம்மதி அளிக்கக்கூடியது மரணம் ஒன்றுதான்!

நான் நிர்மலாவைப் போய்ப் பார்த்த ஒரு வாரத்திற்கெல்லாம் அவள் இரவும் பகலும் இடைவிடாது தியானித்துக் கொண்டிருந்த மரணதேவதை அவளைச் சுவிகரித்துக்கொண்டுவிட்டாள். அவள் கணவனுக்கும் இரண்டு தினங்களுக்கு முன்னரே தந்தி கொடுத்தும் அவன் வரவே இல்லை. அவளுடைய இறுதிக் காலத்தில் அவளது மரணப் படுக்கையின் அருகே நின்றுகொண்டிருந்த எனக்கு அவளுடைய முடிவு மிகவும் அமைதியாக இருந்ததாகவே புலப்பட்டது. பல வருஷங்களாய் நிம்மதியும் சந்தோஷமும் இல்லாமல் இந்தப் பாப உலகில் தத்தளித்துக்கொண்டிருந்த அவளுடைய ஆத்மா இனிமேலாவது சாச்வதமான சாந்தியைப் பெறும்படி கடவுள் அருள்வாராக!

# உடைந்த வீணை



தொடர் கதை

கே. சுந்தரம்மாள்

வசந்தமஹால் ஸலவைக் கற்களாலும், கலர் பீங்கான் கற்களினாலும் உயர்தரமாகக் கட்டப் பெற்றவை. ஹாலின் நாற்புறமும் திறந்த வராந்தா. அதில் அழகிய புஷ்பச்செடி கொடிகள் வளர்க்கப்பட்டிருந்தன. ஹாலில் நாகரிகமமைந்த, ஸோபாக்கள் நாற்காலிகள் மேஜை முதலியன போடப்பட்டிருந்தன. இரவு பன்னிரண்டுமணி. உலகம் சலனமற்றிருந்தது. சந்திரன் ஆகாய மத்தியில் பவனி வந்துகொண்டிருந்தான். ஹாலில் விளக்கு எரியவில்லை. வாசற்படியோரமாக நின்று மாலதியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான் நரேன். அவன் மனதில் அநேக எண்ணங்கள் தோன்றி மறைந்தன. கண்ணில் நீர் வடிந்துகொண்டேயிருந்தது. மாலதியின் நிலைமையை நினைத்து மனம் புழுங்கும்பொழுது அவன் தன் கண்களில் ஒன்றுமே தென்படவில்லை. பிரமை பிடித்தவன்போல் வெறும் வெளியைப் பார்த்தவண்ணமிருந்தான்.

அடிமேலடிவைத்துப் பூனைபோல் இவன் பின்னால் வந்து நின்றாள் மாலதி. இவனுடைய மோன நிலையைக்கண்ட மாலதிக்கு விளையாடவேறு உணர்வு ஏற்பட்டது. அவனது கண்களை இரு கைகளாலும் மூடினாள். சட்டென, மின்சாரம் தாக்குண்டதுபோன்ற அதிர்ச்சி, அவள் சந்தோஷம் மாறித் திகைப்பு ஏற்பட்டுவிட்டது. தன்கையை எடுத்து, "நரேன், என்ன இது?" என்றாள் பதட்டத்துடன்.

அவள் தன் கண்களை மூடினதும், "ஐயோ? பேதையே உன் விளையாட்டையும், அன்பின் ஸ்பர்சத்தையும் அடைய நான் அருகனில்லையே" என்று நினைத்தான். அவள் எதிரில் நின்று கேட்கும்பொழுது பதில் சொல்லாமல் கருவண்டுபோன்ற கண்களையும், சிவந்த அதரத்தையும் பார்த்தபடியே நின்றான். "மாலதி! பூரிப்படைந்த உனது மனதைப் புண்படுத்தப் போகிறேனே" என்றது மனம்.

இவனது மௌனத்தைக்கண்ட மாலதி பொறுமையிழந்து, அவன் இருதோள்களைப் பற்றிக் குலுக்கி "நரேன், ஏன் பேசாமல் மௌனம் சாதிக்கிறீர்கள்?" என்றாள். பதில் அவன் கண்ணீரைத்தான்கண்டாள், வகை தெரியாமல் அவளுக்கும் கண்ணில் நீர் பெருகலாயிற்று, நிற்கமுடியாமல் அவன் தோளில் சாய்ந்தாள். வாய் பேசாமல் அவனை இறுக அணைத்து முகத்துடன் முகத்தைப் பதித்தாள். ஒருவர் கண்ணீர் ஒருவர் மார்பை நனைத்தது. சற்றுநேரம், அந்த உணர்ச்சியால் மெய்மறந்து நின்றார்கள்.

"மாலதி! தெளிந்த தடாகத்தை மதயானை வந்து கலக்கிச் சேறும் சகதியுமாகச் செய்வது போல், உனது தூய ஹ்ருதயத்தைக் கலக்கிக் கலங்கமுண்டாக்கவே நான் வந்து சேர்ந்தேன். மதயானை அகன்றுவிட்டால் நீரோட்டம் தெளிந்துவிடுமல்லவா?" என்றான்.

"நரேன், என்ன புதிர் போடுகிறீர்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. என் ஹ்ருதயம் என்னவோ வேதனை செய்கிறது. தாங்கள் வசந்தமஹாலை குறிப்பிட்டதால்சற்று நேரம் இன்பகரமாகப் பேசிப்பொழுது போக்கலாம் என்று வந்தேன். ஆனால்......" என்று முடிப்பதற்கு முன்,

"இன்பமா? அதற்கு நாம் பிறக்கவில்லை மாலதி. துன்பம், துன்பம், அதுவே நமது காதலுக்குக் கையுறை" என்றான்.

"நரேன் விஷயத்தைச் சொல்லமாட்டீர்களா? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே" என்று கெஞ்சினாள்.

''விளங்கவைக்கிறேன் வா!'' என்று, அவளை அணைத்தபடியே பக்கத்திலிருந்த சோபாவில் உட்கார்ந்தான். பிறகு அன்று ராகவய்யாவிற்கும், மாதவனுக்கும் நடந்த சம்பாஷணையைக் கூறிவிட்டு, ''மாலதி! மாதவன் தைரியத்துடன்தான் போராடுகிறான். ஆனால் நான் உன் தந்தை மனம் நோக நடக்கமாட்டேன். அதனால் இன்றிரவே, கண் காணாமல் செல்லத் தீர்மானித்துவிட்டேன். போகுமுன் உன்னைப் பார்க்கவேண்டு மென்பதற்காகவே வரச்சொன்னேன்'' என்றான்.

''நரேன்! அப்பாவிற்கு இஷ்டமில்லாவிடில் கல்யாணம் வேண்டாம். அன்று நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி நடந்து விடுவோம். இதற்காக நீங்கள் வெளியூர் செல்லுவானேன்?'' என்றாள்.

''அந்தமாதிரி ஒப்பந்தம் இனி முடியாது. அப்பொழுது உன் நிழல்கூட என்மேல் படாதவாறு நடந்துவந்தோம். இப்பொழுது என் ஆலிங்கனத்தால் கட்டுப்பட்டிருக்கிறாய். எந்த விஷயமும் ஓர் கட்டுப்பாட்டில் இருக்கும்வரைதான் உறுதி நிற்கமுடியும். ஒரு தடவை சற்றுத் தளர்ந்துவிட்டால், அதே பழக்கத்திற்குத் தைரியம் வந்துவிடுகிறது. நமது பருவ கால உணர்ச்சியைத் தடுப்பது, காட்டாற்றில் போடப்படும் அணைபோல்தான் பயன்படும்.''

''இல்லை. நரேன், நினைத்தால் உறுதியுடன் நிற்கமுடியும். நான் என்னையும் காத்துக்கொண்டு, உங்களையும் நெறிபிசகாமல் நடக்கச் செய்துவிடுவேன். நம்புங்கள்.''

''சரி. நீ சொல்லியபடி நடந்தாலும், மாதவன் இதற்குச் சம்மதிக்கமாட்டான். நமது கல்யாணத்தை எவ்விதமும் நடத்தியே தீருவான். அப்படிச் செய்வதால் உண்டாகும் விளைவுகள் அதிகம். குடும்பத்தில் சச்சரவு. தகப்பன் பிள்ளைகள் பிரிவு, உண்ட வீட்டிற்கு இரண்டகம், சுயநலம், கடமை தவறல் இவ்வளவும் ஏற்படும். நானும் எவ்வளவோ சிந்தனை செய்துதான் கடைசியில் இந்த முடிவிற்கு வந்தேன்.''

''நரேன், கடைசியில் என் இன்பம் ஸ்வப்பன வாழ்வுதானா? பிறவிக் குருடனுக்குக் கண்ணைக் கொடுத்துச்சற்றுநேரம் உலக விநோதங்களைக் காட்டி, அதை அவன் நன்றாக அறிந்து கொள்ளுமுன் மறுபடி கண்ணைப் பிடுங்கினது போல் ஆகிவிட்டது என் நிலைமை. சென்ற நாட்களில் கச்சேரிகளின் நிமித்தம் தாங்கள் வெளியூர் சென்றிருக்கும் நாட்களிலேயே, நீங்கள் இந்த நாட்களில் திரும்பிவிடுவீர்கள் என்று தெரிந்த நிலைமையிலேயே நான்படும் வேதனை, பிரிவினால் ஏற்படும் தாபம் என்னை மிகவும் வாட்டும். இப்பொழுது, இனி பார்க்கக்கூட முடியாது என்றால் நான் என்ன செய்வேன்?—நரேன்—இந்த நிலைமையிலேயே என் ஜீவன் பிரியலாகாதா'' என்றாள் துக்கம் நெஞ்சையடைக்க விம்மியவாறே.

''மாலதி! அதை நினைக்கும்பொழுதுதான் எனக்கும் ஸஹிக்கமுடியாத வேதனை யுண்டாகிறது. உன் ஹ்ருதயத்தில் வளர்ந்த காதல் செடியை உறுதியினாலும் புத்தி வன்மையினாலும், நிராசையாலும் வளர விடாமல் நசுக்கி வந்தாய். இப்பொழுது, மாதவனின் சொல்லும், எனது செய்கையும், எருவும், ஜலமுமாகி வாடின செடி தளிர்விட்டுவிட்டது. மறுபடியும் அதை நீ சிதைப்பது கடினமான கஷ்டம். இன்று நான் ஏன் இவ்வாறு நடந்துகொண்டேனென்று நொந்துகொள்கிறேன். நீ துன்பம் அனுபவிக்கவேதான் விதியின் கட்டளையோ? மாலதி! என்னால் சகிக்க முடியவில்லையே. என்ன செய்வேன்.''

''நரேன்! நான் அப்பாவிடம், மாதவன் சொல்வதுபோல் செய்யவேண்டாம். ஆனால் நரேன் இவ்விடமே இருக்கும்படியான ஏற்பாட்டைச் செய்துவிடுங்கள்'' என்று கேட்டுக் கொள்கிறேன். சாப்பாட்டு விஷயம் கூட பிறருடைய வற்புறுத்தலின்பேரிலேயே காலத்தில் சாப்பிடுவீர்கள். உங்கள் தந்தை அவ்வளவு அருமையாகவும் செல்வமாகவும் வளர்த்து வந்திருக்கிறார். இவ்விடமும் என் பெற்றோர்கள் உங்களை அருமையாக நடத்தி வந்தார்கள். நீங்கள் தன்னந்தனியாகச்சென்றால் என்ன கஷ்டங்கள் நேருமோ, தாங்கள் எவ்விதம் காலம் நடத்துவீர்கள். இதையெல்லாம் நினைத்தால் எவ்வளவு பயங்கரங்கள் தென்படுகின்றன. அதனால் நீங்கள் பிரயாணம் என்பதை நிறுத்தியே ஆகவேண்டும்'' என்றாள்.

''மாலதி அது முடியாது. நான் சென்றேயாகவேண்டும். என் கையில் வேண்டிய பணமிருக்கிறது. எல்லாப் பாங்குகளிலும் என் பணமிருக்கிறது. எவ்விடத்திலும் பெற்றுக் கொள்ளமுடியும். 'நரேன் அவ்வித உணர்ச்சியுடன் மாலதியிடம் பழகவில்லை. இதை நான் அறிவேன்' என்ற உன் தந்தையின் வாக்யம் என் மெய்சிலிர்க்கச்செய்கிறது. அவ்வளவு நம்பிக்கையுற்ற மதிப்பைப்பெற்ற நான், நேர் விரோதமாக, உன் உள்ளத்தையும் உன்னையும் ஒருங்கே கவர நினைத்த நான் அவர் முகத்தில் விழிக்க எப்படிமுடியும்? இவன் இப்படிப் பட்டவனா? என்று அவர் நினைத்து என்னை நோக்கும் தன்மையை என் கற்பனா சக்தியில் கண்டே என்தேகமும் மனமும் குன்றுகின்றன. மாலதி அதைவிட என் உயிரை விட்டுவிட்டால் என்ன என்ற உணர்ச்சியே என்முன் நிற்கிறது. வீணை ஒன்றே துணையாக நிர்க்கதியாக வந்த என்னை, இவ்வளவு பெயரும் புகழும் உண்டாக்கி, பெற்ற குழந்தையைவிட மேன்மையாக நடத்தி, என்மேல் அளவற்ற மதிப்பும் அன்பும்வைத்த அவர் மனம்நோக நடக்கலாமா? குடும்ப கௌரவம் போய்விடும். உலகத்தின்முன் தலைகுனிய நேரிடும் என்று அவர் நினைக்கும்பொழுது நான் அதைச் செய்யலாமா? அதைவிட நன்றிகெட்ட செய்கைவேறு என்ன இருக்கிறது? என் தந்தை வாக்யப்

பிரகாரம் உன்னையடைந்தேன். ஆனால் அனுபவிக்க, விதி அனுமதிக்கவில்லை. கடமை காதல் என்ற பிரச்னையில், காதலையே முக்யமாக எடுத்துக்காட்டிய என் தந்தையே கடமைதான் முக்யம் என்றார். அதனால் மாலதி கடமையை உத்தேசித்து நான் செல்வதே மேல்.''

''நீங்கள் தீர்மானத்தை மாற்றப்போவதில்லையா? ஏன் கடமையை உத்தேசித்து அப்பாவின் விருப்பப்படி ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு, இவ்விடமிருந்து உங்களைக் கண்ணால் காணும் பாக்கியத்தையாவது எனக்கு அளிக்கலாகாதா?''

''மாலதி, என் மனமறிந்த நீயா இப்படிப் பேசுவது? என் மனதில் இடமிருந்தாலல்லவோ இன்னொருவள் புகமுடியும்? உன்னைப் ஸ்பர்சித்த கைகள் வேறு பெண்ணைத் தீண்ட முடியுமா? இதில் கடமை என்னைக் கட்டுப்படுத்தாது'' என்றான் சலிப்புடன்.

''அவனது சொல்லின் உத்வேகத்தைக்கண்ட மாலதி, நரேன் மன்னித்துவிடுங்கள். உங்கள் உள்ளம் அறியாமல் பேசவில்லை. பிரிவுத்துன்பத்தைத் தாங்கமுடியாமல் சொல்லிவிட்டேன். நரேன் உங்கள் பிரிவை என்னால் சஹிக்கமுடியாது. என்னையும் அழைத்துச்செல்லுங்கள். நம்மவர் என்ற மனிதர் இல்லாத கண்காணாத தேசம் சென்றுவிடுவோம். நம் இருவரிடத்திலும் வித்தையிருக்கிறது. நாம் ஆனந்தமாகக் காலங்கழிக்கலாம். நான் உங்களை விடமாட்டேன்'' என அவனை இறுகத் தழுவிக்கொண்டாள்.

இரு கையால் அணைத்து, ஒரு கையினால் அவள் நெற்றியில் விழுந்த கேசத்தை விலக்கிக் கொண்டே, ''குழந்தைபோல் பேசுகிறாயே. 'பாடகனோடு ஓடிவிட்டாள்' என்ற சொல் உன் பெற்றோரை எவ்வளவு பாதிக்கும்? சமூகம் உன் தந்தையை எவ்வாறு மதிக்கும்? அவர் ஹ்ருதயம் எப்படிப்பரிதவிக்கும். மாலதி, உலகில்மனிதனுக்குக் 'கடமை'தான் எந்த விஷயத்திலும் முக்ய ஸ்தானம் வஹிக்கக்கூடியது. நாம் கடமைக்காகக் காதலைத் தியாகம் செய்ய வேண்டியதே. ஒவ்வொரு ரஜபுத்ர ரமணிகள் வீரர்கள், முதலியவர்கள் கடமைக்காக எவ்வளவு அரிய தியாகங்களைச் செய்ததாகப் படித்திருக்கிறோம். நமது கண்முன்னாகத் தேசத்தலைவர்கள் எவ்வளவு அரிய தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். எவ்வளவு பேர் உயிரையே தியாகம் செய்திருக்கிறார்கள். பாரதநாட்டில் பிறந்த நாம் சுயநலத்தைக் கோரலாமா? நான் இவ்விடமிருப்பது தவறு. உன் தந்தை முகத்தில் விழிக்கவே என் நெஞ்சும் அஞ்சுகிறது. மனதைத் தைரியம் செய்துகொள். என் கண்ணல்ல, எனக்குப்போகச் சந்தோஷமாகவிடையளிக்கமாட்டாயா?'' என்றான்.

''சந்தோஷம்! உம். நரேன் அது இந்த ஜன்மத்தில் அற்றுவிட்டது. பொழுது விடியாமல் இப்படியே இரவு நீடிக்கட்டுமே. தாங்கள் பிரயாணம் எப்பொழுது?'' என்றாள்.

''இதோ! இந்த இரவிலேயே. தயாராகவே வந்துவிட்டேன். அதோ பார். வீணையும் தோல் பெட்டியும். இனி நான் சொல்லப்போகும் விஷயங்களைத்தான் நீ முக்கியமாகக் கவனிக்கவேண்டும். அதற்காகவே உன்னை இவ்விடம் வரச்சொன்னேன். நான் போன பின்பு மாதவன் உன்னிடம் என்னைப்பற்றிக் கேட்பான். நீ உனக்கு ஒன்றுமே தெரியாதென்று சொல்லிவிடவேண்டும். நான் சென்றதை நீ எதிர்பாராதவிதமாக அவர்கள்மூலம் தெரிந்துகொண்டதாகக் காட்டிக்கொள்ள வேண்டும். உன் பெற்றோர் மனம்வருந்த நீ நடக்கலாகாது. உன் தாபத்தை வெளியில் காட்டிக்கொள்ளாதே. மாதவன் உன்னை எவ்வளவு நிர்ப்பந்தப்படுத்தினாலும் சொல்லாதே. இந்தா அன்பின் அறிகுறி. கண்காக்ஷிச்சாலையில் நமது சித்திரங்கள் பரிசு பெற்றதற்காகப் பரிசாகவந்த, ஒரே மாதிரியான மோதிரங்களை மாற்றிக்கொள்ளுவோம். உன் பெயர் பதித்தது, என்னிடத்தில். என் பெயர் பதித்தது உன்னிடத்தில். கழற்றிப் பார்த்தாலொழிய, பிறர் அறியமுடியாது. ஆகாயவாணி பூமிதேவி சந்திரன் இவர்கள் சாக்ஷியாக, ஈசன் முன்னாக நாம் சதிபதிகள். அன்று நீ சொன்னபடி, 'என்னுடையவள்' என்ற எண்ணமே போதுமானது'' என்று சொல்லிக்கொண்டே அவள் விரலில் மோதிரத்தையிட்டான். அவளும் அவ்வாறே செய்தாள். ''அடவிதியே! இப்படியாகவா இவர்கள் மணவினை'' என்று தாபத்தைக் கக்குவதுபோல், அம்மங்கின வெளிச்சத்தில் அவ்வைரங்கள் சுடரொளியை வீசின. வாசற்படிக்குப் பக்கத்தில் ஒரு செடியில் கொத்தாக அடுக்கு மல்லிகை புஷ்பித்திருந்தது. நரேன் அதை எட்டிப்பறித்து, மாலதியின் தலையில் வைத்தான்.

வாயைத் திறக்காமல் அவன் செய்பவைகளைத் தடுக்காமல் கண்ணீர் மாலையுடன் நின்றுகொண்டிருந்தாள் மாலதி.

''மாலதி நான் இருக்கும் சற்றுநேரம் வரை, உனது அழகிய முகத்தில் புன்சிரிப்பைக் காண முடியாதா? சற்றுநேரம், சந்தோஷமாக இருக்கமாட்டாயா? கடைசியான இந்த வேண்டுகோளை நிராகரிப்பாயா'' என்றான். வெளியில் அடிக்கும் நிலாவின் சாயையில் மங்கின வெளிச்சத்தில் சோகமே உருவெடுத்ததுபோன்று நின்ற பரிதாபமான யுவதியின் தோற்றம் அவன் ஹ்ருதயத்தைப் பிளந்தது. இவன் கொஞ்சும் மொழிகளைக்கேட்ட மாலதிக்குத் துக்கமே அதிகமாயிற்று. சட்டென அவன் பாதங்களில்விழுந்து நமஸ்கரித்தாள். கண்ணீர் பாத்யம் கொடுத்தது. அப்படியே நிமிர்ந்து நோக்கினாள். அவன் சிரித்தான். ஆனால் அதில் ஜீவனில்லையே. அப்படியே அவன் கால்களைக் கட்டிக்கொண்டு, ''நரேன் இதைத்தவிர வேறு வழியில்லையா? சந்தோஷ

மாக இரு என்றால் எப்படிமுடியும்? என்னால் தாங்கமுடியவில்லையே. எதுவந்தாலும் வரட்டும். எதிர்க்கத் தயார். நான் உங்களைப் போகவிடேன் நரேன். என்னை விட்டுவிட்டுத் தாங்கள் போகக்கூடாது'' என்று அவன்முழங் கால்களில் முகத்தைப் பதித்துக்கொண்டாள். குனிந்து அவளைத்தூக்கி இரு கைகளினாலும் குழந்தையை ஏந்துவதுபோல் தூக்கிக் கொண்டு "மாலதி! இப்படியே உன்னைத்தூக்கி கொண்டு, உலகம் பூராவும் சுற்றத் தைரியமுண்டு, மனமும் உண்டு. ஆனால் 'கடமை'! மாலதி, அளவற்ற நம்பிக்கைவைத்த உன் தந்தையின் முன், இவ்வித எண்ணத்துடன் நான் எவ்விதம் செல்லுவேன். இந்தஓர் உணர்ச்சியே என்னை மிகவும் பாதிக்கின்றது. மாலதி மனதைத் தைர்யப்படுத்திக்கொள்ளு. ''கடமை'' என்று நினை. நீ என்னிடம் வைத்த அன்பு பரிசுத்தமானால் தெய்வீகமானால், கேவல உணர்ச்சி அற்றதானால், நாம் நினைக்கிறபடி நடக்கமுடியும். மாலதி உன்னால் முடியும்'' என்று அவளைக் கீழேவிட்டான். பிறகு நான் கடமையைக் காப்பாற்ற நீயே குருவாக வேண்டும் என்றான்.

நரேனின் இக்கடைசி வார்த்தை அவள் ஹ்ருதயத்தில் ஓர் அம்பெனத்தைத்தது. மேகத்தினின்றும் விடுபட்ட சந்திரனென அவள் மனதில் ஓர் ஜோதி தோன்றினதுபோல் ஓர் தைரியம் ஏற்பட்டது. "நரேன் என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் தீர்மானம்போற்றத் தகுந்தது. 'பிரிவு' என்பதைத் தாங்கமுடியாத பெண்மையின் இயற்கை பிழைபட்டதாகும். நீங்கள் சொல்லும் புத்திமதியை ஏற்றுக் கொள்ளுகிறேன்'' என்றாள்.

இதுவரை அவளைச் சமாதனப்படுத்த முயன்ற அவன்மனம் அவளது ஹ்ருதயமற்ற உணர்ச்சியிழந்த தைரிய வார்த்தைகளைக் கேட்டதும் பலஹீனமுற்றது. "ஐயோ! மாலதி! என்ன கொடுமை!'' என்று நீண்ட மூச்சுவிட்டான். சற்றுநேரம் ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் நின்றார்கள். பிறகு "மாலதி!'' என்று இரு கைகளையும் நீட்டினான். சட்டென அவன் கைக்குள் பாய்ந்தாள். அணைத்து ஆர்வம்தீரக் கன்னங்களிலும் அதரங்களிலும் முத்தமிட்டான். அவளும் அதைத் திருப்பினாள்.

"அவள் மோவாயைப் பிடித்து நிமிர்த்தி, மாலதி ஓர் வேண்டுகோள் நிறைவேற்றமுடியுமா?'' என்றாள்.

"முடியுமா? என்று கேட்கலாமா? உங்கள் கட்டளைக்கு ஏங்கி நிற்கிறேனே'' என்றாள்.

"நாம் தினம் இரவு பத்து மணிக்கு வீணை வாசிப்போம், அல்லவா? அந்த நேரத்தில்; நாம் எப்பொழுதும், ஒருவர் மனதில் ஒருவர் வாசம் செய்வது ஒருபுறமிருக்கட்டும், அந்த நேரத்தை நான் உனக்காகவும், நீ எனக்காகவும் கழிக்கவேண்டும். நான், எந்தக் கானகத்தில் சுற்றினாலும், அந்த வேளையைத் தவற விடமாட்டேன். அதற்கு ஓர் அடையாளம் வேண்டுமல்லவா. நமக்குப் பற்றுதலாக இருப்பது சங்கீதம். அதனால் அந்தப் பத்து மணிக்கு இருவரும் வீணை வாசிக்கவேண்டும். பாட்டு என்னவென்றால், நீ எப்பொழுதும் பிரியமாகப் பாடிக்கொண்டிருப்பாயே, அது தற்சமயம் நமக்குப் பொருத்தமானதே. அதனால் 'இன்பக் கனவொன்று நான் கண்டேன்தோழி' என்பதே செய்வாயா?'' என்றான்.

"நரேன் இதற்குக் கேள்வியுண்டா? உங்கள் இஷ்டப்படி எனது கடைசி மூச்சு இருக்கும் வரை வாசித்தே தீருவேன். நரேன் மறுபடியும் தங்கள் தரிசனம் அடியாளுக்குக் கிடைக்குமா? என் ஜீவன் பிரியும் தருணத்திலாவது உங்கள் தரிசனம் கிடைக்குமா?'' என்றாள்.

"மாலதி. நீ புத்திசாலி! உன் அடக்கம் உன்னைக் காக்கும். நமது அன்பு தெய்வீகமானால், நிச்சயம் நாம் மறுபடி சந்திப்போம். மூன்று வருஷமாக அடக்கிவைத்திருந்த காதல் தீயானது இந்த ஒரு மாதத்தில், குமுறி நாலாவிதமாகப் பற்றியெரிய எந்த விதியானது விளையாடினதோ? அதே விதியானது உனது தந்தையின் மனதைத் திருப்பலாம். நாம் கூடலாம் மணவாழ்க்கை நடத்தலாம். அல்லது ஜீவன் பிரியமட்டும் சந்திக்காமல் செய்யலாம். அதனால் நாம் நினைத்துப் பயன்? மாலதி, யாவும் சொன்னபடி நடத்திவருவாய் என்பது என் திடமான நம்பிக்கை. மாதவனிடம் தவறிக் கூறிவிடாதே. நான் சென்றுவரட்டுமா?'' என்றான்.

"அவன் இரு கைகளையும் பற்றிக்கொண்டு நரேன் சென்றுவாருங்கள். நாம் கடமையைக் காப்போம். சுயநலத்தைத் தியாகம் செய்வோம். சென்றவிடத்தில் உங்களுக்குச் சாந்தி கிட்டட்டும். பகவான் உங்களை ரக்ஷிக்கட்டும்'' என்று தைரியத்துடன் சொல்லுவதாக நினைத்துச் சொன்னாளேதவிர, உடம்பு கிடுகிடென்று ஆடினது. கண்ணில் நீர் தளும்பி நின்றது. அவன் கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். கை நனைந்தது.

"அவள் கையை அவனும் கண்களில் ஒற்றிக் கொண்டான். பிறகு நான்சென்றுவரட்டுமா?'' என்றான் தொண்டை கம்மியது.

"உம்'' என்று தலையை அசைத்தாள். அவ்வளவே நிற்கமுடியாமல் சாயப்போனாள். நரேன் தாங்கினான். அவன் மார்பின்மீது முகத்தைப் புதைத்தாள். இருவரும் முகத்தோடு முகம் பதித்து, விம்மினார்கள். அருவி நீரைப்போல் கண்ணீர் பெருகிற்று. அவள் முந்தானை பிழியும் நிலைமைக்கு வந்துவிட்டது. ஒருகால் மணிநேரம் இவ்விதம் சென்றது.

"மாலதி! சாதகப்பக்ஷிபோல் ஏங்கவேண்டியது நமது விதியாகிவிட்டது. எவ்வளவு நேரம் இவ்விதமிருந்தாலும் நமது கலி நீங்கப்போவ

இல்லை. எனக்கு விடையளி" என்றுதனது பிடியைத் தளர்த்தினான். சட்டென அவனிடமிருந்து விலகி மறுபடியும் நமஸ்கரித்தாள். எழுந்துநின்று, சென்றுவாருங்கள் என்றாள்,

ஒரு கையில் வீணையையும், ஒரு கையில் பெட்டியையும் எடுத்துக்கொண்டு மாலதி சென்றுவருகிறேன் என்றான்.

"நரேன், ஓர் கடிதமாவது போட முடியுமா?" என்றாள்.

ஓர் வறண்ட சிரிப்பு. "ஐயோ பேதைப் பெண்ணே, நான் செல்லும் நிலைமை கடிதம் போடலாமா? மாலதி. ஒருவித பாக்யமும் கிடையாது. இருவர் ஹ்ருதயத்திலும் சதா காண்போம் வரட்டுமா?" என்றான்.

"உம்" என்று தலையை அசைத்தாள். அவன் பெட்டியைக் கையில் வாங்கிக்கொண்டு, ஹாலைத் தாண்டி, வராந்தாவின் கோடியிலுள்ள படிக்கட்டுவரை சென்றாள். அங்கு வந்தவுடன் பெட்டியைக் கையில் வாங்கிக்கொண்டு, "மாலதி, வருந்தாதே. கூடிய சீக்கிரம் நாம் சந்திப்போம்" என்று என் மனதில் ஏதோ சொல்லுகிறது. வருகிறேன்" என்றான்.

"அன்ப!" என்று கரங்களைக் குவித்தாள். அவளைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஐந்தாறு படிகள் இறங்கினான். அதற்குமேல் அவள் நிற்கும் பரிதாப நிலையைக் காணச் சகியாதவனாய் மடமடவென்று இறங்கிவிட்டான். கீழே முனை திரும்பும்பொழுது 'கன்றைப் பிரிந்த பசுவைப்போல்' திரும்பிப் பார்த்தான்.

"நரேன்" என்றாள். அவ்வளவே. ஒரே தாவலாக, அடர்ந்த தோப்பிற்குள் மறைந்துவிட்டான்.

"ஐயோ! நரேன்! என் இன்பக் கனவு இப்படியா முடியவேண்டும்? தாங்கள் பரதேசிபோல் செல்லுவதற்காகவா என் காதல் உதவிற்று. பாழுந்தெய்வமே! என்னையேன் படைத்தாய். இரக்கமற்ற தெய்வமே" என்று கன்றையிழந்த பசுவைப்போல் கதறினாள். அப்படியே உணர்வற்று அலங்கோலமாக விழுந்துவிட்டாள். இக்காக்ஷியைக் காணச் சகியாதவன் போல், சந்திரனும் மேகத்தினுள் மறைந்தான்.

(அடுத்தஇதழில் முடியும்)


# சைபால்

CIBOL

(வெளி உபயோகத்திற்கு)

—முகப்பரு, சொரிசிறங்கு, வேனல்கட்டி,— பித்தவெடிப்பு, தீப்பட்டபுண், சேத்துப்புண், கரப்பான், படை, புழுக்கடி முதலிய தோல் சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளுக்கும்

— சிறந்தது. —

எரிச்சல் கிடையாது —

— துணிகளில் கரைபிடிக்காது

— நறுமணம் உள்ளது. —

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்:—

**THE SOUTH INDIAN MFG. COY.**

**44, DHANAPPA MUDALY ST.**

**MADURA**

# புத்தக விமர்சனம்

**பராசக்தி அருச்சனை**

*[ஆசிரியர்—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். பதிப்பாளர்—இராமச்சந்திரபுரம் அன்பு நிலயத்தார். விலை அணா 3]*

தெய்வங்கள் மக்களுக்கு அருள்புரிவது உபாஸனைகளை அனுஸரித்தே. அவ்வுபாஸனைகளும் பல்வேறு திறத்தன. அவற்றுள் அருச்சனை புரிவதும் ஒன்றாம். இந்த அர்ச்சனைமாலை பராசக்தியை உபாசித்தற்குப் பயன்படுவதாகும். மாலையின் செய்யுள் நடை இனிமை மிக்கதாய் விளங்குகின்றது. இதன் இறுதியிலே 'சிவசக்தி உபாசனை' என்ற பகுதியும் அமைந்துளது. இவ்வருச்சனை நூல் அனைவரும் அன்புடன் ஓதி அரும்பயன் எய்தற்கு ஏற்றது.

**வளையாபதி அகவல்**

*[ஆசிரியர்—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். பதிப்பாளர்—இராமச்சந்திரபுரம் அன்பு நிலயத்தார். விலை அணா 12]*

ஐம்பெருங்காப்பியங்களுள் 'வளையாபதி' என்பதும் ஒன்று. அஃது இதுவரையில் பெயரளவிலேயே வழங்கப்பட்டு வந்தது. அந் நூலுள் ஒரு நூறு பாடல்களே கிடைத்தனவென்று ஸ்ரீ பாரதியார் முன்னுரையில் எழுதியுள்ளார். அது முழுதும் கிடைக்காமல் மறைந்தது தமிழரின் தவக்குறை. இவ்வாறு மறைந்த நூல்கள் எத்தனையோ பல. காலகதியைக் கடத்தல் இயலாதன்றோ?

இனி, ஸ்ரீ பாரதியார், "வைசிய புராண"த்திலுள்ள கதைக் குறிப்பையும் அங்கும் இங்குமாகக் காணப்படும் அவ் வளையாபதியின் பாடல்களையும் ஆதாரமாகக்கொண்டு இந்த அகவலை எழுதியிருக்கின்றார். அரிய பல நீதிகளும் உலகியல்களும் செவ்வையாக விளக்கப்பட்டுள. பெருங்காப்பியவியல் இப்புதுக் கவியிலும் இலங்குகின்றது. நீணிலத்துயர்ந்த மாந்தர் வரிசையிலே நின்று விளங்கும் ஸ்ரீ பாரதியார் இன்னும் பலப்பல நூல்களைத் தமிழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் எழுதியுதவவும் அன்புநிலயத்தார் அவற்றை


A Product that is India's own




**யுத்தம்**

என்ற பெயரால், ரசாயனப் பொருள்களின் அளவு **"நேஷனல் இங்க்"** தயாரிப்பதில் குறைக்கப் படவில்லை — ஆகவே

# நேஷனல் இங்க்

**(புளூ பிளாக்)**

உங்களுடைய எல்லா தஸ்தாவேஜிகளையும் நிரந்தரமாக்குகிறது. பிரகாசமான நீல நிறத்தில் எழுதி, கறுப்பாக மாறும் ஸ்திரமான மைகளில் முதன்மையானது. மற்ற நிறங்களிலும், அளவுகளிலும், எல்லா ஸ்டேஷனர்களிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:-

## ஸ்ரீராம் சாக் & இன்டஸ்ட்ரியல் பாக்டரி

பிரம்மன் கோவில் தெரு, கும்பகோணம்.

**நியமிக்கப்படாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை**

அழகிய வடிவில் அச்சியற்றுவித்து அளிக்கவும் அவர்களுக்கு மிக்க ஆதரவைத் தமிழ் மக்கள் அளிக்க வேண்டுகின்றோம்.

**சமூகத்தில் ஸ்திரீகளின் நிலைமை**

[காந்திஜியின் வியாசங்களிலிருந்து தொகுத்து மொழிபெயர்ந்து அகில பாரத சர்க்கா சங்கத்தாரால் வெளியிடப்பட்டது.]

புத்தகம் நன்றாகத்தான் இருக்கிறது. அதிலும் நமது சொந்தக் காகிதத்தில் அச்சிடப்பட்டது. ஆனால் ஸ்ரீ ராஜேந்திர பிரசாத் கடைசியில் குறிப்பு ஒன்று சேர்த்திருக்கிறார்-"இதர சீர்திருத்த வேலைகளைப்போலவே இப்பணியில் ஈடுபடும் தொண்டர்களும் முதலில் தங்கள் குடும்பத்திலேயே இச்சீர்திருத்தங்களை ஆரம்பிக்கவேண்டும்" என்கிறார்! அதுதான் சங்கடம்.

**ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்**

[மஹாமஹோபாத்யாய ம. வி. இராமானுஜாசாரியார் மொழிபெயர்த்தது. கிடைக்குமிடம் ஸ்ரீ மஹாபாரத பிரஸ், கும்பகோணம். விலை ரூ. 3—6—0]

பகவானையும்விட மேம்பட்டவை அவருடைய நாமங்கள். அவைகளிற் சிறந்தன ஸஹஸ்ரநாமம்-மஹாபாரதத்தின் மகுடம். இவற்றிற்கு சங்கரரும் பராசரபட்டரும் பாஷ்யங்கள் அருளியுள்ளார்கள். இவைகளின் சரியான தமிழ் மொழிபெயர்ப்புடன் ஸஹஸ்ரநாமத்தைத் தமிழ் உலகுக்குத் தந்தருளிய ஸ்ரீ மஹாமஹோபாத்யாய மணலூர் வீரவல்லி இராமானுஜாசாரியாருக்குத் தமிழ்உலகம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது. அதை அவர்களுடைய குமாரர் ஸ்ரீ M. R. இராஜகோபாலாசாரியார் 300 பக்கங்களில் மறுபடியும் பதிப்பித்து, ஸாஹித்ய வல்லப ஸ்ரீ சுந்தராசாரியார் முகவுரையுடன் இப்பொழுது வெளியிட்டிருக்கிறார். ஷை இரண்டாம் பதிப்பும் வெகு விரைவிலேயே செலவாகி மறு பதிப்புக்கு அவசியம் சீக்கிரம் ஏற்படும் என்றுஉறுதிகூற ஜ்யோதிஷ ஞானம் சிறிதும் இல்லாதவருக்கும் இயலும்.

**காரும் கதிரும்**

[ரவீந்திரநாத் டாகூர் எழுதியது — குமாரஸ்வாமி வேலுதிபதி மொழிபெயர்த்தோர்—கலைமகள் பிரசுரம் விலை ரூ. 2]

உயர்தர சிறு கதைகள். கதைகள் என்பதைவிட வாழ்க்கைச் சித்திரங்கள் என்று கூறலாம். தேசபக்தி, தியாகம், பரோபகாரம், தாய்மொழியின் மேன்மை தம்பதிகளுள் சந்தேகங்களால் ஏற்படும் விபரீதங்கள், மனைவியின் உள்ளக் கிளர்ச்சிகள், கர்நாடக ஜமீன்தார்களின் அட்டகாசங்கள் இன்னும் பலவித ருசிகர விஷயங்கள் கதைகளில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு சிறப்புடன் விளங்குகின்றது. புத்தகத்தின் அமைப்பும் வேலைப்பாடும் உயர்தரம்.

**ஒருசாண் வயிறு**

[கி. வா. ஜகந்நாதன் எழுதியது-கலைமகள் பிரசுரம் விலை ரூ. 1—4—0]

ஏற்கனவே பல பத்திரிகைகளில் வெளி வந்துள்ள கட்டுரைகளைக் கொண்டது. நல்ல இலக்கிய விருந்து.

**சாது ஜவானி**

[அரிய பிரெஞ்சு ஹாஸ்யக்கதை—சுத்தானந்த பாரதியார் எழுதியது-அன்பு நிலைய வெளியீடு விலை அணா 6]

உயர்தர நகைச்சுவை மிக்க கதை. நயமான நடை. தமிழ் அன்பர்கள் விரும்பும் புத்தகம்.

**பெண் தெய்வம்**

[பி. எம். கண்ணன் எழுதியது—கலைமகள் பிரசுரம் விலை ரூ. 4

இதுவரை வெளிவந்துள்ள எல்லா நவீனங்களைக்காட்டிலும் இந் நவீனம் சிறப்புற்று விளங்குகின்றது. சாதாரண கதைதான். குடும்ப வாழ்க்கையைப்பற்றியதே. எவ்வளவு அழகான சித்திரிப்பு? பலவித குணங்கள் நிறைந்த பெண் தெய்வங்களைக் கதைகளில் பிணைத்திருக்கும் விதம் ருசிகரமாயுள்ளது. குண்டலப்பாட்டியின் பிரதாபத்தை யாரால் மறக்கமுடியும்? காதலின் கனிவும் வதந்தியின் விபரீதமும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. எளிய நடை. சுவாரஸ்யமான கலைதப்போக்கு.

**தமிழ்நாட்டுச் சிறு கதைகள்**

[கி. வா. ஜகந்நாதன் எழுதியது — அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரம் விலை ரூ. 2

ஜகந்நாதன் ஒரு சிறந்த எழுத்தாளர். இந்தச் சிறு கதைகளில் தம் முழுத் திறத்தையும் காட்டியுள்ளார். கதைகள் என்பதைவிடப் பேசும் சித்திரங்களெனச் சொல்லலாம். கதைகளில் ஒருவித விறுவிறுப்புக் காணப்படுகின்றது. உயர்தர சிறு கதைகள் எப்படி இருக்கவேண்டுமென்பதற்கு இப்புத்தகம் நல்ல எடுத்துக்காட்டாகும்.

**தமிழ் மலர்**

[தமிழ் மலர் நிலயம், திருமானூர் P. O. பிரசுரத்தார் விலை ரூ. 1]

சிறு கதைகள்கொண்ட மாத முதல்வெளியீடு. கதைகள் ருசிகரமாயிருக்கின்றன. அடுத்த வெளியீட்டில் பல சிறந்த எழுத்தாளர்களின் திறத்தைக் காணலாமெனத் தெரிகிறது.

**திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீன 24-வது மகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 1933—பத்தாண்டு ஆட்சி மலர்—1943**

மேற்படி ஆதீனத்தாரின் 64-ஆம் வெளியீடாகிய இப்பத்தாண்டு ஆட்சி மலர் வரப்பெற்றோம்.

தருமபுர ஆதீன கர்த்தர் இவ்வரிய பெரிய மலரை மிகவுயரிய முறையில் வெளியிடச் செய்துள்ளார்கள். இவ்வாதீன பரம்பரைச் சிறப்பு, வரலாறு, ஆதீன கர்த்தரவர்களின் ஆட்சிக்குறிப்புகள், சைவ சித்தாந்த ஆராய்ச்சிக்குறிப்புக்கள் முதலியன இதன்கண் நன்கு எழுதப்பட்டுள்ளன.

இவ்வெளியீடு எல்லாப்படியாலும் மிகச் சிறந்ததென்று இதனைக் கண்ணுறுபவர் உணராதிரார்.

இவ்வாதீன கர்த்தரின் புகழ் நிறைந்த இத்தகைய செயல்களை நாம் பாராட்டுகிறோம்.

24013

Edited & Published by N. R. Ramanujam., B. A., & Printed by S. Rangaswami, B. A., at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

# இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்




குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

**ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.**

## தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

**கும்பகோணம்.**

## The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & Sons,

**KUMBAKONAM.**




# T.V.S. முன்னிற்கிறது!



T. V. S. கியாஸ் பிளாண்டுகள் மூன்று வருஷ காலமாக விற்பனையாகி வருகின்றன. இந்தியாவில் இன்று 5,000 க்கு மேல் உபயோகத்திலிருக்கின்றன. இதன் சிறந்த உழைப்பையும், சிக்கனச் செலவையும் கண்டு, கார், டிரக் சொந்தக்காரர்கள் பூரண திருப்தி அடைந்திருக்கின்றனர். தமது வெகுநாளைய அனுபவத்தால்தான் T. V. S. இஞ்சினீயர்கள் தலைசிறந்த கியாஸ் பிளாண்டுகளைத் தயாரிப்பது சாத்தியமாகிறது.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாக காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

**பிரதான அம்சங்கள்**

- **ஸ்டார்டிங் அதிசுலபம்:**—சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.
- **மும்முறை வடிகட்டும் வசதி:**—சுத்தமான கியாஸ். மேற்பார்வை செலவு குறைவு.
- **சமகனம்:**—டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.
- **மிகவும் நம்பிக்கையானது:**—ஆரம்பத்திலிருந்து முடிவுவரை நம்பிக்கையான உழைப்பு.
- **நேர்த்தியான தோற்றம்:**—மற்றெல்லா பிளாண்டுகளையும்விட சிறந்ததோற்றம்.

வாங்குமுன் மாதிரிகளைப் **T·V·S** கியாஸ் பிளாண்ட் பாருங்கள்.

(கார், லாரிகளுக்கு ஏற்றவை)

**T.V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ், லிமிடெட்**

மதுரை & சென்னை.

TVS.K - 7 TM